11 சிறுகதைகள்

# சிறுகதை மஞ்சரி

மாதஇதழ்

ISSUE NO 7- Feb 2021 - £4



வளர்ந்த வளரும்
படைப்பாளிகளுக்கான
களம்

# பங்காளர்கள்



விமல் பரம்
பக்கம் 4



கிருத்திகா ஜயப்பன்
பக்கம் 19



தர்சித் ராகுல்
பக்கம் 36



குலசேகரம் வசீகரன்
பக்கம் 7



ஜே.வி. விஜயசங்கர
பககம் 24



பிரமிளா பிரதீபன்
பக்கம் 37



புலோலியூர் ஆ.
இரத்தினவேலோன்
பக்கம் 12



ALF. சன்பறா
பக்கம் 27



திருமலை சுந்தா
பக்கங்கள் 18,31



சி. சிறீதரன்
பக்கம் 16



குணபேஸ்
பக்கம் 34



நந்தினி சேவியர்
பக்கம் 40

## உள்ளடக்கம்....


**3**

**வாசிப்பனுபவம் 4 –மூனாதானா**

இம்முறை ஶ்ரீரஞ்சனியின் உதிர்தலில்லை இனி சிறுகதைத் தொகுப்பு வாசிப்புக்கு உட்படுத்தப்படுகிறது

**4**

**கலைந்தும் கலையாத – விமல் பரம்**

குடும்ப உறவினை வழமைக்கு மாறாக அணுகப்பட்டுள்ள சிறுகதை.

**7**

**சுப்பண்ணா–குலசிங்கம் வசீகரன்**

சமூகக் கட்டமைப்பில் சனசமூக நிலையங்களின் பங்களிப்பின் முக்கியத்துவமும் இளைஞர்களின் வெளி நாட்டுப் பணக்கவர்ச்சியும் அதனால் ஏற்பட்ட சோம்பலும் உணர்த்தப்பட்டுள்ளது.

**12**

**சிறப்புச்சிறுகதை – புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்**

நிலாக்காலம் - பள்ளிக்காலத்து இன்பங்களை அருமையாகச் சித்தரிக்கும் சிறந்த கதை.

**16**

**புதுமாதிரி – சி. சிறீரங்கன்**

காதலுக்குப் புதிய பரிமாணம் வகுக்கும் சிறுகதை

**19**

**தண்ணீர்க் கிட்டங்கி– கிருத்திகா ஐயப்பன்**

தண்ணீர்ப் பிரச்சினையை வெகு யதார்த்தமாக அணுகப்பட்ட சிறுகதை.

**24**

**உலகமயமாதற் பொறியினில் மூழ்கி – ஜே.வி. விஜயசங்கர்**

நவீன சாதனங்கள் இளையோர் மத்தியில் செய்யும் பாதகங்களைத் தெளிவாகக் கூறும் சிறுகதை.

**27**

**சஹாராவின் கனவு– ALF சன்பறா**

சிறுவர்களின் வாழ்வில் வறுமையின் தாக்கத்தை தனக்கே உரித்தான பாணியில் கூறியுள்ளார்.

**30**

**சிறுகதைபற்றி முகநூலில்....**

**32**

**புறநானூற்றுக்கதைகள்– நா. பார்த்தசாரதி**

இது ஒரு வாழ்வா

**34**

**முரண்பாடு – குணரூபேஸ்**

கிராமப்புறங்களில் யானைகளால் மக்கள்படும் துன்பங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**36**

**ஒரு குவளை தண்ணீர்–தர்சித் (அறிமுகம்)**

சமூகத்தின் பிரச்சினைகளை வித்தியாசமான வகையில் அணுகும் சிறிய சிறுகதை.

**37**

**விமர்சனம் – பிரமிளா பிரதீபன்**

மலையகத்தின் எழுத்தாளர் நடேசன் துரைராஜ் அவர்களின் அப்பாயி சிறுகதைத் தொகுப்புக்கான பார்வை.

**39**

**இருளின் நிழலில் இருவர் – ஹரிஹரன் (அறிமுகம்)**

சமூகப் பிரச்சினையை நுணுக்கமாகப் பார்க்கும் சிறிய சிறுகதை.

**40**

**எழுத்தின் அனுபவங்கள்– நந்தினி சேவியர்**

# என் மனதிலிருந்து.......

ஒரு வருடம் முடிந்து இரண்டாம் வருடத்தில் கால் வைக்கும் போதே மாதம் ஒரு சஞ்சிகை என்ற முடிவுக்கு வந்தமை உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரலாம்.

அது ஆச்சரியமாகவே இருக்கட்டும்.

இன்று உலகம் பலவிதமான பிரச்சினைகளைக் கண்டு நடுங்கிக் கொண்டிருக்கிறது. மனிதனின் முயற்சிகளையெல்லாம் மீறி மரணம் வெற்றிவாகை சூடிக் கொண்டிருக்கிறது. கடவுளை நம்புபவர்களாலும் இதற்கு விளக்கம் தரமுடியவில்லை. கடவுள் இல்லை என்று கூறும் பகுத்தறிவு வாதிகளாலும் விளக்கம் தர முடியவில்லை. இது ஒரு இக்கட்டான கட்டம். மனித உயிர்களுக்கு உத்தரவாதமில்லாத சூழ்நிலை. விஞ்ஞானிகள் உறுதியாக எதனையும் சொல்ல முடியாது தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆலயங்களில் மனிதர்கள் பூசை செய்ய முடியவில்லை. இணையத்தளங்களுக்குக் கோவில் பூசைகளைக் கொண்டு வந்துவிட்டார்கள். ஆலயங்களில் மூலஸ்தானத்திற்குள் இருக்கும் இறைவனைப் படம் எடுக்க முடியாத காலம் போய் அவற்றையெல்லாம் தூக்கி எறிந்து தொலைக்காட்சிப் பெட்டிகள் மூலஸ்தானமாகிய துர்ப்பாக்கியம் எமக்கு ஏற்பட்டுள்ளது. கடவுளைப்பற்றிய சிந்தனைகள் விவாதங்கள் சமூக வலைத்தளங்களில் நடைபெறுவதை அவதானிக்கிறேன். வாதிடலை விடுவோம்.

இங்கே சரி பிழை பற்றிக் கதைக்கும் காலமாகவும் இதைக் கருத முடியாது. எங்களை நாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை இன்று உருவாகியுள்ளது. இதிலிருந்து எப்போ மீளப் போகிறோம் என்பதும் தெரியவில்லை. ஒரு இருட்டை நோக்கிய பயணம் ஆரம்பமாகியுள்ளதென்றே நினைக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு நாட்டு அரசியலும் அதி பாதாளத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. மக்களைப் பற்றிய சிந்தனைகள் எந்த ஒரு தலைவருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. சுயநலம் மனித குலத்தை ஆழமாகக் கைப்பற்றியுள்ளது.

இப்படியான நெருக்குவாரங்களுக்குள்ளும் நாம் இலக்கியம் செய்கிறோம். இலக்கியம் மனித மனத்தைச் சாந்தப்படுத்துகிறது. வாசிப்பதனால் மட்டும்தான் நீங்கள் அமைதியடைய முடியும். எதுவாக இருந்தாலும் வாசியுங்கள். அது உங்களைச் சாந்தப்படுத்தும். இனிமேல் மூன்று மாதங்களுக்கொருமுறை உங்களைச் சந்தித்த நான் மாதமொருமுறை சந்திப்பேன். காத்திருங்கள் நண்பர்களே. வாசிப்பதனால் ஒரு மனிதன் பூரணத்துவம் அடைகிறான்

மு. தயாளன்



**சிறுகதை மஞ்சரி 6 இன் சிறந்த மூன்று சிறுகதைகள்**

1. கதை சொல்லும் கதை - குரு சதாசிவம்
2. கறிவேப்பிலைகள் - அலெக்ஸ் பரந்தாமன்
3. வருக வருக - திக்குவல்லை கமால்

---


**நன்றிகள்..**

பங்காளர்களுக்கும் இச் சிறுகதை மஞ்சிரியை ஒப்பு நேக்கித் தந்த திருமதி ஆர்த்தி துவாரகனுக்கும் அட்டையை வடிவமைத்த என் மகன் ரமணனுக்கும் சித்திரங்களை அழகுற வரைந்த கைலாசநாதருக்கும் அட்டைக்கான படத்தைத் தந்துதவிய குலசேகரன் வசீகரனுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.


---

**1000 பேரை இணைப்போம்......**

தாய்மண்ணில் உள்ள பாடசாலைகளுக்கு மஞ்சரியை அனுப்புவதற்கு புலம்பெயர் மண்ணிலுள்ளவர்கள் பங்கு பெறலாம்.

லண்டன்: ஒரு பாடசாலை ஒருவருடம் **£5.00**

ஐரோப்பா: ஒரு பாடசாலை ஒரு வருடம் **6 Euro**

மற்றைய நாடுகள்: ஒரு பாடசாலை ஒரு வருடம் **$10**

---


அட்டை வடிவமைப்பு ரமணன்

அட்டைப்படம் குலசிங்கம் வசீகரன்





---


**பிரதம ஆசிரியர்:** மு. தயாளன்

**உதவி ஆசிரியர்:** செல்வி த. சரண்யா

**ஆலோசகர்கள்:** வ.இ.இராமநாதன் , Dr P. இராசையா



**தொடர்பு முகவரி:**

Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK

sirukathai1@gmail.com, +447505455811

Sirukathaimanjari 91, barathi street, Trincomalee, Srilanka

sirukathai1@gmail.com, +94765554649


---


**சந்தா விபரம்:**

**Srilanka:** 800Rs/Year

Bank detail : Mrs Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817

**England** £20/Year **Europe:** 50 Euro/ year

**Other countries:** $50/year

Bank details: M. Natkunathayalan, Barclays,

Sort code 20-37-15, A/C Number 60389307

IBAN : GB11BUKB20371560389307

SWIFTBIC BUKBGB22

**விநியோகம்:**

யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் , +94 773788795

மட்டக்களப்பு: மைக்கேல் கொலின் +94 774338878

திருகோணமலை: த. சரண்யா, +94765554649

# வாசிப்பனுபவம் 4

தொகுப்பின் தலைப்பு : உதிர்தலில்லை இனி
ஆசிரியர்: ஸ்ரீரஞ்சனி
*பக்கங்கள் 120*
*கதைகள்: 16*
*வெளியீடு: மகுடம்*
*விலை: 400 ரூபா*

பதினாறு கதைகளையும் வாசித்து முடிக்க இரண்டு நாட்கள் எடுத்தன.

இரண்டு கதைகளைத் தவிர மற்றைய 14 கதைகளும் புலம் பெயர் சூழலில் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளைக் கருப்பொருளாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. இன்றைய இலக்கிய உலகில் புலம் பெயர் இலக்கியங்கள் என்றும் புலத்து இலக்கியங்கள் என்றும் இரு சொற்றொடர்கள் ஆய்வாளர்களால் பாவிக்கப்படுகின்றன. ஸ்ரீரஞ்சனியின் கதைகள் பெரும்பாலும் புலத்து இலக்கியங்கள் என்ற வகைக்குள் அடங்குகின்றதை அவதானிக்கலாம். அழகான துறுதுறுப்பான எழுத்து நடை. தேவையான அளவு வர்ணனைகள். சிறிய வசனங்கள். அதிகம் அலட்டாமல் அரை மணித்தியாலத்திற்குக் குறையாமல் கதைகளை முடித்து விடும் கெட்டிக்காரத்தனம்.

ஒழிவு மறைவின்றி பெண்களின் பலயீனத்தை அவர்கள் எழுத்தாளர்களாக இருந்தாலும் அம்பலப்படுத்துகின்ற வெளிப்படையான எழுத்து முறைமை. எழுத்தாளரின் அனுபவமாக இருக்கலாமோ என்று எண்ணத் தூண்டு கின்ற கதைகள். கதைகளின் தலைப்புகள் மிகச் சிறப்பு. தலைப்புகளைக் கொண்டு கதைகளைத் தீர்மானிப்பது சாத்தியமேயில்லை. சிறுகதைகளுக்கான அடிப்படையே அதுதான். இனிக் கதைகளைப் பார்ப்போம். முதலாவது கதை மனக்கோலம். இந்தக் கதை ஆணின் அடிமனதில் பதிந்து மறைந்துள்ள சீதனம் சம்பந்தமான ஒன்று. சீதனம் வாங்காமல் திருமணம் செய்த ஒருவர் பொருளாதாரப் பிரச்சினைகள் வரும்போது தான் சீதனம் வாங்கி இருக்கலாமே என்று மனைவியைச் சுட்டிக் காட்டித் துன்பப்படுத்தும் நிகழ்வுகள் வருகின்றன. கதையின் முடிவு கூறப்படாது வாசகனது மனதில் அந்த ஆணின் மீது வெறுப்புணர்வு வரச் செய்தமை ஆசிரியரின் அற்புதமான வெற்றி. அடுத்த கதை சுமாரான ஒரு கதை. இதில் ஒரு ஆணின் அங்கலாய்ப்பும் ஒரு பெண்ணின் கடமையும் குறிப்பிடப்பட்டுள்ளது. யதார்த்தம் புரிந்தபோது என்ற கதை ஒரு பேராசிரியரின் அத்துமீறல் பற்றிய கதை. அவருடைய அத்துமீறலையும் அதன் தொடர்ச்சியையும் வெகு லாவகமாகவும் புத்திசாலித்தனமாகவும் ஸ்ரீரஞ்சனி வென்றது அற்புதம். இதே ஸ்ரீரஞ்சனி தன் நாயகியை இறுதிக் கதையான சில்வண்டுவில் ஒரு எழுத்தாளனிடம் தோற்றுப் போகவிட்டமை மனதை நெருடுகிறது.

வெளியீட்டுவிழா என்னும் கதையில் நூல் வெளியீட்டு விழாக்களுக்கு வரும் போலி விமர்சகர்களை அம்பலப்படுத்திய துணிவு ஸ்ரீரஞ்சனியின் மன உரத்தைத் தெளி வாகக் காட்டுகிறது. உதிர்தலில்லை இனி என்ற கதையில் ஸ்ரீரஞ்சனி நிமிர்ந்து தன் தோல்வியை ஜீரணித்துக் கொண்டவிதம் மெய்சிலிர்க்கவைக்கும் ஒருவித பார்வை பாராட்டுதலுக்குரியதே. உள்ளங்கால் புல் அழுகை என்னும் கதையின் இத் தலைப்பு எனக்குப் புரியவேயில்ல. இந்தக் கதையின் களம் மிக முக்கியமான ஒன்று. என் பிள்ளையை நான் என்னவும் செய்யலாம் என்ற மனநிலையை உடைத்தெறிந்த மேற்கு நாட்டு கலாசாரத்தினை வெளிக்கொணரும் கதை. மனசே மனசே. இது குடும்ப உறவுகளின் தரத்தையும் நடைமுறையையும் வெளிக் கொணர்கிறது.

அடுத்தது நெறி முறைப் பிறழ்வா? என்கின்ற கதையும் எங்கள் வாழ்வியல் நிலையை உடைத்தெறியும் மேற்குலகக் கலாசாரத் தாக்கத்தைக் கூறுகிறது. பிள்ளை உருவானால் அது கடவுள் தந்ததென்று கருதிப் பெற்றெடுப்பது எமது வழமை. இங்கு பிள்ளை பிறக்குமுன் டவுண் சிம்ரம் இருக்கா என்று பார்த்து இருந்தால் அந்தப் பிள்ளை அங்கவீனப் பிள்ளையாகப் பிறக்கும் என எதிர்வு கூறிப் பிள்ளையை இல்லாமல் செய்ய அறிவுரை கூறும் சமூகத்துக்குள் ஒரு கணவனும் மனைவியும் படுந்துயரம் சித்தரிக்கப்பட்டுள்ளமை அருமை. அடுத்தது பேசலின்றிக் கிளியொன்று. இந்தக் கதையில் போர்க்காலத்தில் அங்கவீனப்பட்ட ஒரு பெண்ணின் வாழ்வியல் துன்பம் வெளிக் கொணரப்பட்டுள்ளது. இலக்கணங்கள் மாறலாம் என்ற கதையில் ஒரு கணவனையிழந்த பெண்ணின் மறுமணம் பற்றிய சமூகப் பிரச்சினைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. எதுவரை என்னும் கதையில் தவறு செய்யும் ஒரு ஆணின் நிலையைத் தொட்டுக்காட்டும் ஸ்ரீரஞ்சனி பெண்ணை நிமிர்ந்து நோக்கச் செய்துள்ளார். பின்பு உள்ள எதுவரை, இப்போதில்லை, பச்சை மிளகாய், நிகண்டுகள் பிழைபடவே ஆகியவை ஆண் பெண் உறவு நிலைகளில் ஆணின் ஏமாற்றும் குணமும் பெண்ணின் ஏமாறும் குணமும் பின் பெண் தன்னை நிலை நிறுத்தப் போராடுவதுமாகக் கதைகள் நகர்கின்றன. இந்தச் சிறுகதைத் தொகுதி எங்களுக்கு நல்லதொரு பெண் எழுத்தாளரைத் தந்துள்ளது என்று கட்டியம் கூறி நிற்கின்றது.

மூனாதானா

---

**ஏழுத்தாளர்களுக்கு...**

உங்கள் நேரத்தை எழுதுவதில் செலவிடுங்கள். உங்கள் வீடுகளில் உள்ள உங்கள் பிள்ளைகளை எழுதத் தூண்டுங்கள். களம்தரக் காத்திருக்கிறோம். கதைகளை அனுப்பும்போது மறக்காமல் உங்கள் படத்தையும் வங்கி விபரத்தையும் அனுப்புங்கள். உங்களைப் பற்றி நான்கு ஐந்து வரிகளில் சிறு குறிப்பையும் அனுப்புங்கள்

# கலைந்திடும் கலையாத...!

விமல் பரம்



அலுவலகத்தில் இருந்து வந்ததும் அண்ணா தன் அறைக்குள் போய் கதவை மூடிக் கொண்டான். முகத்தில் கவலை தெரிந்தது. ஏதோ நடந்திருக்கிறது. நான் அம்மாவைப் பார்த்தேன். இரவுச் சமையலில் மும்முரமாக இருந்தாள். முடித்து விட்டு சாப்பிடக் கூப்பிட்டபோது அண்ணா வெளியில் வரவில்லை. அம்மா போய் கதவைத் தட்டினாள். ''வெளியில வா. சாப்பிட்ட பிறகு கதைக்கலாம்'' குரலை உயர்த்திக் கூப்பிட்டதும் வெளியே வந்தான். சாப்பிடும் போது ஏதாவது சொல்லி என்னை வம்புக்கு இழுப்பவன் என் பக்கம் திரும்பவேயில்லை. தலை கவிழ்ந்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தவன் நிமிர்ந்து அம்மாவைப் பார்த்தான். இதைக் கவனித்தாள் அம்மா.

''என்னடா திரும்பவும் என்ன பிரச்சனை''

''அம்மா மஞ்சுவின்ர அப்பா அவசரப்படுத்திக் கொண்டிருக்கிறாராம். நான் மஞ்சுவுக்கு என்ன பதில் சொல்லுறது'' என்றான் தயக்கத்துடன்.

''தங்கச்சி இருக்க கலியாணத்துக்கு என்ன அவசரம் உனக்கு. அவளுக்குச் செய்திட்டு நீ செய் எண்டு சொன்னனான்தானே. நானும் அவளுக்குப் பாக்கிறன் ஒண்டும் சரி வருகுதில்லையே''

''எனக்கு அவசரமில்லையம்மா. மஞ்சுவைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்லி மூண்டு வருசமாயிட்டுது. என்ர வயதுதானே அவளுக்கும். இருபத்தொன்பது வயசாச்சு இனிப் பொறுக்கேலாது இரண்டில ஒரு முடிவு சொல்லச் சொல்லி அப்பா கேட்கிறார். நான் என்ன சொல்லுறது எண்டு மஞ்சு அழுகிறாள். நான் என்ன செய்கிறதம்மா'' சொல்லும்போது அண்ணாவின் கண்களும் கலங்கி விட்டது.

''எல்லா விசயத்திலும் அண்ணாவுக்குத்தானே முதலிடம் குடுப்பீங்கள். கலியாணத்தையும் அவனுக்கு முதல் செய்யுங்கோவன். பிறகு என்னாலதான் பிந்தினது எண்டு ஒருத்தரும் வந்து என்னோட கோவிக்கவேண்டாம்'' சொன்னதும் அண்ணா என்னைப் பார்த்து முறைத்தான்.

மூன்று வருடங்களுக்கு முன் அண்ணா தான் விரும்பிய விசயத்தைச் சொல்லித் திருமணம் செய்யச் சம்மதம் கேட்டபோது அம்மா கோபத்தில் கத்திவிட்டாள்.

''இருபத்தாறு வயசில கலியாணத்துக்கு என்னடா அவசரம். அப்பா இல்லாத குடும்பத்தை நீ பாப்பாய் எண்டு படிப்பிச்சு ஆளாக்கிவிட வேலை எடுத்து ஆறு மாசமாகேல கலியாணத்துக்கு நிக்கிறாய். உன்னை விட இரண்டு வயசுதான் குறைய ஜோதிக்கு. நாள் போற வேகத்தில கலியாண வயசு வந்திடும் நான் தனிய என்ன செய்வன். அவளைப் பற்றி யோசிக்க மாட்டியா'' எப்போதும் தனக்குத் துணையாய் இருப்பான் என்று நினைத்திருந்தவளுக்கு திருமணப் பேச்சை அண்ணா எடுத்ததும் பயந்துவிட்டாள். அப்பாவின் முகமே எங்களுக்கு ஞாபகத்தில் இல்லை. பரந்தனில் இரண்டு உழவுயந்திரம் வைத்துச் சொந்த வயலோடு குத்தகைக்கும் எடுத்து வயல் செய்து கொண்டிருந்தவர் போனதும் அம்மாவால் தனியச் சமாளிக்க முடியவில்லை. சொந்த வயல்களைக் குத்தகைக்குக் கொடுத்தாள். உழவுயந்திரங்களை விற்று சேமிப்பில் போட்டு அதிலிருந்து வரும் பணத்தில் எங்களை வளர்த்தாள். குடும்பத்தின் மூத்தமகன் என்று அண்ணாவில் அதிக பாசம். அவன் மனம் கோணாமல் பார்த்துப் பார்த்துச் செய்வாள். சின்னவயதிலிருந்து எந்தப் பொருளை வாங்கினாலும் அவனுக்குத்தான் முதலிடம். அதுக்காக எத்தனைமுறை நான் சண்டை போட்டிருக்கிறேன்.

''என்னம்மா நீங்கள். நான் கலியாணம் செய்தால் அவளைப் பாக்கமாட்டன் எண்டு சொன்னனானே. ஏன் இப்பிடிச் சொல்லிறீங்கள். மஞ்சுவோட பழகத் தொடங்கி நாலு வருச மாச்சு. நல்ல பிள்ளையம்மா வந்தால் என்னோட சேர்ந்து குடும்பத்தைப் பாப்பாள்''

''அந்தப் பிள்ளையைக் குற்றம் சொல்லேல. உனக்குப் பிடிச்சால் எனக்கும் சந்தோசம். இப்ப உனக்கு வயசிருக்கு. தங்கச்சிக்கு செய்து போட்டுச் செய். இதைப் பற்றித் திரும்ப கதைக்காத'' அம்மா கண்டிப்புடன் சொன்னாள்

''அண்ணா சொன்னது கேட்க மாட்டான். முதல் மாட்டன் எண்டு சொன்னாலும் செய்து வைப்பீங்கள் எண்டு அவனுக்குத் தெரியும். நீங்களும் அப்பிடித்தானே. என்ன வாங்கினாலும் செய்தாலும் அவருக்கு குடுத்துட்டு பிறகுதானே எனக்குத் தருவீங்கள். அதுதான் கலியாணத்தையும் எனக்கு முதல் செய்ய நினைக்கிறான்'' இடையில் புகுந்து நானும் என் ஆதங்கத்தைக் காட்டினேன். சின்னவயதில் மனதை நோகவைத்த சம்பவங்கள் அடிமனதில் பதிந்துவிட்டிருந்தது.

''ஸ்கூலுக்குத் தேவையான புத்தகப்பை பேனை பென்சில் எல்லாம் வாங்கி வைச்சிருக்கு. உனக்கு என்ன தேவையோ எடுத்திட்டு மற்றதை ஜோதிட்ட குடு'' அம்மா சொன்னதும் அவனுக்கு முதல் ஓடிப் போய் எனக்குப் பிடித்ததை எடுப்பேன். அதுதான் வேண்டும் என்று அடம்பிடித்து வாங்கி விடுவான். அழுதாலும் திரும்ப எனக்கு கிடைக்காது. சாப்பாட்டு விசயத்திலும் அவனுக்குப் பிடித்த சமையலைத்தான் அம்மா

அதிகமாக சமைப்பாள். அந்த நேரங்களில் எனக்குச் சாப்பாடு வேண்டாம் என்று சண்டை பிடிப்பேன். வளர வளர அன்பு பாசமாய் இருந்தாலும் என் மனதில் இந்த தாக்கம் இருந்து கொண்டேயிருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்த எங்கள் மாமி வீட்டுக்கு வந்திருந்த போது இதைக் கவனித்து விட்டார். “பெடியனைத் தூக்கித் தலையில வைச்சிருக்கிறாய். அவளையும் கவனி. செல்லம் குடுத்து வளர்த்துவிட நாளைக்கு கலியாணமாச்சுதெண்டால் மனிசியின்ர சொல்லுக் கேட்டு போயிடுங்கள். பொம்பிளைப் பிள்ளையள்தான் பொறுமையாய் எங்களைப் பாக்குங்கள்”

“இல்லையக்கா இரண்டையும் கண்ணுக்க வைச்சு வளக்கிறன். இரண்டும் என்னைப் பாக்குங்கள். அவளுக்குக் கலியாணம் செய்து வைச்சிட்டு அவனோடதானே இருக் கப்போறன்” கேட்டுக் கொண்டிருந்த அண்ணா

“அம்மாவுக்கு எந்தக் குறையுமில்லாமல் சந்தோசமாய் நான் வைச்சுப் பாப்பன்”

“பாப்பம்... பாப்பம். நீ பாக்கிறியோ நான் பாக்கிறனோ எண்டு. கலியாணம் கட்டும் வரைக்கும் எல்லாம் சொல்லலாம். பிறகுதானே தெரியும்” அண்ணாவுக்கு சவால் விட்டேன்.

“எந்த நம்பிக்கையில நீ பாப்பன் எண்டு சொல்லுறாய். நீயும் கலியாணம் செய்திட்டால் செய்யிற ஒவ்வொண்டுக்கும் மனுசனைக் கேக்க வேணும். வேண்டாம் எண்டால் என்ன செய்வாய்”

“என்ன நடந்தாலும் நான் அம்மாவைப் பாப்பன். அப்பா இல்லாமல் எங்களோட கஸ்டப்பட்ட அம்மாவை விட்டிட்டுப் போகமாட்டன்” நான் உறுதியாகச் சொன்னேன். அண்ணாதான் குடும்பத்தைப் பார்ப்பானா.. நான் பார்க்கமாட்டேனா.. மனதுக்குள் பொருமினேன். இன்று அண்ணா திரும்பவும் திருமணப் பேச்சை ஆரம்பித்ததும் பழைய நினைவுகள் வந்து மோதி விலகியது. விரும்பியவள் அழுகிறாள் அவளுக்கு இருபத்தொன்பது வயது என்று சொன்னது அம்மாவை யோசிக்க வைத்தது.

“அம்மா மஞ்சுவுக்குப் பிறகு இரண்டு பேர் இருக்கினம். அவையளுக்கும் இருவத்தெழு இருவத்தைஞ்சு வயசம்மா. மஞ்சுவின்ர அப்பா அவசரப்படுறது நியாயம்தானே. இவ்வளவு நாளும் நீங்கள் சொன்னதாலதான் பொறுமையாய் இருந்தவை. ஜோதிக்கு இப்ப ஒண்டும் பொருந்தி வருகுதில்லை. நான் செய்த பிறகு அவளை விடமாட்டனம்மா” அண்ணா சொன்னதைக் கேட்டதும் அவன் நிலைமை எனக்கும் நன்றாக விளங்கியது.

“அண்ணா கலியாணமும் உனக்குத்தான் முதல் நடக்கும். அம்மா ஓமெண்டு சொல்லுவா. அண்ணி முதல் வீட்டுக்கு வரட்டும். பிறகு மற்றதை யோசிக்கலாம்” அண்ணாவின் கையைப் பிடித்து ஆதரவாய்ச் சொன்னதைக் கேட்டு அம்மாவின் முகத்திலும் நிம்மதியைக் கண்டேன். காத்திருந்ததுபோல் சம்மதம் சொன்னதும் அவர்களே பொறுப்பெடுத்து எல்லாவற்றையும் செய்தார்கள். இந்த வருசம் செய்யவேண்டும் என்று அவர்கள் முதலே ஆயத்தமாக இருந்ததினால் நாலுமாதத்தில் நாள் குறித்து திருமணமும் நல்லபடி நடந்து முடிந்தது. அண்ணி வீட்டுக்கு வந்தபின் வீடும் கலகலப்பாகி விட்டது. உறவினர் வீடும் விருந்துமாகச் சுற்றித் திரிந்ததால் ஒருமாதமாகியும் அண்ணியோடு நன்றாகப் பேசி பழக சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. யாழ்ப்பாணத்திலிருக்கும் மாமியும் அவர்களை விருந்துக்கு அழைத்தபோது எங்களையும் வரச்சொன்னதால் நாமும் அவர்களோடு போக ஆயத்தமானோம்.

“அம்மா அங்க என்ர நாலைஞ்சு ப்ரண்ஸ் இருக்கிறாங்கள். நானும் மஞ்சுவும் மோட்டார்சைக்கிளில போனால் ஓடித்திரிய வசதி. நீங்களும் ஜோதியும் ஓட்டோவில வாங்கோ” நாங்கள் ஓட்டோவில் போகப் பின்னால் அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள்.

“வந்து கொஞ்சநாள் எண்டாலும் அண்ணியை எனக்கு பிடிச்சிருக்கு”

“நல்ல பிள்ளைமாதிரித்தான் தெரியுது. அவனைச் சந்தோசமாய் வைச்சிருந்தால் போதும்”

“கலியாணம் செய்தாலும் அண்ணான்ர நினைப்புத்தான்...” சொல்லி முடிக்கவில்லை. படாரென்ற இடிச்சத்தத்தில் அதிர்ந்து போய் நிமிரப் பெரிய வாகனமொன்றின் அடியில் ஓட்டோ சிக்கியிருந்தது. காலை அசைக்கமுடியாத வலியிலும் வேதனையிலும் அம்மாவை இறுக பிடித்தபடி அலறிக் கொண்டிருந்தேன். முழங்காலில் இருந்து வழிந்த இரத்தத்தைப் பார்த்ததும் கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது.

மயக்கமும் விழிப்புமாக இருந்த எனக்கு மங்கலாகத் தெரிந்த ஆட்களின் நடமாட்டமோ கதைப்பதோ எதுவும் மனதில் பதியவில்லை. உடல்மீது பாறாங்கல்லை வைத்து அழுத்தியதுபோல் வலித்தது. உடலை அசைக்கமுடியவில்லை. எவ்வளவு நேரம் அப்படி இருந்தேனோ தெரியவில்லை மீண்டும் கண் விழித்தபோது அழுத கண்களோடு அண்ணா அருகிலிருந்தான். அவனைக்கண்டதும் எனக்கும் அழுகை வந்தது. ஆஸ்பத்திரியில் இருப்பதை உணர்ந்தேன்.அம்மாவையும் அண்ணியையும் தேடினேன். காணவில்லை.

“அம்மாவுக்கு கால்விரல் எலும்புகள் முறிஞ்சிட்டுது. மருந்து கட்டி வேற அறையில படுத்திருக்கிறா. அண்ணி பக்கத்தில இருந்து பார்க்கிறாள்”

“என்னால அசையேலாமல் இருக்கண்ணா எனக்கு அம்மாவைப் பார்க்க வேணும்”

“மூண்டுநாள் மயக்கத்தில இருந்தாய். முழங்கால் அடிபட்டு நசிஞ்சுட்டுது இழுத்துத்தான் எடுத்தோம். ஒப்பிரேசன் செய்தும் காலைச் சரிப்படுத்த முடியேல கழட்டியாச்சுடா. அம்மாவுக்குச் சொல்லேல. சொன்னால் தாங்கமாட்டா. கொஞ்சநாள் பொறுடா. அம்மாவைப் பார்க்கலாம்” இடி விழுந்தது போல்

ஏங்கிப்போனேன். விம்மி வெடித்துக் கொண்டு அழுகை வந்தது. தலை தடவி ஆறுதல் சொன்ன அண்ணாவைப் பார்த்துப் பார்த்து அழுதேன். பகல் முழுவதும் என்னோடு நின்றுவிட்டு அம்மாவிடம் போனான். இரவு அண்ணி வந்து என்னோடு தங்கினாள். வலி தெரியாமலிருக்க மருந்து ஏற்றினாலும் உடல் அசையாமல் படுத்திருப்பது கஸ்டமாக இருந்தது. அண்ணி அருகிலிருந்து தடவிக் கொண்டிருந்தாள். அண்ணா அண்ணியை நினைக்கக் கவலையாகயிருந்தது. காத்திருந்து இணைந்தவர்களை தனித்தனியாக அலைய விடுகிறோமே... இனிமேல் இவர்களுக்குப் பாரமாய் இருக்கப் போகிறேனா... நொண்டியான எனக்கு இனி என்ன வாழ்க்கை இருக்கப் போகிறது...

கலியாணம் பிந்துதே என்று கவலைப்படும் அம்மா இனி எனக்கு கலியாணமே இல்லை என்றால் தாங்குவாளா... அம்மாவை சந்தோசமாய் வைச்சிருக்கவேணும் என்று ஆசைப்பட்டேனே... இனி காலம் முழுவதும் அம்மாவுக்குச் சுமையாக இருக்கப் போகிறேனா.... நினைக்கும் போதெல்லாம் தாங்க முடியாமல் அழுது கொண்டேயிருந்தேன். அண்ணாவும் அண்ணியும் மாறி மாறி எங்களைப் பார்த்துக்கொண்டார்கள். படுக்கையில் இருக்கும் எனக்கு காலையில் முகம் உடம்பு துடைத்து உடை மாற்றி விட்டுத்தான் அண்ணி அம்மாவிடம் போவாள். செய்யும்போது முகம் சுழித்ததில்லை. என்மனம் சங்கடப்படும்.

“உங்களையெல்லாம் கஸ்டப்படுத்திறேனே அண்ணி”

“இந்த நேரத்தில நாங்கள்தான் பாக்கவேணும். கவலையை விட்டுச் சந்தோசமாயிரு”

“அம்மான்ர செல்லம் எண்டு அண்ணாவோட நெடுகவும் சண்டை பிடிப்பன் அண்ணி. இப்ப அவனும் என்னை நோகவிடாமல் தாங்கிறான்”

“அதெல்லாம் ஒரு சண்டையே... வேணுமெண்டு உன்னை கோபப்படுத்துறதுக்கு அவரும் ஏதாவது சொல்லுவார். பிறகு நடந்தது எல்லாத்தையும் வந்து சொல்லிச் சிரிப்பார். உன்னைப்பற்றி நிறையக் கதைப்பார். வாயாடித் தங்கச்சி எண்டு உன்னிலையும் பாசம் அதிகம்தான்” சிரித்தபடி அண்ணி சொன்னதைக் கேட்டதும் ஆசையோடு அவளின் கைகளைப் பிடித்துக் கொண்டேன்.

“ஐயோ அண்ணி இவ்வளவு நாளும் உங்களை மிஸ் பண்ணிட்டமே. அண்ணா சொன்னபோதே சம்மதிச்சிருக்கலாம். என்னாலதானே வராமல் இருந்தீங்கள்”

“இனி உன்னோடதானே இருக்கப் போறன்”

அதே நேரம் அண்ணாவும் வந்தார்.

“அம்மாவை நீ பாக்கமாட்டாய் நான்தான் பாப்பன் எண்டு உன்னோட சண்டை போட்டன். இப்ப நீதான் பக்கத்திலயிருந்து எல்லாம் செய்யிறாய். என்னையும் பாக்கிறாய் அண்ணா”

“மனசைப் போட்டு குழப்பாமல் பேசாமல் படு. காயம் ஆறினதும் வீட்டுக்குப் போகலாம். அம்மாவையும் பாக்கலாம்” இருவரின் ஆறுதல் வார்த்தைகளில் மனம் லேசானது.

இன்று வீட்டுக்குப் போகலாம் என்று சொன்னதும் அண்ணாவும் அண்ணியும் அதற்குரிய ஒழுங்குகளைச் செய்ய போய்விட்டார்கள். திரும்பி வரும்போது அண்ணா மட்டும் வந்தார்.

“அம்மாவையும் விட்டிட்டினம். அம்மாவோட அண்ணியையும் வீட்டில கொண்டு போய்விட்டிட்டு வாறன். வா நாங்களும் போவம்” இரு கைகளாலும் குழந்தையைத் தூக்குவது போல் தூக்கிக் காரில் இருத்திக் கவனத்துடன் ஓட்டிப் போனான்.

“காலம் முழுக்க உனக்கு பாரமாய் இருக்கப் போறன். அம்மாவோட என்னையும் வைச்சுப் பாக்கப் போறாய்” இயலாமையில் தொண்டை அடைத்துக் கொண்டு வந்தது.

“இப்பிடியே உன்னை விடமாட்டன். கொஞ்சக்காலம் போகக் கால் பொருத்தி உன்னை நடக்க வைச்சுக் கலியாணமும் செஞ்சு வைப்பன். கவலைப்படாத”

பதில் சொல்ல நினைத்தபோது வீடு வந்து விட்டது. பரபரப்பு தொற்றிக் கொண்டது. அண்ணி ஒரு சக்கரநாற்காலியைத் தள்ளிக் கொண்டு காருக்கு அருகில் வந்தாள். பார்த்ததும் இனிமேல் என் கால்கள் இதுதான். நான் போக நினைக்கும் இடங்களுக்கு இதுதான் என்னைக் கொண்டு போகும் என்ற நினைப்பு வந்து மனதை அழுத்தியது. வீட்டுக்குள் போனதும் எதிரில் அம்மாவைக் காணவில்லை தேடினேன்.

“அம்மா அறைக்குள்ள உன்னைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறா” கைகளால் சக்கரநாற்காலியை உருட்டிக் கொண்டு விரைந்து அறைக்குள் நுழைந்தேன். அம்மாவைக் கட்டிக் கொண்டு அழவேணும். தாங்கமுடியாத தவிப்போடு

“அம்மா...”


அழைத்தபடி நிமிர்ந்தேன். ஆயிரம் மின்னல் தாக்கியதுபோல் உடல் அதிர்ந்தது. அம்மாவைப் பார்த்து நம்ப முடியாமல் அலறினேன். மீண்டும் மீண்டும் பார்த்தேன்.

மரச்சட்டத்துக்குள் மாலையோடு என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். மறைவுக்கு நேரே விபத்து நடந்த திகதி கண்ணில்பட்டது. அப்படியென்றால்... அன்றே...

கதறலோடு அண்ணாவைப் பார்த்தேன். அதுவரை அடக்கி வைத்த துயரம் வெடித்துச் சிதற என்னை அணைத்தபடி அவனும் கதறத் தொடங்கினான். எங்கள் இருவரையும் அணைத்தபடி அண்ணியும் சேர்ந்து கொண்டாள். மாறாத பார்வையோடு எங்களையே பார்த்துக் கொண்டிருந்தாள் அம்மா.

# சுப்பண்ணா

குலசிங்கம் வசீகரன்



தலையைக் குனிந்தபடி வீதியின் ஓரமாக நடந்து கொண்டிருந்தார் சுப்பண்ணா சட்டை மடித்துக் கட்டிய சாரம் தோளில் துண்டு அவரது கருத்ததேகம் தலை குனிந்து நடந்த போதும் தனது கம்பீரத்தை இழக்கவில்லை. எண்பது வயதைத் தாண்டியும் இன்னும் தனது நிலத்தைத் தானே கொத்தி உழுது பயிர் செய்கிறார். சிறுவனாகத் தனது தந்தையுடன் தோட்டத்துக்குச் செல்லத் தொடங்கிய சுப்பண்ணா அல்லது சுப்பப்பா என்று அழைக்கப்படும் சுப்பிரமணியம் இன்று வரையில் விவசாயத்தை உயிராக நினைத்துத் தனது நிலத்தில் பாடுபட்டு உழைப்பவர். திடகாத்திரமான அவரது உடம்பே அதற்குச் சாட்சி. எதிரில் சைபிக்கிளில் வந்த சுந்தரம் சுப்பண்ணாவுக்கு அருகில் வந்ததும் சைபிக்கிளை நிறுத்தினான்.

“என்ன சுப்பப்பா எங்க பேப்பர் பாத்திட்டு வாறியளோ?” என்றான். நிமிர்ந்து பார்த்த சுப்பண்ணா

“சனசமூக நிலையத்துக்குத் தான் போட்டு வாறண்டாப்பு அது பூட்டிக்கிடக்கு” என்றார்.

“ஓமணையப்பு உவங்கள் பெடியள் பொறுப்பெடுத்த பிறகு ஒழுங்காத் திறக்கிறேல்லை. பேப்பர் போடுறேல்லை எண்டு ஒரே குறையாக் கிடக்கு. விதானையாரோடை கதைச்சுக் கூட்டமொண்டு போடோணும்” என்றான்.

“என்னத்தையோ செய்யுங்கோ. தோட்ட வேலைக்கு இடையில கொஞ்சம் நேரம் அதிலை போயிருந்து பேப்பர் படிச்சா ஊர் உலக நடப்புகள் தெரியும். அதுக்கும் வழியில்லாமப் போச்சு” என்று ஆற்றாமையோடு கூறியபடி சுந்தரத்தைத் தாண்டி நடக்கத் தொடங்கினார் சுப்பண்ணா. சுந்தரம் சுப்பண்ணாவின் மகன் தவத்தின் நண்பன். சைபிக்கிளை மீண்டும் உழக்கத் தொடங்கிய சுந்தரம் நேராக விதனையாரின் அலுவலகத்தை நோக்கிப் போனான். அலுவலகத்தில் கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றிய அறிவித்தல்களை ஒட்டிக்கொண்டிருந்த விதானையார் சுந்தரத்தை கண்டதும்

“என்ன சுந்தரம் மாஸ்க் போடாமல் வாறாய். செய்தியளைக் கேள்விப்பட்டும் இப்படிக் கவலையீனமா இருக்கலாமே?” என்றார்.

‘‘ஊருக்குள்ளை தானே விதானையார். அதுதான் போடாம வந்திட்டன். வெளியிடத்துக்குப் போனாப் போட்டுக்கொண்டு தான் போறனான்’’ என்றபடி உள்ளே நுழைந்தான்.

‘‘ஊருக்கை எல்லாரும் உதைத்தான் சொல்லுறியள். வெளியிலை இருந்து ஆராவது கொரோனாவோட வந்து உங்களுக்குத் தந்திட்டுப் போனாதான் விளங்கும்’’ என்றபடி தனது கதிரையில் போய் உட்கார்ந்தார் விதானையார்.

‘‘அதிருக்கட்டும். எங்கட சனசமூக நிலையத்தைப் பற்றிக் கதைக்கத்தான் வந்தனான். உவங்கள் பெடியள் பொறுப்பெடுத்த நாள்ளயிருந்து ஒழுங்காத் திறக்கிறாங்களில்லை பேப்பறும் போடுறேல்லை. அவங்களிட்ட இருந்து பொறுப்பை மாத்தோணும்” கொஞ்சம் கோபமாகவே கூறினான் சுந்தரம்.

“நானும் கேள்விப்பட்டனான். இண்டைக்கு வெள்ளிக்கிழமை நாளைக்கு சனிக்கிழமை பின்னேரம் அஞ்சு மணிக்குக் கூட்டத்தைக் கூட்டுவம். நான் சொன்னனான் எண்டு ஏலுமான ஆக்களிட்ட கூட்டத்துக்குச் சொல்லிவிடு. நானும் சொல்லுறன். சனசமூக நிலைய அறிவித்தல் பலகையிலையும் நான் எழுதிவிடுறன்”

‘‘சரி விதானையார். நான் சொல்லிவிடுறன். நாளைக்கு ஒரு முடிவு எடுக்கோணும்’’ என்றபடி சயிக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான் சுந்தரம். சுப்பண்ணாவின் தோட்டத்துக்குப் போன சுந்தரம் அங்கு அவரைக் காணாமல் நேராக வீட்டுக்குப் போனான். அங்கும் சுப்பண்ணாவைக் காணாமல் மகன் தவத்திடம் விடயத்தைக் கூறித் தந்தையையும் எப்படியாவது கூட்டத்துக்கு அழைத்து வரும்படி கூறிவிட்டு மற்றவர்களுக்குக் கூட்டத்தைப் பற்றி அறிவிக்கப் புறப்பட்டான். சுப்பண்ணா அதிகம் பேசக்கூடியவர் இல்லை என்றாலும் கூட்டத்துக்கு வந்தால் இந்த விடயத்தில் ஆணித்தரமாகக் கதைப்பார் என்று சுந்தரம் எதிர்பார்த்தான். ஆனாலும் “சுப்பண்ணா கூட்டத்துக்கு வருவது சாத்தியக்குறைவு அவர் பெரிதாக ஆர்வம் காட்ட மாட்டார்” என்று தவம் கூறியது சுந்தரத்தின் மனதைக் குடைந்துகொண்டே இருந்தது.

மறுநாள் மாலை ஐந்து மணியளவில் கூட்டம் காளிகோவில் முன்னால் நின்ற ஆலமரத்தின் கீழ் ஆரம்பமாகியது. கொரோனா அச்சுறுத்தலால் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக ஒவ்வொருவரும் இடைவெளி விட்டு இருக்க வேண்டும் என்பதால் சனசமூகநிலையத்தின் உள்ளே கூட்டத்தை நடத்த முடியவில்லை. விசாலமான ஆலமரத்தின் கீழே போதிய இடைவெளிவிட்டு எல்லோரும் அமர்ந்திருந்தார்கள். விதானையார் தலைமைதாங்கிக் கூட்டத்தை நடத்தினார். சனசமூக நிலைய நிர்வாக சபை உறுப்பினர்களான இளைஞர்கள் ஐவரும் ஒருபுறம் இடைவெளிவிட்டு வரிசையாக அமர்ந்திருந்தார்கள். விதானையார் விடயங்களைப் பேசத் தொடங்கும்போது தோட்டங்களுக்கூடாகச் சுப்பண்ணா நடந்துவருவதைக் கண்டுவிட்டு அவர் வந்து அமரும் வரையில் காத்திருந்து பேசத் தொடங்கினார்.

“இந்த ஊர்ல நூற்றிப்பன்னிரண்டு குடும்பங்கள் இருக்குது. உங்கள் எல்லோருக்குமான ஒரு பொழுதுபோக்கிடமா செய்திகளைப் படிக்க வாசிப்புப் பழக்கத்தை வளர்க்க இந்த சனசமூக நிலையம் இருக்குது. தினசரிப் பத்திரிகைகளை வாங்கிப் போடத் தேவையான காசுக்கும் ஒழுங்கு செய்திருக்கு. ஆனாலும் இப்போ கொஞ்ச நாளா பேப்பர் போடப்படுறேல்லை. சனசமூக நிலையம் திறக்கப்படுறதே இல்லை என்ற முறைப்பாடுகள் எனக்குத் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கு. இதைப்பற்றிக் கதைக்கத்தான் இந்தக் கூட்டம். இந்தப் பிரச்சனை புது நிர்வாகம் பொறுப்பெடுத்த நாள்ல இருந்துதான் தொடங்கினது. அதால நிர்வாகம் இதுக்கு முதல்ல தங்கட விளக்கத்தைச் சொல்லவேணும்” என்று கூறி நிறுத்தினார்.

இளைஞர்கள் குழுவில் இருந்த நிர்வாகசபையின் தலைவர் நிரோசன் தொண்டையைச் செருமிக்கொண்டு

“காலையில பேப்பர் எடுத்துச் சனசமூக நிலையத்துக்குப் போடுறதுக்குச் சனசமூக நிலையத்தைத் திறந்து மூடிறதுக்கு எல்லாம் சேர்த்து நிரந்தரமான ஒழுங்கு ஒண்டை நாங்கள் செய்து கொண்டிருக்கிறம். அது சரிவந்தாப் பிறகு எல்லாம் ஒழுங்கா நடக்கும்” என்று மிகவும் அலட்சியமாகக் கூறினான். உடனே சுந்தரம் “தம்பி வயசுக்கு மூத்தாக்கள் பலர் இங்க இருக்கீனம். நீங்க எழும்பி நிண்டு கதைக்கிறதுதான் முறை. அதோட நீங்க என்ன ஒழுங்கு செய்யப் போறீங்கள் எண்டதைக் கூட்டத்தில சொல்லலாம் தானே?” அலட்சியமான தோரணையில் எழுந்துநின்ற நிரோசன்

“அது வேறையொண்டுமில்லை. வெளிநாட்டிலை இருக்கிற எங்கட ஊரவையிட்டைக் காசு கேட்டிருக்கிறம். அவை மாசாமாசம் ஒழுங்கு முறையிலை ஒருத்தர் மாறி ஒருத்தர் காசனுப்பிவினம். இங்க ஒராளைச் சம்பளத்துக்கு வேலைக்கு வைச்சா அவர் நேரத்துக்கு பேப்பர் போட்டுச் சனசமூகநிலையத்தைத் திறந்து கூட்டித் துடைச்சிட்டுப் பிறகு இரவும் பூட்டிப்போட்டுப் போவார்” என்றான். கூட்டத்தோடு சேராமல் சிறிது விலத்தியே இருந்த சுப்பண்ணா விறுக்கென்று எழுந்து அருகில் கழற்றி விட்டிருந்த செருப்புகளைக் காலில் கொளுவினார். அவர் கூட்டத்தில் இருந்து வெளியேறப் போகிறார் என்பதைப் புரிந்துகொண்ட விதானையார்

“சுப்பண்ண என்ன வெளிக்கிட்டிட்டியள்” தலையை நிமிராத சுப்பண்ணா “இல்லை. நீங்க கதையுங்கோ. நான் இங்க இருக்க அவசியமில்லை”

“ஏன் அப்பிடிச் சொல்லிறியள் சுப்பண்ணை. அவங்கள் சின்னப் பெடியள். நீங்கள் வயதிலை மூத்தனியள். உங்களைப் போல ஆக்கள் நிண்டு சரி பிழையைக் கதைச்சு அவங்களை வழிப்படுத்தோணும்” என்றார்.

சுந்தரமும் எழுந்து சுப்பண்ணாவுக்கு அருகில் சென்று “சுப்பப்பா என்னெண்டாலும் நீங்க நிண்டு உங்கட கருத்தைச் சொல்லுங்கோ. இப்பிடியே விட்டிட்டு போனா இவங்களுக்கு சரி பிழை விளங்காது. ஊரும் பாழாப்போடும்” என்றான். செருப்புகளைக் கழற்றிவிட்டு அமர்ந்துகொண்டார் சுப்பண்ணா. மனசில்லாமல் தங்களது வற்புறுத்தல் காரணமாகவே அமர்ந்தார் என்பது அவர் அமர்ந்த விதத்தில் சுந்தரத்துக்கு விளங்கியது. விதானையார் திரும்பி நிரோசைப் பார்த்து

“ஏன் தம்பி இவ்வளவு நாளும் இருந்த நிர்வாகசபை தங்களுக்குள்ள ஆள் மாறி ஆள் ஒழுங்கா பேப்பர் எடுத்துப் போட்டுச் சனசமூகநிலையத்தைத் திறந்து மூடினவைதானே. நீங்க ஏன் அப்படிச் செய்யாம வேலைக்கு ஆள்வைக்க நினைக்கிறீங்க?” என்று கேட்டார். நிரோசுக்கு அருகில் இருந்த நிர்வாகசபை செயலாளரான கபிலன் வேகமாக எழுந்து “இப்ப இந்த ஒழுங்கில உங்களுக்கு என்ன பிரச்சனை. உங்கட காசில்லைதானே?” என்றான். அவனது பேச்சு பலரையும் கோபப்படுத்தியது. பலரும் ஒரே நேரத்தில் நிர்வாக சபையை நோக்கிக் கைகளைக்காட்டித் தமது எதிர்ப்பைக் கூற அங்கே பெரிய இரைச்சல் எழுந்தது. விதானையார் குரலை உயர்த்தி யாரையும் பேசவேண்டாம் என்று கூறி கூட்டத்தைக் கட்டுப்படுத்தினர். சுப்பண்ணா மெதுவாக எழுந்து நின்றார்.

“இந்தக் கதையளைக் கேக்க வேண்டாம் எண்டு தான் நான் முதலே வெளிக்கிட்டனான். விதானையார் தான் நிப்பாட்டிப் போட்டார். நான் போறன் ஆனா சில விசயங்கள் சொல்லிப் போட்டுப் போகலாம் எண்டு நினைக்கிறன். நீங்கள் அனுமதிச்சால்” என்று கூறி விதனையாரை பார்த்தார்.

“சுப்பண்ணை இந்த ஊரிலையே நீங்கள் தான் வயசாளி. உங்கட வயசுக்கு எவ்வளவு விசயங்களை பாத்திருப்பீங்கள். இந்தப் பெடியலிண்டை வயசு உங்கட அனுபவத்தில் கால்வாசி வரும். நீங்கள் சொல்லுங்கோ” என்றார். எல்லாரையும் ஒருமுறை கவனமாகப் பார்த்தவர் தனது பார்வையை நிர்வாகசபை உறுப்பினர்கள் மேல் நிறுத்தினார்.

“தம்பியவை உங்களுக்கு என்ர பேரப்பிள்ளையளின்ரை வாயசைவிட ஐஞ்சு ஆறு வயசு கூட இருக்கும். உங்களோட எனக்குத் தனிப்பட எந்தக் கோபமும் இல்லை. நான் சொல்லுற விசயங்களை எடுத்துக் கொள்ளிறது உங்கட விருப்பம். உங்கட அப்பாமார் இங்க கூட்டத்துக்கை இருந்தும் தாங்கள் ஒண்டும் சொல்லாமல் இருக்க நான் சொல்லுறன் எண்டு அவையும் என்னில கோவப்படலாம்.நான் வயசுக்கு மூத்தவன் என்ற வகையிலையும் இது பொது விசயம் எண்டதாலையும் தான் கதைக்கிறேன்” கூட்டத்துக்குள் இருந்த கபிலனின் தந்தை எழுந்து

“சுப்பண்ணை நீ சொல்லண்ணை உவங்களுக்கு நாங்கள் சொன்னா கேக்காங்கள். நீ சொல்லு. அப்பவாவது உறைக்கட்டும். அதுக்கு முதல்ல இவங்கள் என்ர ஒரு கேள்விக்கு பதில் சொல்லட்டுமண்ணை” என்றவர் திரும்பி கபிலனைப் பார்த்து

“டேய் நீங்கள் சும்மாதானேடா இருக்கிறீங்க. உங்களுக்கு ஒரு பொறுப்பு வரட்டும் எண்டு தானே நிர்வாகத்தை உங்களிட்டத் தந்தனாங்கள். நீங்கள் வெளிநாட்டிலை இருந்து காசு எடுப்பிச்சு சம்பளத்துக்கு வேலைக்கு ஆள் வைக்க நினைக்கிறியளே வெக்கமா இல்லையே?” என்று

உணர்ச்சிவசப்பட்டுக் கத்தினார். குறுக்கிட்ட விதானையார் "ஐயா அது தான் சுப்பண்ணை கதைக்கிறன் எண்டு சொல்லிறார் எல்லோ நீங்க இருங்கோ அவர் கதைக்கட்டும்" எனக் கபிலனின் தந்தையை அமரச்செய்தார். சுப்பண்ணை மீண்டும் நிர்வாகசபை இளைஞர்களை நோக்கிப் பேசத் தொடங்கினார்.

"தம்பியவை நீங்கள் ஒவ்வொருவரும் என்ன செய்யிறீங்கள்? ஏதாவது தொழில் இருக்கா? உங்களுக்கும் வருமானம் வருகிதா? எண்ட கேள்விகளைக் கேட்டு உங்களைச் சங்கடப்படுத்த விரும்பேல்லை. நான் பத்தாம் வகுப்பு வரைக்கும் தான் படிச்சனான். என்ர வாழ்க்கை தோட்டத்திலையே கழிஞ்சிட்டுது. நான் படிக்கேல்லை எண்டு தெரிஞ்சு ஐயா என்னோட கோவிக்கேல்லை. எனக்கு விவசாயத்தில தான் ஈடுபாடு எண்டதைத் தெரிஞ்சு கொண்டு விவசாய நுணுக்கங்களைச் சொல்லித்தந்தார். அதேநேரம் ரெண்டு விசயங்களை அடிக்கடி சொல்லுவார். ஒண்டு விவசாயத்தில மருந்துகளை பாவிக்கிறதைப் பற்றி அந்தக் காலத்தில தான் உந்த அசேதன மருந்துகள் அறிமுகமாகிக் கொண்டு வந்தது. அவர் அதைத் தொடவே இல்லை. எனக்கும் சொல்வார் 'சுப்பு ஒருநாளும் உந்த அசேதன ஊகிக்களையோ பூச்சிக்கொல்லிகளையோ தோட்டத்துக்குள்ளையே எடுத்திடாதை இதெல்லாம் நிலத்தை சாகடிக்கிறது மட்டுமில்லாமல் மனிசரையும் நோயாளியாகிப் போடும் எண்டு" பெருமூச்சொன்றை விட்டுவிட்டு மீண்டும் தொடர்ந்தார்.

"அவர் சொன்ன மற்ற விசயம் பேப்பர் படிக்கிறதைப் பற்றி சுப்பு நீ அதிகம் படிக்கேல்லை அதாலை நீ வாழ்க்கையில மற்றவை மதிக்கிறமாதிரி வரவேண்டும் என்றால் கடினமா உழைக்கோணும். உனக்குப் பிடிச்ச விவசாயத்தில் முழுசா உன்னை ஈடுபடுத்து. அர்ப்பணிப்போடையும் விருப்பத்தோடையும் செய்யிற எந்த விசயமும் நிச்சயம் வெற்றியளிக்கும். அதோட தவறாமல் பேப்பர் படி அது உனக்கு உலக அறிவையும் பிந்திய விடயங்களை நீ அறிஞ்சுகொள்ளவும் உதவியாக இருக்கும். அப்படி நீ படிச்சு வந்தா உன்னை யாரும் ஏமாற்றவோ குறைவா நினைக்கவோ முடியாது" என்று இத்தனை வயது வரைக்கும் நான் விடாம பேப்பர் வாசிச்சிட்டு வந்தன். இப்ப ஒரு கிழமையா அயலட்டையிலை வாங்கிப் படிக்கிறன். இடம்பெயர்வு நேரம் பேப்பர் அடிக்க பேப்பர் இல்லாமல் பைல் மட்டையிலை கோப்பி ஒற்றையிலை பேப்பர் அச்சடிச்சு வரேக்கை கூட தேடிப்பிடிச்சு படிச்சிருக்கிறன். நீங்க நினைக்கலாம். இப்ப இதெல்லாம் இங்க ஏன் நான் சொல்லிறனெண்டு பேப்பர் படிக்கிறது வாசிக்கிறது இதுகளிண்ட முக்கியத்துவத்தை நீங்கள் உணரோனும் எண்டதுக்காக தான் நான் இவ்வளவும் கதைச்சனான்" என்று கூறி நிறுத்தினார். காற்றில் அசைந்த ஆலமிலைகள் எழுப்பிய சிறு ஒலியை தவிரவேறு எந்தச் சத்தமுமில்லை. அனைவரும் சுப்பண்ணாவையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஊரில் அவர் வயதுக்கு மூத்தவராக இருந்தாலும் யாருடனும் அதிகம் பேசி பொழுதை போக்காமல் தோட்டவேலை உண்டு தன் வீடு உண்டு என்று வாழ்ந்து வந்தவர். தோட்டம் வீடு தவிர அவரைக் காணக்கூடிய மற்றொரு இடம் சனசமூக நிலையம். அப்படிப்பட்டவர் இன்று இவ்வளவு பேசியது எல்லோரையும் வாயடைத்துப் போக வைத்திருந்தது.

"பேப்பரை வாசி எண்டு ஐயா எனக்குச் சொல்லேக்கை அவர் சொன்ன இன்னுமோர் முக்கியமான விசயம் படிப்பு இல்லை எண்டாலும் தொடர்ந்து வாசிச்சு வந்தாயெண்டா உன்னால பலரும் இருக்கிற ஒரு இடத்தில பலரும் பல விடயங்கள் கதைக்கேக்கை நீ ஒன்றும் புரியாமல் இருக்கவேண்டி இருக்காது. மற்றவை கதைக்கிற விசயங்கள் எதுவாக இருந்தாலும் உன்னால அதைப் புரிஞ்சு கொள்ளக் கூடியதாக இருக்கும். அந்த வகையிலை நான் எங்கையும் யாரோடையும் கதைக்கதக்க தையிரியத்தைக் கொடுத்தது என்ர வாசிப்பு தான்"

நிரோ எழுந்து நின்றதும் சுப்பண்ணா பேசுவதை நிறுத்தினார். அனைவரது பார்வையும் சுப்பண்ணாவிடமிருந்து நிரோ பக்கம் திரும்பியது.

"பெரியவரே எங்களுக்கும் வாசிப்பை பத்தித் தெரியும் அதுக்குத் தான் நாங்க ஒழுங்கு செய்யிறம் எண்டு சொல்லிறமெல்லோ. ஒரு கிழமை பத்து நாள் பொறுக்கேலாதோ?" என்றான் நிரோ.
"தம்பி நீங்கள் செய்ய நினைக்கிறது சரி ஆனா எப்பிடி செய்யிறியள் எண்டதுக்கு ஒரு முறை இருக்கெல்லோ. ஏற்கனவே பேப்பருக்குரிய காசை தாறமெண்டு ஊரிலையே ஒவ்வொருத்தர் பொறுப்பெடுத்திருக்கீனம். ஏனெண்டா பேப்பர் காசு குடுத்து வாங்கோணும். ஆனா சனசமூக நிலையத்தை திறந்து மூடிறத்துக்கும் பேப்பரைக் கடையில இருந்து கொண்டந்து போடவும் சம்பளத்துக்கு ஆள்பிடிக்கோணுமே? அதுவும் வெளிநாட்டிலை இருந்து காசு வாங்கி?" என்றவர் விதனையாரைப் பார்த்து "விதானையார் பேப்பர் எடுத்துப் போடுறதையும் சனசமூக நிலையத்தை திறந்து மூடுறதையும் நானும் என்ர மகனும் பொறுப்பெடுக்கிறம். சம்மதமெண்டா தெரியப்படுத்துங்கோ நான் வெளிக்கிடுறன்" என்றபடி பதிலை எதிர்பார்க்காமல் தோட்டப்பக்கமாக நடக்கத் தொடங்கினார். நிர்வாகசபை உறுப்பினர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டதைத் தவிரச் சிறிது நேரம் வேறு எந்தச் சத்தமும் அங்கு எழவில்லை. தன்னை சுதாரித்துக்கொண்ட சுந்தரம் எழுந்து நின்று விதானையாரை பார்த்து

"சுப்பப்பா இவ்வளவு கதைச்சு நான் கண்டதில்லை. சில விசயங்கள் சொன்னா புரியாது. செய்து காட்டினா தான் புரியும். சுப்பப்பா வேலையில்லாமல் இந்த விசயத்தைத் தன்ர தலையில போடேல்ல. நாங்கள் எல்லாம் இருக்க ஏன் யாரிட்டையோ கையேந்த வேண்டும் எண்டு யோசிக்கிறார். அது சரிதானே? நிர்வாக சபையும் வேண்டாம் ஒண்டும் வேண்டாம். சுப்பப்பாட்டையே பொறுப்பை குடுப்பம். நானும் அவருக்கு ஒத்தாசையா இருப்பன்" என்றான். நிரோ எழுந்து "அண்ணை வெளிநாட்டிலை இருந்து வாற காசை ஏன் வேண்டாம் எண்டு சொல்லோணும். அவையள் எங்கட சொந்தங்களும் அயலட்டையும் தானே. நாட்டுச் சூழலால் இப்ப வெளிநாட்டிலை இருக்கீனம். ஊருக்கு ஒண்டெண்டா உடனே செய்ய துடிக்கீனம். நீங்கள் ஏன் அதைத் தடுக்க பாக்கிறீங்க" என்றான்.

“தம்பியவை நீங்க ஊருக்கு நல்லது செய்யேறமெண்டு உங்களை நீங்களே சோம்பேறியள் ஆகிறதுமில்லாமல் வெளிநாட்டிலை கஸ்டப்பட்டு உழைச்சு அனுப்பிற எங்கட சனத்திண்ட காசை இப்பிடி ஒண்டுமில்லாததுக்கு செலவழிக்க பாக்கிறீங்க. எங்கட சனம் அங்க சும்மா காலுக்கு மேல கால் போட்டுக் கொண்டிருந்து காசு உழைக்கினமெண்டு நினைச்சியளே? குடும்பத்தோட சேர்ந்திருந்து சாப்பிடக் கூட நேரமில்லாம இரவுபகல் எண்டில்லாம பனிக்குளிரிலை நிண்டு வேலை செய்து தான் காசனுப்புதுகள். அதை ஒழுங்கா ஒரு நல்ல விசயத்துக்குக் காலத்துக்கும் ஊருக்கு பயன்படுற மாதிரியான விசயத்துக்குப் பயன்படுத்தினா அதிலை ஒரு அர்த்தமிருக்கும். காசனுப்பிறதுகளுக்கும் மனசுக்குச் சந்தோசமா இருக்கும் அதை விட்டிட்டு ஆளும் பேருமா நாங்கள் செய்து முடிக்கக் கூடிய வேலைக்கு கூலிக்கு ஆள்வச்சு அதுக்குச் செலவழிக்கப்போறன் எண்டு சொல்லுறியளே அதுதான் ஏற்றுக்கொள்ள ஏலாதெண்டு சொல்லிறம்”

பலரும் பலவிதமாக நிர்வாகசபையை நோக்கியும் சுந்தரத்தை நோக்கியும் குரலெழுப்ப அந்த இடமே இரைச்சல் மிகுந்த இடமாக மாறியது. அதுவரை ஊரவர்களை பேசவிட்டு பார்த்துக்கொண்டிருந்த விதானையார் தான் தலையிட வேண்டிய நேரம் வந்துவிட்டதை உணர்ந்து எழுந்து நின்று கைகள் இரண்டையும் உயர்த்தி சத்தமாக "அமைதி” என்று கத்தினார். அனைவரும் அமைதியானார்கள்.

“நிர்வாகசபை தங்கட நிலைப்பாட்டைச் சொல்லீட்டினம். சுப்பண்ணை பல விசயம் விளக்கமாக் கதைச்சார். பிறகு சுந்தரம் கதைச்சது. இதுகளைத் தாண்டி யாராவது ஏதாவது சொல்லோணும் ஏண்டா கையை உயத்துங்கோ. பிறகு ஒவ்வொருவரா சொல்லுங்கோ. எல்லாரும் ஒரே நேரம் கதைச்சா ஒண்டும் விளங்காது. ஒரு தீர்வும் வராது” என்றார். முதலாவதாகக் கபிலனின் தந்தை கையை உயர்த்தினார். இன்னும் ஒன்றோ இரண்டு கைகள் உயர்ந்தன. விதானையார் கபிலரின் தந்தையை சைகையால் பேசும்படி கூறினார்.அவரும் எழுந்து நின்று

“என்ர மகன் நிர்வாகசபையில இருக்கிறான். அவனும் அவன்ர கூட்டாளியலும் நிர்வாகத்தைப் பொறுப்பெடுக்கேக்கை நானும் நினைச்சன் இவனுக்கு ஒரு பொறுப்புணர்ச்சி வரும் நல்ல விசயங்களைப் பழகுவான் ஊரை சனத்தை பற்றின அக்கறை வருமெண்டு ஆனா இப்ப உவை கதைக்கிறதை பார்த்தா வழியில் தேங்காயை எடுத்துத் தெருவில் பிள்ளையாருக்கு அடிக்கத்தான் பழகுங்கள் போல கிடக்கு. தாங்கள் தங்களுக்கு ஒரு வழியைக் காணக் கிடைக்கேல்லை. தாங்கள் உழைச்சு அந்தக் காசில சம்பளம் குடுத்து ஊர்வேலையைச் செய்ய நினைச்சாலும் பரவாயில்லை. உவனை நிர்வாகத்திலை இருந்து நிப்பாட்டுங்கோ. சுப்பண்ணை சொன்னது முழுக்கச் சரி. நானும் அவருக்கு ஒத்தாசையா இருப்பன்” என்று கூறிவிட்டு மகனை முறைத்துப் பார்த்தபடி அமர்ந்தார். கபிலனின் தந்தை பேசிய பிறகு யாரும் பேச முன்வரவில்லை. முன்னர் பேசியவர்களும் “நிர்வாகத்தில் இருக்கும் ஒரு இளைஞனின் தந்தை இவ்வளவு ஆவேசமாகவும் பேசிய பின்னர் தாங்கள் பேச எதுவும் இல்லை என்று பேசாமல் இருந்துவிட்டார்கள். விதானையார் மீண்டும் ஒருமுறை

“வேறு யாராவது ஏதாவது கூற விரும்புகிறீர்களா?” என கேட்டுக்கொண்டார். ஏதோ சொல்ல எழுந்த நிர்வாகசபை தலைவர் நிரோசனையும் எதுவும் பேசவேண்டாம் எனக் கூறி அமர செய்துவிட்டுத் தான் பேசத் தொடங்கினார். “பொதுவா ஊர்ல வயசுக்கு மூத்தவையக் கொண்ட சபை ஒண்டு இருக்கும். அந்தச் சபை தான் இந்த மாதிரியான விசயங்களைக் கையாளும் யுத்தத்துக்குப் பிறகு இதுவரை காலமும் அப்படி ஒரு சபைக்கு இந்த ஊர்ல அவசியம் இல்லாமல் போட்டுது. இந்த ஊரிலையும் அப்படி ஒரு சபை இருக்கவேணும் எண்ட அவசியத்தை இண்டைய நிலைமை எடுத்துக்காட்டுது. நான் விதானையார் எண்டதாலை முழு ஊருக்கும் நான் பொறுப்புக்கூற முடியாது தானே. விரைவில் இன்னுமொரு கூட்டத்தை போட்டு மூத்தோர் சபையை அமைப்பம்”

சிறு இடைவெளி விட்டு மேலும் தொடர்ந்தார்.

“இப்ப இந்த சனசமூக நிலைய விசயத்துக்கு வாறன். புதுசா தெரிவுசெய்த நிர்வாக சபை போற வழியை பற்றி தெளிவா தெரியிது. அவங்களை அப்பிடியே போகவும் விடேலாது. கைகழுவியும் விடேலாது. அவங்கள் எங்கட பெடியள்.நாங்கள் தான் வழிகாட்டோணும். அதாலை பெடியலை ஒரு இளைஞர் அமைப்பா வைச்சுக்கொண்டு மூத்தோர் சபையோட இணைஞ்சு செயற்படிறது எல்லாருக்கும் நல்லது. சுப்பண்ணை சுந்தரம் மற்றது கபிலன்ர அப்பா சொன்ன கருத்துக்களோட நானும் ஒத்துப்போறன். நாங்களே செய்யவேண்டிய வேலைக்கு ஏன் யாரையும் எதிர்பார்க்கோணும். அவை உதவி செய்ய விரும்பிறதும் ஊரிலை அக்கறையா இருக்கிறதும் தப்பில்லை. அப்படியான உதவிகளை நிலையான விடயங்களுக்கு பயன்படுத்தலாம். பள்ளிக்கூடத்துக்கு வசதியலை செய்யலாம். சனசமூக நிலையத்தையே ஒரு நூலகமா தரமுயர்த்த வேலை செய்யலாம். அதுகளைப் பற்றி மூத்தோர் சபை அமைச்ச பிறகு பேசுவம். இப்போதைக்கு சுப்பண்ணாவின்ர பொறுப்பிலே பேப்பர் எடுக்கிறதையும் சனசமூக நிலையத்தை திறக்கிற பூட்டிற வேலையளை பொறுப்புக் குடுக்கலாம். சுந்தரமும் கபிலன்ர அப்பாவும் சுப்பண்ணைக்கு ஒத்தாசையா இருக்கலாம். இது என்ர ஆலோசனை. நான் உங்களுக்குக் கட்டளையிட ஏலாது. எல்லாருக்கும் சம்மதம் எண்டாச் சொல்லுங்கோ” என்று கூறி நிறுத்தினார். நிர்வாகசபை இளைஞர்கள் தங்களுக்குள் மாறி மாறிக் கதைத்துக் கொண்டார்கள். பின்னர் நிரோ மட்டும் எழுந்து

“விதானையார் சொன்ன விசயங்களுக்கு நாங்கள் சம்மதிக்கிறம். இளைஞர் அணியா நாங்கள் இருந்து மூத்தோர் சபையின்ர வழிகாட்டல்ல நடக்கிறம்” என்று கூறிவிட்டு அமர்ந்தான்.


“பிறகென்ன எல்லாம் நல்லபடி முடிஞ்சிது விரைவில முதியோர் சபை அமைக்கிறதுக்கான கூட்டத்தை கூட்டுவம்” என்று கூறியபடி விதானையார் எழுத்து தான் வந்த சையிக்கிளை எடுக்க சனசமூக நிலையத்தை நோக்கி நடக்கத் தொடங்கினார். சுந்தரமும் அவரோடு சேர்ந்துகொண்டான். கூட்டம் மெதுவாக கலையத்தொடங்கியது. மறு நாள் அதிகாலை சுப்பண்ணாவை தேடிக்கொண்டு அவர் வீட்டுக்கு சுந்தரம் சென்றான். அங்கு அவரைக் காணவில்லை. முற்றம் கூட்டிக்கொண்டிருந்த தவம் “கூட்டத்தில கடைசியில எடுத்த முடிவைப்பற்றி இரவு ஐயாட்ட

சொன்னனான். கேட்டுக் கொண்டிருந்தவர் ஒண்டும் பேசேல்லை. உவன் நிரோ சனசமூக நிலைய திறப்பை கொண்டந்து குடுத்தவன். பேசாம வாங்கி வச்சவர் காத்தாலையே வெளிக்கிட்டிட்டார். பேரனையும் கூட்டிக் கொண்டு போட்டார் அநேகமா சனசமூகநிலையத்துக்கு தான் போயிருப்பார்" என்றான்.

சையிக்கிளை உழக்கிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்ட சுந்தரம் சுப்பண்ணாவின் தோட்டக்காணிக்குப் போனான். அங்கு யாரையும் காணவில்லை. அப்படியே சையிக்கிளை திருப்பிக்கொண்டு சனசமூக நிலையத்துக்கு போனான். சனசமூக நிலைய முற்றம் சீராகக் கூட்டப்பட்டிருந்தது. சிறு பாத்திரத்தில் தண்ணியள்ளிவந்து தெளித்துக்கொண்டிருந்தான் சுப்பண்ணாவின் பேரன். பின்புறமிருந்து விளக்குமாற்றோடு வந்த சுப்பண்ணா சுந்தரத்தைக் கண்டதும்

"கடைக்கு 5.30 க்கு பேப்பர் வந்திடும். ஆறுமணிக்கு சனசமூக நிலையத்திலை பேப்பர் இருக்கோணும். ஓடு ஓடிப்போய் எல்லாப் பேப்பேரையும் வாங்கிக்கொணந்து போடு" என்று கூறியபடி மறுபுறம் கூட்டப்போனார்.

"சரி சுப்பப்பா" என்று சொன்னபடி உற்சாகமாகச் சையிக்கிளை உழக்கத் தொடங்கினான் சுந்தரம். அதிகாலைக் காற்று முகத்தைக் குளிர்ச்சியாக வருடிச் சென்றது. சூரியன் கிழக்குத்திசையிலிருந்து மேலெழுந்துகொண்டிருந்தான்.



## செ. கணேசலிங்கன்

கலை, இலக்கியம், நாடகம், வெகுசன ஊடகம், தீண்டாமை, சுரண்டல், வன்முறை, சித்திரவதை, சிறுவர் மீதான கொடுமை, பெண்கள் மீதான கொடுமை, ஆதிக்கம், தேசிய இனப் பிரச்சினையால் தமிழ் மக்கள் குடும்ப வாழ்விலும், சமூக வாழ்விலும் தோன்றியுள்ள அவலங்கள். தொழில்மயமாக்கலும், நகரமயமாக்கலும், நவீனமயமாக்கலும் தோற்றுவித்துள்ள மாறுதல்களும், பிரச்சினைகளும், மனித பலவீனங்களை வளர்த்துச் சுரண்டும் சந்தைப் பொருளாதார வியாபாரங்கள். நுகர்வுப் பண்பாட்டின் மனித விரோதப் போக்கு, பன்னாட்டு நிறுவனங்களின் மேலாதிக்கம், நவீன ஏகாதிபத்தியச் சுரண்டலின் பன்முகப் பரிமாணங்கள், உலகமயமாதல் என்ற பெயரில் நடைபெறும் அராஜகம். இப்படியான பல்வேறு விடயங்கள் பற்றிய விளக்கங்களாகவும், விமர்சனங்களாகவும் செ.கணேசலிங்கன் எழுத்துக்கள் அமைந்துள்ளன. மனிதனைப் பிணைத்திருக்கின்ற அடிமைச் சங்கிலியைத் தகர்த்தெறிவதற்கான எழுச்சி நசுக்கப்பட்டு, மூச்சுத் திணறிக் கொண்டிருக்கின்ற மக்களுக்கு, அவர்களது விடுதலைக்கான போராட்ட உணர்வைத் தட்டி எழுப்பி உத்வேகப்படுத்தும் பண்பு மானிட நேயப் படைப்பாளிகளிடமுண்டு. சமூக, பொருளாதார அரசியல் விடுதலைக்கான போராட்டத்தை ஒரு பெரும் சக்தியாக திரட்டுவதற்கு மக்களுக்கு உத்வேகத்தைக் கொடுப்பவனே மானிடநேயப் படைப்பாளி. தோல்வியிலும், அடிமை மனப்பான்மையிலும் நீண்டகாலமாகப் பீடிக்கப்பட்டு, விரக்கியடைந்த நிலையிலுள்ள மக்களின் ஆத்மாவைத் தட்டி எழுப்பி விழிப்படையச் செய்து போராட்டப் பாதையில் அவர்களை இட்டுச் செல்லும் வல்லமை படைத்தவனே மனிதநேயப் படைப்பாளி. மேலும், மனித குலத்திற்கு விசுவாசமாக நடப்பது, மக்களுக்கு உண்மையை எடுத்துக் கூறுவது, கசப்பான உண்மையானாலும் அதனைத் துணிவுடன் கூறுவது, மனிதர்களின் உள்ளத்திலே எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையை ஊட்டி அதனை உறுதிப்படுத்துவது, அதைக் கட்டுவதிலே அவர்களுக்குள்ள ஆத்மசக்தியைப் பலப்படுத்துவது, உலக சமாதானத்துக்கும், சாந்திக்குமாகப் போராடுவது, எங்கெல்லாம் சமாதானத்துக்கான குரல் ஒலிக்குமோ அங்கெல்லாம் சமாதான வீரர்களை அந்தரங்க சுத்தியுடன் ஆதரிப்பது. முன்னேற்றத்திற்கான உண்மையான நேர்மையான முயற்சியில் மக்களை ஒன்று திரட்டுவது இதுதான் மானிடநேயனின் கடமை என்று டான் நதி அமைதியாகப் பாய்கின்றது என்ற உலகப் புகழ்பெற்ற நாவலைப் படைத்த மிகையில் ஷொல்கோ கூறியதை உள்ளத்தில் ஏற்று இலக்கியம் படைத்தவர் செ.கணேசலிங்கன்.

பேராசிரியர் தில்லைநாதன் நன்றி : கீற்று

## திருக்கோவில் கவியுவன்

தொண்ணூறுகளில் எழுதத் தொடங்கியவர். இயற்பெயர் இராசையா யுவேந்திரா. நெசவுத் தொழில் பொறியியலாளர். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர். பெரும்பாலான கதைகளை சரிநிகர் ஏட்டில் எழுதியுள்ளார். பத்துக்கதைகள் அடங்கிய வாழ்தல் என்பது இவரின் சிறுகதைத் தொகுப்பு.




**புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்**

இரத்தினவேலோன் இன்று எம்முன் இருக்கின்ற சிறந்த படைப்பாளிகளில் ஒருவர். இக் கதை மீரா பதிப்பகத்தினரால் வெளியிடப்பட்ட நிலாக்காலம் என்ற தொகுப்பில் உள்ளது. இந்தத் தொகுப்பு வட கிழக்கு சாகித்ய விருதினை 2002 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்டது.

எங்களூர் பள்ளிக்கூடத்தில் அப்போ நான் ஏழாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். மேற்பிரிவு படிப்பிற்கு பிரபல கல்லூரிகளில் இடம் பிடிப்பதற்காக விண்ணப்பிக்கும் வகுப்பு. ஏழாம் வகுப்பு வரையில்தான். அங்கு இரண்டு பிரிவுகள் இருந்தன. எட்டாம் ஒன்பதாம் தரங்களில் ஒரே பிரிவுதான். அதிலும் ஒவ்வொரு வகுப்பிலும் பத்து அல்லது பதினைந்து பேர் வரையில் தான் வந்து சென்றார்கள். ஆனால் பள்ளிக்கூடத்திலிருந்து இரண்டு சோதனைகள் எடுக்கலாம் என்ற சலுகை தீவிரமாக அமுலில் இருந்ததில் பத்தாந் தரத்தில் மட்டும் இரட்டிப்பான எண்ணிக்கையில் முப்பது முப்பத்தைந்து பேரளவில் இருந்தார்கள்.

பத்தாம் தரத்திற்கு வந்ததன் பின்பு, வகுப்புகளுக்கு வகுப்பு இடாப்பு காவுதல், வாத்திமார் 'வெத்திலை வாய்' கொப்பளிக்க தண்ணீர்ச் செம்பு எடுத்துச் செல்லல் அவ்வப்போது அண்டையிலுள்ள சித்தி விநாயகர் ஆலயத்திலோ அல்லது வயலிலோ சிரமதானப் பணி புரிதல் போன்ற வேலைகளும் செய்யவேண்டும் என ராசேந்தி சொன்னதை பல காலங்களாக 'சீரியசாகவே' நம்பிக் கொண்டிருக்கும் அளவிற்கு நான் அப்போது வலு அப்பாவியாக இருந்தேன்.

ஏழாம் வகுப்பில் நான் 'ஏ' பிரிவில் படித்தேன். எங்கள் வகுப்பிற்கு விஞ்ஞான பாட ஆசிரியையாகவும் வகுப்பு ஆசிரியையாகவும் புதிய 'ரீச்சர்' ஒருவர் அடுத்த கிழமை வர இருப்பதாக முதலாந் தவணை ஆரம்பித்த முதல் நாளன்று கையில் உள்ள பிரம்பால் தனது பாதத்தில் பறையடித்தவாறே தலைமை வாத்தியார் கூறினார். பிரம்படி பட்டுப்பட்டு அவரது வலது பாத நடுப்பகுதி கண்டிப் போய் நாவல் பழ நிறத்தில் இருந்தது. ராமச்சந்திரன் தான் அந்த ரகசியத்தை எனக்குக் கூறி உயிரியல் சித்தாந்தம் ஒன்றைக் கண்டுபிடித்தவனைப் போலப் பெருமை கொண்டான்.

புதிய 'ரீச்சர்' வந்ததன் பின்பு தான் வகுப்பு 'மெனிட்டர்' தெரிவு செய்யப்படுவாராம். அது வரை பத்தாம் வகுப்பில் இரண்டாவது தடவையாக 'சிரமதானப் பணிகளில்' ஈடுபட்டு வரும் ஆதவன் அண்ணா தான் 'சைலன்ஸ் பிறியேட்டில்' எங்களது வகுப்பறையில் கதைப்பவர்களை வாங்கில் மேல் ஏற வைப்பாராம்.

தலைமை வாத்தியாரின் மகன் ஈசனும் எங்களது வகுப்பாதலால் அவ்வப்போது ஓடைக்கரை தோசை போல சுடசுடச் எங்களுக்குத் தகவல்கள் வந்து கொண்டிருந்தன. அதனால் ஈசன் அவன் இல்லாத நேரங்களில் 'றேடியோ சிலோன்' என்றே அழைக்கப்பட்டான். அன்று ஒரு வெள்ளிக்கிழமை 'நமசிவாய வாழ்க' என ஆரம்பித்த கூட்டுப்பிரார்த்தனை 'பல்லோரும் ஏற்றப் பணிந்து' என மங்களமாக முடிவடைந்து அமர்ந்த கையோடு மெல்லிய குரலில் ஈசன் சொன்னான்.

"புது ரீச்சர் வரணியிலை இருந்து வாறா. அவவின்ரை பெயர் நாகபூசணி."

"நாகபூசணி 'ரீச்சர்' எப்படி இருப்பா?" என ராமச்சந்திரன் ஐம்பது சதம் வைத்து கட்டை ரவியுடன் பந்தயம் பிடித்தான்.

"பெயரில் ஒட்டியிருக்கும் பூசணி போலவே 'ரீச்சரும்' பருமனாக இருப்பா" என்பது ராமச்சந்திரனின் வாதம். அவன் பிற்காலங்களில் 'மெஜிக்'கைத் தேரந்து படித்தானா என்பது பற்றி எனக்கு இப்போது 'ஜடியா' ஏதுமில்லை.

" 'ரீச்சர்' ஒல்லியா மஞ்சள் நிறமாக 'கூப்பன்' கடை 'மனேஜர்' மாதிரி இருப்பா!" என்றான் கட்டை ரவி.பந்தயத்தை அன்று வெட்டிவிட்டவன் நசுங்கிக் கொண்டு நடுவில் அகப்பட்டிருந்த ராசேந்திரன்.

பாடசாலை தொடங்கி பத்து நாட்கள் ஓடி மறைந்தன. அதற்குள் 'பீ' வகுப்பார் விஞ்ஞான பாடத்தில் மூன்று பாடங்கள் முடித்துவிட்டார்களாம். ஒரு நாள் இடைவேளையின்போது பரமேஸ் முன்னாலிருந்த சாவித்திரிக்கு அழாக் குறையாக சொல்லிக் கொண்டிருந்தாள். வகுப்பில் எல்லோரது உடுப்புக்களும் சலவை செய்யப்பட்டதாக இருந்தது அன்றைய தினம் ஒரு திங்கட்கிழமை என்பதை நினைவூட்டிக் கொண்டிருந்தது. தேவாரம் முடிந்து நாம் கதிரையில் அமர்ந்தபோது ஆதவன் அண்ணா சென்னார். "இண்டைக்கு உங்கடை 'ரீச்சர்' வந்திட்டா. இனி நான் வரமாட்டன்."

சற்று நேரத்தில் தையல் பெட்டி 'கடகட' ஒலி எழுப்ப மூச்சு வாங்கியபடியே ஓடி வந்து முன் வரிசைக் கதிரையில் அமர்ந்தாள் சாவித்திரி.

"டியேய் பரமேஸ், புது 'ரீச்சர்' வந்திட்டாடீ! மெல்லிசா, சிகப்பா, நல்ல வடிவா இருக்கிறாடீ!" புத்தகப் பையைத் தனது கதிரையில் கொழுவிவிட்டு தகரப் பெட்டியை மேசையில் வைத்தவாறே பின் வரிசையில் இருந்த பரமேசுக்கு இளைக்க

இளைக்கச் சாவித்திரி சொன்னது, அவளுக்கு அடுத்த வரிசையில் ஒரு மேசை இடைவெளியில் இருந்த எனக்கும் தெளிவாகக் கேட்டது.

“உனக்கு எப்படிடீ தெரியும்?” இது பரமேசின் கீச்சுக் குரல்.

“இண்டைக்கு பக்கத்து வீட்டு மூத்ததம்பி வாத்தியார் லீவு எண்டு சொல்லி லீவுக் கடிதத்தைத் தலம் வாத்தியாரட்டைக் குடுக்கச் சொல்லித் தந்தவர். கடிதம் குடுக்கவெண்டு தலம் வாத்தியாற்றை அறைக்கை போனனான் அப்பத்தான் புது ‘ரீச்சரைக்’ கண்டனான். சாவித்திரி வாயை மூடும் போது, வகுப்பு வாசலில் கடப்பு போலிருந்த கட்டைக் கதவைத் திறந்தவாறே ‘தலம் வாத்தியார்’ என்றழைக்கப்படும் தலைமை வாத்தியார் வகுப்பிற்குள் நுழைந்தார். கூப்பன் கடை ‘மனேஜரையே’ ‘கிளீன் போல்ட்’ ஆக்கிவிட்ட குதூகலத்துடன், தலைமை வாத்தியாரின் பின்னால் புது ‘ரீச்சர்’!அவர்களைக் கண்டு எழும்பியபடியே கட்டை ரவி ராமச்சந்திரனை திரும்பிப் பார்த்தான். ‘எடுத்து வை ஐம்பது சதத்தை ஆறுமுப்பாவின் கடையில் பாக்கு முட்டாசு வேண்ட’என்பது போலிருந்தது அவனது பார்வை. தமிழ் படிப்பிக்கும் போது ஒரு நாள் பெரியதம்பி வாத்தியார் ‘தீர்க்கதரிசி’ என்ற பதத்தை விளக்கி, அதற்கு ஒருவரை உதாரணம் கூறும்படி கேட்டார். எல்லோரும் ஆளை ஆள் பார்த்து முழுசிக் கொண்டிருக்கும் போது அவரே சொன்னார். ‘பாரதியைச் சொல்லலாம்’ இச் சம்பவத்தின் பின்பு எனக்கோ பாரதியை விட கட்டை ரவியே அதற்குப் பொருத்தமானவன் போல் தோன்றியது.

“வணக்கம் தலம் வாத்தியார்.” நாற்பது பேரின் குரல்களிலும் கட்டை ரவியின் குரலே பலமாக ஒலித்தது.

“வணக்கம் பிள்ளைகளே! அமருங்கள். இவ தான் இனி உங்களுக்கு வகுப்பு ‘ரீச்சர்’. தலைமை வாத்தியார் சத்தமாகச் சொன்னது பின்னால் இருந்த ‘பீ’ வகுப்பாருக்கும் கேட்டிருக்கும் என்பதை எங்கள் வகுப்பை எட்டிப்பார்த்த சில தலைகள் உறுதிப்படுத்தின. பெரியதம்பி வாத்தியார் ‘பென்சனில்’ போகும் போது நடந்த பிரியாவிடைக் கூட்டத்தின் பின்பு, நாகபூசணி ‘ரீச்சரை’ எங்கள் வகுப்பிற்கு கூட்டிவந்த அன்றைய தினம் தான் பிரம்பு இல்லாது தலைமை வாத்தியார் நின்றதை நான் கண்டேன். நிராயுதபாணியாக நின்றதலோ என்னவோ அதிகநேரம் நிற்காது அவர் சென்றுவிட்டார்.

புதிய ‘ரீச்சர்’ வகுப்பறையை ஒர் தடவை நோட்டம் விட்டா. எங்கள் வகுப்பை ‘பீ’ வகுப்பிலிருந்து காக எச்சத்தினால் வெள்ளையடிக்கப்பட்ட ‘ஸ்கிறீன்’ ஒன்று அரையுங்குறையுமாகப் பிரித்து வைத்துக் கொண்டிருந்தது. இருபத்திரண்டு ‘பொடியங்களும்’ பதினெட்டுப் ‘பெட்டையளும்’ ஆகச் சரியாக நாற்பது பேர் இரு பிரிவுகளாக ஆறு வரிசையில் வகுப்பில் அமர்ந்திருந்தோம். அதிசயமாக அன்று எவருக்கும் தலையிடியோ, காய்ச்சலோ அல்லது வயிற்றோட்டமோ வரவில்லை.

“என்னுடைய பெயர் ‘மிஸ்’ நாகபூசணி நாகநாதன். சரி இப்ப நீங்கள் ஒவ்வொருத்தரா எழும்பி உங்கடை பெயரைச் சொல்ல வேணும். முதல் வரிசையிலிருந்து சொல்லத் தொடங்குங்கள் பிள்ளையள்.”

“ராமச்சந்திரன் ‘ரீச்சர்’.”

“ராசேந்திரன் ‘ரீச்சர்’.”

“ரவிச்சந்திரன் ‘ரீச்சர்’.”

“சிவகுமார் ‘ரீச்சர்’.”

ஆரோகரணத்திலிருந்து அவரோகணத்திற்கு குரல்கள் மாறுகின்றன.

“சாவித்திரி ‘ரீச்சர்’.”

“விஜயகுமாரி ‘ரீச்சர்’.”

“காஞ்சன ‘ரீச்சர்’.”

“பாரதி ‘ரீச்சர்’.”

அடுத்தது இரண்டாவது வரிசை. குணட்டியின் முறை. எழும்பினான் என்றால் சூரன் மாதிரி நெஞ்சை நிமிர்த்தியவாறு நிற்பான். பவ்வியமாக குணரத்தினம் என்ற தனது பெயரைச் சொன்னான்.

“அப்பாடா… நல்ல வேளை உமக்கும் சிவாஜி கணேசன் அப்படி எண்டு ஒரு பெயரும் இல்லாது போனது” என்றா ‘ரீச்சர்’ முகத்தில் செட்டான சிரிப்புடன். அதன் பிறகு, நடிப்பு என்றால் அகராதியில் அர்த்தம் தேடும் குணட்டி கூடச் சில காலங்கள் சிவாஜிகணேசன் என்று அழைக்கப்பட்டதாக ஞாபகம். பெயர் கேட்டு அறிந்த பிறகு ‘மெனிட்டர்’ தேர்வு ஆரம்பமானது.

“போன தவணை முதலாம், இரண்டாம் பிள்ளையளாக வந்தாக்கள் கையை உயர்த்துங்கோ பார்ப்பம்” இடக் கையைக் பின்னால் கட்டிக்கொண்டு, வலது கையால் ‘டஸ்டரை’ எடுத்துக் கரும்பலகையை அழித்தவாறே ‘ரீச்சர்’ சொன்னா. பரமேஸ்வரி என்னைப் பார்த்தாள். இருவருமே கைகளை உயர்த்தினோம்.

“சரி உங்கள் இரண்டு பேரிலும் ஆர் ‘மெனிட்டர்’ வாறதை வகுப்புப் பிள்ளையள் விரும்பியினம் எண்டு இப்ப நான் ஒரு தேர்வு வைக்கப்போறன். எல்லோரும் குனிஞ்சு முகத்தை மேசையிலை வைச்சுக் கொள்ளுங்கோ. இப்ப நான் இவையள் இரண்டு பேரின்ரை பெயரையும் சொல்லுவன். உங்களுக்கு விருப்பமானவற்றை பெயரைச் சொல்லேக்கை நீங்கள் கையை உயர்த்த வேணும். சரி தானே?” நாற்பது பேரும் முகத்தினை மேசையில் புதைத்துக் கொண்டோம்.தேர்வு முடிந்து முடிவினைக் கரும்பலகையில் எழுதினா ‘ரீச்சர்’ எனக்கு இருபத்தியொரு வாக்குகள். பரமேஸ்வரிக்கு பத்தொன்பது வாக்குகள்.

“பொடியங்களிலை இருந்து ஆரோ ஒரு செம்மறி பரமேசுக்குக் கை உயர்த்தி இருக்கு. அநேகமாக அது பெட்டை ரவியாகத்தான்

இருக்கும்'' என்றான் தங்கராசன்.

''ஹூ இஸ் த பிளக் ஸுப்'' என்ற பாடல் அந்த நாட்களில் எழுதப்படாத அளவில் பெட்டை ரவி தப்பினான். அல்லாவிடின் அப்பாடலை பாடிப் பாடியே தங்கராசன். பெட்டை ரவியைச் சாகடித்திருப்பான்.

நாகபூசணி 'ரீச்சர்' வந்த ஒரிரு மாதங்களிலேயே எங்களூர் பள்ளிக்கூடம் பல மாறுதல்களைக் கண்டது. எங்கள் வகுப்பறையில் இருந்து பார்த்தால் முன்னால் வாசிகசாலையில் இருந்து சனங்கள் பத்திரிகை பார்ப்பதும் மழைக்காலங்களில் ஊரா வீட்டு ஆடுகளெல்லாம் வாசிகசாலை வாங்கிலில் ஏறி நின்று பிழுக்கை போடுவதும்.... அருகே அரசு மரத்திற்குப் பின்னால் ஆறுமுகப்பாவின் கடை வாசலில் அடிப்பக்கம் அழுகிய வாழைக்குலை சுழன்று கொண்டிருப்பதும் தெரியும். 'ரீச்சரின்' வருகையின் பின்னர் முன்பக்க எல்லையில் இருந்த கம்பி வேலி முழுவதும் ஆளளவு உயரத்திற்கு கிடுகுகள் வரியப்பட்ன. பள்ளிக்கூடத்தின் பின்புறத்தினை பாவட்டையும், கற்றாளையும் கூடவே சிறுநீர் நெடியும் மொத்தமாகக் குத்தகைக்கு எடுத்திருந்தன. ஒண்டுக்குப் போறதென்றால் மூக்கைப் பொத்திக் கொண்டு தான் போக வேண்டியிருந்தது. மூத்ததம்பி வாத்தியாரையும், கந்தப்பு வாத்தியாரையும் அடிக்கடி அங்கு நாம் காண்போம். அந்தப் பற்றைகள் அழிக்கப்பட்டு அங்கு இரண்டு தகர மலசலகூடம் அமைக்கப்பட்டு, மறைவுக்குக் காவோலையால் வேலியும் அமைக்கப்பட்டது. மலசலகூடம் அமைக்கப்பட்ட பின்னரும் கூட வேலியோரத்திலேயே கந்தப்பு வாத்தியார் குந்தியிருந்ததாக குகதாசன் கூறியது எனக்கு இப்பொழுதும் ஞாபகத்தில் உள்ளது.

மாணவர்கள், ஆசிரியர்கள் உடுப்பில் கூட மாற்றங்கள் நிகழ்ந்தன. ஒன்பதாம், பத்தாம் வகுப்பகளில் படித்த சில அக்காமார்கள் உடுத்து வந்த 'ஹாவ் சாறி' மற்றும் 'கலர்' சட்டைகள் 'கலர் ஸ்கேட்'டுக்கள் யாவற்றுக்கும் பிரியாவிடை கொடுக்கப்பட்டு சீருடை அறிமுகமானது. வேட்டியுடனும் வெறும் மேலுடன் வந்த மூத்தம்பி வாத்தியார் உட்பட நாலைந்து வாத்தியார்களும் 'நாசனலுடன்' வர ஆரம்பித்தனர். தூய வெள்ளை நிறத்தில் ஒன்று, பளுப்பு நிறத்தில் ஒன்றுமாக இரண்டு 'நாசனலுடனேயே' காலத்தைக் கழித்த மூத்ததம்பி வாத்தியார், 'பென்சன் எடுக்கிற காலமாகப் பார்த்து இப்பிடியாய் போச்சு' எனக் குறைபட்டவாறே மேலும் இரண்டு 'நாசனஸ்' தைக்க ஆலடிச் சந்தை குறுப்பனிடம் அளவுகொடுத்ததாக ஆதவன் அண்ணா ஆக்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

கட்டை ரவி, பெட்டை ரவி, வடலித்திடல் விமலா, ஐயர் வீட்டு விமலா என்று அழைக்கப்படுவது அருகிப் போக ஆர்.ரவிச்சந்திரன், கே.ஆர்.ரவிச்சந்திரன், கே.விமலா, எஸ். விமலா என அவர்கள் அழைக்கப்படலாயினர்.வாத்தியார் என்றோ, தலம் வாத்தியார் என்றோ சொல்ல வேண்டாம் என்றும், எல்லா வாத்தியார்களையும் 'சேர்' என்றும் தலம் வாத்தியாரை 'பிறின்சிப்பல்' என்றும் அழைக்கும்படியும் 'ரீச்சர்' கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தா.

''உலகத்தை மாத்த வெளிக்கிட்டுட்டா சிங்காரி. அவ சொன்னதுக்கெல்லாம் ஓணான் மாதிரி இந்தாளும் தலை யாட்டுது'' என மூத்ததம்பி 'சேர்' பங்குனி மாதக் கள்ளைக் குடித்துவிட்டு இரவில் வீட்டில் சத்தம் போட்டதாக 'சைலன்ஸ் பிறீயட்' முடிந்த கையோடு சாவித்திரி ஒரு நாள் பரமேசுக்கு கீச்சுக் குரலில் சொல்லிக் கொண்டிருந்தது ஈசனுக்கும் கேட்டிருக்கும்.

முதலாம் தவணை முடியும் தறுவாயில் நாகபூசணி 'ரீச்சருக்குத்' துணையாகத் தோற்றத்திலும் நடத்தையிலும் அவவுக்கு எதிர்மாறான அம்சங்களுடன் ஒரு சங்கீத 'ரீச்சரும்' வந்து சேர்ந்தா. பத்துப் பாடங்களுடன் எங்களுக்கு பதினோராவது பாடமாகச் சங்கீதமும் சேர்க்கப்பட்டது.

ஸரிகமபதநிஸ பாடும் போது ஒரு நாள் ராமச்சந்திரன் ஆரோகணத்தில் 'நீ சா' எனப் பாடிவிட்டான். ''ஆரையடா சாகச் சொல்லுறாய் மொக்கு'' என்று கேட்டவாறே அன்று சங்கீத 'ரீச்சரிடம்' அவன் வாங்கின அடி போல வண்டில்கார வடிவேலண்ணனின் நாம்பன் மாடு கூட சீவியத்தில் வாங்கியிருக்காது.

பள்ளிக்கூடத்திற்கு வடக்கே சலவைத் தொழிலாளர்களின் துறை ஒன்று இருந்தது. அதன் எல்லையோடு உடைந்த கரும் பலகைகள், கால்கள் இழந்த கதிரை, மேசைகள் குவிக்கப்பட்டும், சிலந்திகளால் வலை பின்னப்பட்டும் கவனிப்பாரற்று ஒரு அறை கிடந்தது. அதற்குள் ஒரு சாரைப் பாம்பு செல்வதை தான் கண்டதாக கே.விமலா ஒரு நாள் சொன்னதிலிருந்து அதனை 'பாம்பு அறை' என்றே நாம் அழைத்து வந்தோம். பத்தாம் வகுப்பு அண்ணாமாரால் சிரமதானத்திற்கு உட்பட்டதில் பாம்பு அறை ஆசிரியர்களின் ஓய்வு நேர அறையாக உருமாற்றமடைந்தது. சங்கீத 'ரீச்சரை' அநேகமான நேரங்களில் அங்கு காணக்கூடியதாக இருந்தது.முதலாவது தவணைப் பரீட்சை நடைபெற்றது. பரமேஸ் முதலாம் பிள்ளையாகவும், நான் இரண்டாவதாகவும் மகேஸ்வரன் மூன்றாவதாகவும் வந்திருந்தோம். மூவருக்குமே விஞ்ஞான பாடத்திற்கு நூறு புள்ளிகள் கிடைத்திருந்தன.

இரண்டாவது தவணை ஆரம்பமாகியது.
புலமைப் பரிசில் சோதனைக்காகத் தயார்ப்படுத்தும் காலம் ''போன வருசம் எங்கடை பள்ளிக்கூடத்திலை இருந்து ஒருவர் தன்னும் 'ஸ்கொலசிப்பில' தேர்ச்சியடையவில்லை. இம்முறை எனது வகுப்பிலிருந்தே குறைந்தது நாலு பேரையாவது 'பாஸ்' பண்ண வைப்பன்'' என்று நாகபூசணி 'ரீச்சர்' ஒரு செவ்வாய்க்கிழமை 'அசெம்பிளி'யில் சொன்னது 'பீ' வகுப்பு ஆசிரியர் வீரகத்தி 'சேருக்கு' வயிற்றில் புளியைக் கரைத்தது. மூன்று பேர் சரி நாலாவதாக 'ரீச்சர்' யாரைச் சொல்லியிருப்பா என்பதை அறிவதில் சில காலங்கள் ராமச்சந்திரன் மிகவும் ஆர்வமாக இருந்தான்.
''சோதினை மட்டும் சனிக்கிழமைகளிலும் ஒரு இரண்டு மணித்தியாலம் வகுப்பு வைப்பன். எல்லோரும் வரவேணும்.''

'ரீச்சர்' சொன்ன போது முதலில் ராமச்சந்திரன் தான்

தலையாட்டினான். சனிக்கிழமை வகுப்புகளில் பீ பிரிவையும் சேர்க்க வேணும் எண்டு பிறின்சிபல் பிரியப்பட்டதாகவும் அதற்கு ரீச்சர் ஓம்பட்டதாகவும் வீரகத்தி சேர் நெருப்பெடுத்ததாகவும் ஈசன் எவருமில்லாத சமயத்தில் ஒரு நாள் எனக்குச் சொன்னான்.புலமைப் பரிசில் பரீட்சை முடிவு வெளியானது. பள்ளிக்கூடத்தில் மூவர் சித்தியடைந்திருந்தோம். மூவரும் எங்கள் வகுப்பைச் சேர்ந்தவர்களே. பரமேசும், நானும், தங்கராசனும் பீ பிரிவில் எவரும் இல்லை.

"சனிக்கிழமைகளிலையும் வகுப்பு வைச்சு பெரிசா அவ என்னத்தைக் கிழிச்சா?" என்று மூத்ததம்பி சேர் வீட்டிற்கு ஒருநாள் போன இடத்தில் வீரகத்தி சேர் சத்தம் போட்டிருக்கிறார். வழமை போல பரமேசுக்கு சாவித்திரி சொல்லிக் கொண்டிருந்தாள். அந்த நாட்களில் தான் கந்தசாமி என்றொரு ஆசிரியர் எங்களூர் பள்ளிக்கு மாற்றலாகி வந்தார். அசப்பில் பார்த்தால் எம். ஜி.ஆரைப் போல் இருப்பார். எங்களுக்கு உடற்பயிற்சி என்றொரு பாடத்திற்காக அவரைப் போட்டிருந்தார்கள். முன்னால் சிகப்பு பாஸ்கட் பூட்டிய புத்தம் புதிய றலி சைக்கிளில் அயற் கிராமத்திலிருந்து வந்து சென்றார். வரணிக்குத் தினமும் வந்து செல்வது கடினம் எனக் கூறி மூன்றாம் தவணை தொடக்கத்தில் நாகபூசணி ரீச்சரும் எங்களூரிலேயே எங்கள் வீட்டுக்கு மூன்று நான்கு வீடு தள்ளி வாடகைக்கு ஒரு வீடு எடுத்துத் தங்கியிருந்தா.

பின்னேரங்களில் நான் பிள்ளையார் கோவிலடியில் பொடியளுடன் 'றவுன்றேஸ்' விளையாடி விட்டுத் திரும்பும் சந்தர்ப்பங்களில் பல தடவைகள் 'டரெசிங் கவுனுடன்' ரீச்சரை வீட்டு வாசலில் கண்டிருக்கிறேன். அப்பொழுதெல்லாம் மிக அழகாக ரீச்சர் இருப்பா. அவவின் மஞ்சள் நிறத்திற்கு 'எடுப்பை' கொடுக்கும் கலரிலேயே 'கவுண்' அணிந்திருப்பா. அப்படித்தான் ஒரு நாள் மைமல் பொழுதில் விளையாடிவிட்டு நான் வீடு திரும்பும் போது ஆறுமுகப்பாவின் கடையில் தேயிலையும், சீனியும் வாங்கி வரும்படி என்னிடம் காசு கொடுத்துவிட்டு அவசர அவசரமாக ரீச்சர் உள் நுழைந்துவிட்டா. எதேச்சையாக எனது பார்வை வீட்டு முற்றத்தில் பதிந்த போது சிகப்பு பாஸ்கட் பூட்டிய அந்தப் புத்தம் புதிய றலி சைக்கிள் என் கண்களில் சிக்கியது.

'அது கந்தசாமி சேரின் சைக்கிள் அல்லோ?'

ஹாட்லி, நெல்லியடி சென்ரல், எம்.எச்.எஸ். வட இந்து மகளிர் என பிரபல பாடசாலைகளுக்கு விண்ணப்பங்களை அனுப்பிவிட்டு எல்லோரும் நுழைவுப் பரீட்சைகளுக்கு எம்மைத் தயார்படுத்திக் கொண்டிருந்தோம்.

ஒரு திங்கட்கிழமை. புத்தகங்களைத்தோளில் சுமந்து கொண்டு பள்ளிக்கூடத்திற்குள் நுழைகின்றேன். தூரத்தே நெசவுசாலைப் பக்கமாக பத்தாம் வகுப்பு அண்ணன்மார்கள் தும்புக் கட்டையுடனும், வாளியுடனும் கூட்டமாக நிற்பது தெரிந்தது. சிரமதானம் எதற்கோ செல்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டேன்.பள்ளிக்கூடத்திற்குள் கூட்டங் கூட்டமாக நின்று பொடியள் ஏதோ குசுகுசுத்துக் கொண்டிருந்தார்கள். பிறின்சிப்பல் பின்னுக்குக் கையைக் கட்டியவாறு நிலத்தை அளந்து கொண்டிருந்தார். சங்கீத ரீச்சருக்கு வீரகத்தி சேர் கையை அசைத்து, அசைத்து உற்சாகத்துடன் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்.

"இவளுக்கேன் இந்தக் குறுக்காலை போன புத்தி? நல்ல குடும்பத்திலை உயர் சாதியிலை பிறந்திட்டு இவனைப் போய்...." அருகால் செல்லும் போது சங்கீத ரீச்சர் உச்சஸ்தாயியில் சொன்னது எனது காதுகளில் விழுந்தது. வகுப்பறைக்குள் நுழைகிறேன். ராசேந்தி என்னை நோக்கி ஓடி வந்தான்.

"டேய் இரத்தி, நெசவுசாலை சுவர் முழுக்க எங்கடை ரீச்சரின்ரை பெயரையும், கந்தசாமி சேரின்ரை பெயரையும் சேர்த்து ஆரோ கண்டபடியெல்லாம் எழுதி இருக்கிறாங்கடா. அது தான் அதை அழிக்கச் சொல்லிப் பத்தாம் வகுப்பு அண்ணாமாரை பிறின்சிபல் அனுப்பியிருக்கிறார்."

"ராசோத்தி, அது புன்னரைக்காயாலை எழுதினதோ அல்லது பூவரசம் இலையாலை எழுதினதோவெண்டு நீ நினைக்கிறாய்?" கேட்டவாறே ராமச்சந்திரன் அருகில் வந்தான். மேலும் அதில் நின்றால் நானே பந்தயத்தை வெட்டிவிட வேண்டிவரும் என்ற பயத்தில் அங்கிருந்து விலகிச் செல்கின்றேன். அன்று ரீச்சர் பள்ளிக்கூடம் வந்திருந்தும் வகுப்பிற்கு வரவில்லை. நெடுநேரமாக ஸ்ராவ் ரூமிற்குள் இருந்துவிட்டு அரை நேரத்தோடு சென்றுவிட்டா.

இரண்டொரு நாட்களின் பின்னர்....

பின்னேரம் விளையாடிவிட்டு திரும்பிய போது அம்மா சொன்னா, "உங்கடை ரீச்சரை தகப்பன் வந்து அவையின்ரை ஊருக்குக் கூட்டிக்கொண்டு போய்விட்டார். வேறு இடத்துக்கு மாற்றம் எடுத்துக் குடுக்கப் போறன். இனி உந்தப் பள்ளிக்கூடத்துக்கு மட்டும் அவளை விட மாட்டன் எண்டு தகப்பன் வீட்டுக்காரருக்குச் சொல்லிப் போட்டுப் போயிருக்கிறாராம்." அன்று இரவு சுடலைக் குருவிகள் எழுப்பிய ஒலியும், ஆந்தைகளின் அலறல்களும் இரவு வெகு நேரமாக எனக்குக் கேட்டுக் கொண்டே இருந்தது.

## செங்கை ஆழியான்

இயற்பெயர் க. குணராசா. புதினங்கள்- சிறுகதைகள்- புவியியல் நூல்கள்- நாவல்கள் போன்ற பலதுறைகளிலும் தன்னை நிலை நிறுத்திய ஆளுமை. நீலவண்ணன் என்ற புனைபெயரிலும் பல ஆக்கங்களைத் தந்துள்ளார்.ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்த கிடுகுவேலி என்ற இவரது தொடர்கதை மிக வரவேற்புப் பெற்ற ஒரு படைப்பாகும்.

# புதுமாதிரி

## சி. சிறீரங்கன்



வானத்தில் தெரிந்த வட்டநிலவு பௌர்ணமி என்பதைப் பறைசாற்றியது. யன்னல் வழியே நிலவின் வெளிச்சம் மெல்ல மெல்ல அவள் அறையினுள் அத்துமீறி நுழைந்தது. கட்டிலில் கிடந்த அவள் மீதும் படர்ந்தது. அதனை ரசிக்கும் நிலையில் அவள் இல்லை. நிலவு தண்ணொளி வீசினாலும் ஏனோ அவளால் தாங்க முடியவில்லை. குளிர்மைக்குப் பதில் வெம்மை படர்ந்திருந்தது. அது அவளது மனவேட்கையா அல்லது சூழலின் வெக்கையா என்பது அவளுக்குப் புரியவில்லை. நிலவின் கைகள் அவளை ஸ்பரிசிக்கத் தொடங்கிய போதே தன் ஆடைகளைச் சரிசெய்து கொண்டது அவளது பெண்மை.

அவளது அவஸ்த்தையைப் புரியாது கார்த்தி அவளைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கிடந்தான். உடம்பின் உஸ்ணம் அவளுக்குத் தண்ணீர்த் தாகத்தை ஏற்படுத்தியது. அவளால் எழும்ப முடியவில்லை. மெல்லக் கைகளை விலக்கிக் கொண்டு எழ முயற்ச்சித்தாள். கார்த்தி சிணுங்கிக் கொண்டு மேலும் இறுகக் கட்டிப்பிடித்தான். ஏனோ அன்று அது அவளுக்கு எரிச்சலைத் தந்தது.

"தண்ணி குடிக்கப் போறன் கார்த்தி கையை எடு" என்று எழும்பினாள். பக்கத்தில் மேசை மீது இருந்த தண்ணீர்ச் செம்பில் இருந்து மட மட என்று தண்ணீரைக் குடித்தாள். தாகம் அடங்க வேர்க்கத் தொடங்கியது.

"காத்து வாறது காணாது" என்று முணுமுணுத்தவாறு மின்விசிறியின் வேகத்தைக் கூட்டி விட்டாள். பின்பு வந்து படுக்கையில் விழவும் வழமை போல் கார்த்தி கையைப் போடச் சிறைப்பட்டவள் போலானாள் புவனா. நித்திரை அவளை விட்டு வெகுதூரம் சென்றுவிட்டது. அவள் உடலில் பல இரசாயன மாற்றங்கள். அதன் விளைவால் பல உணர்ச்சி அலைகள் ஊற்றெடுத்தன. இரவின் மடியில் ஊரோ நிசப்தமாய் உறங்கியிருக்க புவனாவின் உணர்ச்சி அலைகள் மட்டும் சமுத்திர அலைகள் போல் ஆர்ப்பரித்த வண்ணம் இருந்தது. தன் மனதைச் சாந்தப்படுத்தத் தனக்குத் தெரிந்த பாசுரங்களை மனனஞ் செய்து தோற்றாள் புவனா. அதே நேரம் பக்கத்து அறையில் குசுகுசுவென்று கதைக்கும் சத்தம் கேட்டது. பின் சிரிப்பும் சினுங்கலுமாக இருந்தது. அவளை அறியாமலே அவள் காதுகள் இரண்டும் கூர்மையாகின.

"சீ... இவ்வளவு மட்டமான ஆளா நீ?" என்று ஆழ்மனம் அவளைக் கேலி செய்தது. ஆனாலும் ஐம்புலனும் அவள் கட்டுப்பாட்டில் இல்லை என்பது தான் உண்மை. புவனா புழுவாய்த் துடித்தாள். புவனாவின் மனக்கண் முன் சுரேஸ் வந்து நின்றான். யாரை அவள் வெறுத்து ஒதுக்க விரும்பினாளோ அவனது விம்பம் மனக்கண் முன் வந்து நின்றது. இவளின் இந்த நிலைக்கு காரணமான அழகிய ராட்சசன் அவன். சுரேஸ் மீது இவள் பைத்தியமாகத் தான் இருந்தாள். அவனும் அவ்வாறு தான் இருந்தான். இருவரும் காதலில் கரைந்தனர். ஒன்றல்ல இரண்டல்ல ஐந்து வருடங்கள். அவனை முழுமையாக நம்பினாள் இந்தப் பேதைப்பெண். அதனால் தன்னை அவனிடம் முழுமையாக இழந்தாள்.

*1995* யுத்தத்தின் கோரப்பிடியில் தேசம் சிக்கி சின்னாப் பின்னமாக சிதைந்து கொண்டிருந்த காலம். யாழ்ப்பாண மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்து வன்னி தென்மராட்சி மற்றும் வடமராட்சிப் பிரதேசங்களில் தஞ்சம் புகுந்தனர். ஆறு மாத காலத்தின் பின் குடாநாடு முழுமையாக இராணுவக் கட்டுப்பாட்டில் வந்த பின்பு வன்னி சென்றவர்கள் தவிர மீதிப்பேர் தத்தம் இடங்களுக்கு மீள வந்து குடியேறினார்கள். அக்காலப்பகுதியில் *1995* இலிருந்து *2004* காலப்பகுதி வரை இளைஞர் யுவதிகள் காணாமற் போதல்களும் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுவதுமாக இருந்தது. அது ஒரு இருண்ட காலம்.

*2000* ஆண்டில் ஓர் நாள்

"புவனா நான் இங்கு இருப்பது அவ்வளவு நல்லாப் படல"

"எனக்குப் புரியுது சுரேஸ்"

"ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு போக நினைக்கிறன்"

"…………."

"என்ன சத்தத்தைக் காணோம்"

"என்ன சொல்லுறதெண்டு தெரியல"

"உனக்கு விருப்பமில்லையா?"

"நான் அப்படிச் சொல்லல. ஆனா எனக்குக் கஸ்ரமா இருக்கும்"

"உனக்கு மட்டுமா? எனக்கும் தான். ஆனா நான் போய் உன்னைக் கூப்பிடலாம்"

"அதற்கு எவ்வளவு காலம் ஆகுமோ" என்றாள் புவனா கவலை தோய்ந்த குரலில்.

"புவனா இஞ்சை பார். எத்தனை பேர் இஞ்சை வந்து கலியாணம் செய்துபோட்டு இரண்டு மூன்று வருடங்களுக்குப் பிறகு மனிசியைக் கூப்பிடுறாங்கள்"

"இரண்டு மூன்று வருடங்களோ?"

பொல பொலவென அவள் கண்கள் கண்ணீரைச் சிந்தின. சில நிமிடங்கள் அவள் கண்ணீரில் கரைந்தன.

"எழுத்து எழுதிவிட்டுப் போங்கோவன் சுரேஸ்"

"என்னில் உனக்கு நம்பிக்கை இல்லையா?"

"அதற்குச் சொல்லல. ஆனா எனக்குப் பாதுகாப்பு அல்லோ"

"இப்ப ஓட்டாண்டியா வந்து எப்படி உன்னைப் பொண்ணு கேட்பது? உழைச்சு கொஞ்சக் காசோடு வந்துதான் கேட்பன்" என்று உறுதிபடக் கூறினான் சுரேஸ்.

"ஓக்கே சுரேஸ் உங்களை நம்பிறன். உங்களை நம்பித் தானே என்னையே உங்களிடம் முழுமையாக ஒப்படைத்தேன்"

மீண்டும் அவள் கண்கள் கண்ணீரை உதிர்த்தன.

செல்லமாக அவளைக் கட்டியணைத்தவன்

"புவனா உன்னிடம் ஒன்று கேட்க வேண்டும். தப்பாக நினைக்க மாட்டியே?"

"உங்களை நான் எப்ப தப்பா நினைச்சன் கேளுங்கோ?"

"ஏஜென்சிக்கு பத்து கட்ட வேணும். ஆனா ஐந்து பிரட்டியாச்சு. ஐந்து உன்னால தர முடியுமோ? கஸ்ரம் என்றால் வேண்டாம். உழைச்சு முதல் உன் கடனைத்தான் அடைப்பன்"

"ஏன் சுரேஸ் என்னைப் பிரிச்சுப் பாக்கிறீங்க? என்னுடையது எல்லாம் உங்களுக்குத் தானே. ஆனா என்னட்ட காசு இல்ல. கொஞ்ச நகை இருக்கு"

அவளின் நகைகளையும் வாங்கிக் கொண்டு போனவன் தான். முழுதாய்ப் பத்து வருடங்கள் முடிந்தும் அவளைப் பார்க்க வரவில்லை. தன் ராஜகுமாரன் வருவான் வருவான் என்று ஏங்கியவாறே அவள் காலம் மட்டுமல்ல அவள் இளமையும் கரைந்து கொண்டு போகின்றது. போய்ச் சிறிது காலத்தின் பின்னர் அவளுடன் தொடர்பு கொண்டு

"கள்ளமாக வேலை செய்கிறேன். காட் கிடைத்ததும் உன்னை வந்து கூட்டிக் கொண்டு போவேன்" என்றான். பின் ஒரு முறை 20000 ரூபா காசு அனுப்பியிருந்தான்.

பின் இன்னொரு முறை

"இன்னும் வீசா கிடைக்கவில்லை. வெள்ளைக்காரப் பெண்ணைக் கலியாணம் கட்டினால் சிற்றிசன் கிடைக் குமாம். பொம்மைக் கலியாணம் மாதிரித்தான். என்ன செய்ய?" என்று அவளையே கேட்டான்.

தீயை மிதித்தவள் போல் திடுக்குற்றுத் துள்ளியவள்

"ஐயோ வேண்டாம். பொம்மைக் கலியாணமோ உண்மைக் கலியாணமோ. நீங்கள் இங்கே வந்தால் காணும்" என்று அலறினாள் புவனா.

பின் ஒரு போதும் அவன் தொடர்பே கொள்ளவில்லை. அவனது போன் நம்பரும் செயலிழந்து இருந்தது. பத்து வருடங்களாகப் பாவி அவனை எதிர்பார்த்துப் பாவை அவள் காத்திருந்தாள். அக்காலத்தில் அவளை விரும்பிக் கேட்டு வந்த சம்பந்தங்களை எல்லாம் தட்டிக் கழித்தாள். இறுதியில் வீட்டாருக்குத் தன் காதலை ஒருவாறு சொல்லிச் சம்மதத்தையும் பெற்ற போதும் அவள் எண்ணங்கள் எதுவும் ஈடேறவில்லை.

"அக்கா.......... அக்கா.........."

கதவு தட்டும் சத்தம் கேட்டு திடுக்குற்றாள் புவனா.

"ஓம் வாறன்" என்றவாறு கதவைத் திறந்தாள். தங்கை வதனா நின்றிருந்தாள். கசங்கிய மலராக அவள் கோலம் இருந்தது.

"என்னடி?"

"அவருக்குத் தலையிடிக்குதாம். பனடோல் இருக்கு தாக்கா?"

மெல்ல நடந்து சென்று கைப்பையில் இருந்து இரு பனடோல்களை எடுத்துக் கொடுத்தாள்.

"என்னக்கா கார்த்தி குளப்படி செய்தவனே?"

"இல்லையே" என்றாள் இவள்.

"என்ர மனுசன் சொல்லுறார் உன்னைக் கஸ்ரப் படுத்த வேண்டாம் என்று. பிள்ளையைத் தூக்கவே?" என்றாள்.

"எனக்கென்னடி கஸ்ரம். நான் தனியா வெட்டியாத் தானே இருக்கேன்" என்று அழுத்திக் கூறினாள் புவனா. அதில் கோபம் எரிச்சல் இயலாமை எல்லாம் கலந்திருந்தது.

"நான் ஒருத்தி அம்மா என்று குண்டுக்கல்லாட்டம் இருக்கிறன். ஆனா கார்த்திக்கு உன்னில் தான் பாசம் அதிகம்" என்று கூறியவாறு பக்கத்து அறைக்குள் சென்று மறைந்தாள் வதனா.

வதனா இவள் அருமைத்தங்கச்சி. அவள் இவளுக்காக ஒரு போதும் காத்திருக்கவில்லை. காதலித்த ஒருவனைக் கரம் பிடித்துக் கொண்டாள். மூத்த பையன் ஆறு வயது கொண்ட கார்த்தி இன்னொன்றை வயிற்றில் சுமக்கின்றாள். அவளின் கணவன் வாகனங்களின் பழைய உதிரிப்பாகங்களை வாங்கி விற்பவன். கொழும்பிற்கும் குருநாகலிற்கும் என்று அடிக்கடி வெளியில் சென்று வருவான்.

"என்ர மனுசன் பிசினஸ்மான்" என்று வதனா பெருமையாகப் பீற்றிக் கொள்வாள். இன்றும் குருநாகலுக்குப் போய் ஒரு கிழமையின் பின் வந்துள்ளான்.

மீண்டும் படுக்கையில் விழுந்த புவனாவின் மனதில் சுரேஸ ின் துரோகம் தாங்க முடியாது இருந்தது. சில தினங்களுக்கு முன்பு தான் முகநூலில் தனது திருமணப் படத்தினைப்

போட்டிருந்தான். வெள்ளைக்காரப் பெண்ணுடன் பிளக் அன் வைட்டாக நின்றிருந்தான். அதனைப் பார்த்த போது அவளது இதயம் கிழிந்து இரத்தம் வழிந்தது. நூலிழையாக இருந்த அவளது நம்பிக்கையும் அறுந்து போனது. அழுது அழுது அவள் கண்கள் இரண்டும் வற்றிப் போனது. இப்போ அவள் மனதில் ஓர் எண்ணம் உதித்தது. எரிந்த சாம்பல் மேட்டில் இருந்து எழுந்து பறக்கும் பீனிக்ஸ் பறவை போல் அவளும் பறக்கத் தயாரானாள். ஆம். காதலித்துக் கைவிடும் துரோகிகளுக்கு அளிக்கும் பரிசு அவர்கள் முன் சிறப்பாய் வாழ்ந்து காட்டுவது தான். அதைத் தான் அவளும் செய்ய முன் வந்தாள். ஒண்டிக்கட்டையாய் இருந்தால் ஊரே வசை பாடும். சில நாய்கள் உரசியும் பார்க்கும். காதலித்துக் கைவிட்டவனை எண்ணிக் கண்ணீர் விட அவள் இப்போ தயாரில்லை. கவலை கொண்டு தற்கொலை செய்ய அவள் ஒன்றும் கோழையுமில்லை. ஆனாலும் வயதோ முப்பத்தைந்தை தாண்டி விட்டது. நொந்து நொந்துநூலாக இளைத்து விட்டாள். அழகும் குன்றி விட்டது. இனி யார் இவளைக் கட்ட முன்வருவார்கள்? இனிச் சாதகம் பார்த்துத் திருமணம் செய்வது என்பது நடக்கும் காரியமா? தான் காதலித்தவனை விடத் தன்னைக் காதலித்தவனைக் கரம் பிடித்தால் வாழ்க்கை சிறக்கும் என்பார்கள். அவளை நீண்ட நாளாக ஒரு தலையாகக் காதலித்து வரும் அவள் வகுப்புத் தோழன் ''சிவா'' அவள் நினைவில் வந்தான். அண்மையில் அவன் சொன்ன வார்த்தைகள் அவள் நினைவிற்கு வந்தது.

''புவனா! நீ வேலைக்கு வெளிநாடு போக வேண்டும். அல்லது என்னைக் கலியாணம் கட்ட வேண்டும். அதை விட்டு இப்படி வாழாவெட்டியாக இருக்க வேண்டாம்''

இன்னும் திருமணம் செய்யாது தட்டிக்கழித்து வரும் சிவா நிச்சயம் இவளை மன்னித்து வாழ்க்கை தருவான் என்ற நம்பிக்கை இவளில் துளிர்த்தது. அவனுடன் நாளை கதைக்க உள்ள விடயங்களை மனதிற்குள் ஒத்திகை பார்த்துக் கொண்டாள். இவள் மற்றைய பெண்களுக்கெல்லாம் முன் மாதிரி. மொத்தத்தில் இவள் ஒரு புது மாதிரி.

## செ. யோகநாதன்

இலங்கையின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களில் இவரும் ஒருவர். 1962 இல் சிற்பியின் கலைச் செல்வி இதழில் இவரின் முதற்கதை வெளியானது. 1964 இல் இவரது பத்துச் சிறுகதைகளைக் கொண்ட யோகநாதன் கதைகள் என்ற தொகுப்பு வெளியானது. 1974 இல் அஞ்சலியில் வெளியான ஒளி நமக்கு வேண்டும் குறுநாவல் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது. இவர் தமிழ் நாட்டில் வாழ்ந்த காலத்தில் நிறைய சிறுகதைகள் எழுதினார். இவர் தனது 66 ஆவது வயதில் 28-01 - 2008 திங்கள் மாரடைப்பால் யாழ்ப்பாணத்தில் இவ்வுலகை விட்டு நீங்கினார்.

# கடுகு குறுங்கதை

## மரமும் குருவியும்

ஒரு ஆற்றங்கரையில் இரண்டு பெரிய மரங்கள் இருந்தன. ஒரு சிட்டு குருவி மரத்திடம் கேட்டது

“நானும் என் குஞ்சுகளும் வசிக்க கூடு கட்ட அனுமதிக்க முடியுமா” மரமொன்று முடியாது என்றது.

மற்ற மரத்திடம் கேட்டது. அது அனுமதி தந்தது .

குருவி கூடு கட்டி மகிழ்ச்சியாக குஞ்சுகளோடு வாழ்ந்தது.

அன்று பலத்த மழை ஆற்றில் வெள்ளம். முதல் மரத்தை அடித்து சென்றது தண்ணீரில் இழுத்து செல்லும் பொழுது குருவி சிரித்து கொண்டே சொன்னது

“எனக்கு வசிக்க கூடு கட்ட இடம் இல்லை என்று சொன்னதால் தான் இப்போது தண்ணீரில் அடித்து செல்லப்படுகிறாய்” அதற்கு மரம் கூறியது, “எனக்கு தெரியும் நான் வழுவடைந்து விட்டேன். எப்படியும் இந்த மழைக்கு நான் தப்பமாட்டேன். தண்ணீரில் அடித்து செல்லப்படுவேன். நீயும் உன் குழந்தைகளும் உயிரோடு வாழ வேண்டும் என்று தான் . உனக்கு இடம் இல்லை என்றேன். என்னை மன்னித்து விடு” குருவியின்..... விழிகளில்.... என்ன. கண்ணீரா???

**திருமலை சுந்தா**

### கே. எஸ். சிவகுமாரன்

இவர் 1953 முதல் இன்றுவரை ஈழத்திலும் ஓமான் இந்தியா போன்ற நாடுகளிலும் தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இலக்கியம் சினிமா போன்ற துறைகளில் திறனாய்வு செய்து வருகிறார். ஆக்க இலக்கியங்களாக சிறுகதை கவிதை மொழியாக்கம் ஆகியனவற்றையும் இரு மொழிகளிலும் செய்து வருபவர். கல்வித்துறையில் பீ.ஏ எம். ஏ பட்டங்களைப் பெற்றுள்ளார். இவர் இதுவரை 38 க்கு மேற்பட்ட நூல்களைத் தமிழுலகுக்குத் தந்துள்ளார்.

“எலைய வச்சிடுங்கண்ணே. நான் எடுத்துடுறேன்.” இலை எடுக்கப் போன சேவியரைத் தடுத்து அலமேலு இலையை எடுக்க முற்பட்டாள். சேவியர் பிடிவாதமாகத் தலையசைத்து மறுத்தார்.

“சாப்புட்ட எச்சில் இலைய இன்னொருத்தவங்க எடுக்குறது எனக்குப் புடிக்காது. நானே எடுத்துடுறேன்.” இலையை மடக்கி எடுத்துக் கொல்லையில் வீசப் போனவரைக்




கைலாசத்தின் குரல் நிறுத்தியது.

“எலைய கெணத்துல போட்டுடுப்பா.”

“என்னாது.....கெணத்துலயா....?”

“ஆமாம்ப்பா.கெணத்துல தண்ணி வத்திப்போச்சி. அதனால அத குப்பத்தொட்டியா உபயோகப்படுத்த ஆரம்பிச்சிட்டோம்.” வெகு சுவாதீனமாகச் சொல்லிவிட்டுச் சொம்புத் தண்ணீரை வாயில் சரித்துக் கொண்டவரைச் சேவியர் அதிர்ச்சியாகப் பார்த்தார். சிறுவயதில் அவரும் கைலாசமும் சேர்ந்து கிணற்றுநீரை வாளி வாளியாக இறைத்துக் குளித்திருக்கின்றனர். அதுபோகக் குடத்தோடு வரும் பெண்களுக்குத் தண்ணீர் எடுத்துத் தந்திருக்கின்றனர்.

“கல்கண்டாட்டம் ருசி. இந்தமாதிரித் தண்ணிய எங்கேயும் குடிச்சதில்ல” என்று எல்லோருடைய புகழ்ச்சியையும் வாங்கிக்கொண்ட கிணறு ஒருநாளும் வற்றியதேயில்லை. சேவியர் கிணற்றை எட்டிப் பார்த்தார். குப்பை கூளமாகக் கிடந்தது.

“கெணறுவத்திப்போயி ஒருவருசமாச்சி. சரி, தூர்த்துடலாமுன்னு பாத்தா அதுக்கு எக்கசக்கமா காசு கேக்குறாங்க. அத அப்புடியே வுட்டுட்டாத் தன்னால ஒக்காந்துடும்னு பையன் சொல்லிட்டான். சரின்னு வுட்டுட்டோம்”

கைலாசம் சொல்லிக்கொண்டே போனார்.

“ஒங்க ஊர்மாதிரிக் குப்ப வண்டியெல்லாம் தெனமும் இங்கவராது. அந்தக் காலத்துல குப்பக்குழி தனியா இருக்கும். அதுல குப்பயக் கொட்டுவோம். இப்பதான் அதெல்லாம் கெடையாதே. அதனால கெணத்த குப்பக் குழியாக்கிக்கிட்டோம்.”

இது அலமேலு. சேவியர் எதுவும் பேசவில்லை. மூட்டை, முடிச்சியைக் கட்டிக்கொண்டு சென்னையிலிருக்கும் மகன் வீட்டுக்குச் சென்றுவிட்டவர் ஆறு வருடங்கள் கழித்து இப்போதுதான் வந்திருக்கிறார்.

அவ்வப்போது கைலாசத்துடன் அலைபேசியில் பேசியிருந்தபடியால் ஊரின் நிலைமை ஓரளவு தெரியும். “புதுசாத் தார்ச்சாலை போட்ருக்காங்கப்பா. கருப்புப் பட்டுத்துணிய விரிச்சி போட்டாப்ல ரோடு பளிச்சின்னு இருக்கு” என்றும்,

“சாமிக்கண்ணு வாத்தியாரு செத்துப் போயிட்டாரு...”என்றும்,

“மாரிமுத்து அப்பாவுக்கு நூறாவது பொறந்தநாளு வந்துச்சி. பய ஜமாய்ச்சிப்புட்டான். ஹோமம் வளத்து, திருக்காரவாசல்லேருந்து சமையக்காரங்கள வரவச்சி ஊருக்கே விருந்து போட்டு அமக்களப்படுத்திப்புட்டான்” என்றும்,

“நம்ம பண்ணையவூட்டு ஜெயத்தம்மா அரசாங்கம் தர்ற பென்சன் பணத்த நம்பி காலத்த ஓட்டுது. என்னமா வாழ்ந்த குடும்பம். இன்னிக்கி சீரழிஞ்சி போயிட்டுது. நெனச்சாலே வேதனையா இருக்குப்பா...” என்றும் கைலாசம் அடிக்கடி எதையாவது சொல்வார். கிணற்றைப்பற்றிச் சொல்ல ஏனோ விட்டுவிட்டார். ஊரைப்பற்றிக் கைலாசம் சொல்லும் செய்திகளைச் சேவியர் அலுக்காது கேட்டுக் கொண்டிருப்பார்.

“ஊர்ல ஒரு மாடு மேஞ்சுதுன்னு சொன்னாலும் ஒங்களுக்கு சந்தோசம்தான்ப்பா...” என்று மகன் கிண்டல் செய்வான். ஐம்பது வருடங்கள் வாழ்ந்த ஊர். பிடிக்காமல் போனால்தான் ஆச்சர்யம். வீட்டு வாசலில் கயிற்று கட்டிலைப் போட்டு அதில் சேவியரை படுக்கச் சொல்லிவிட்டு அருகில் நாற்காலியில் கைலாசம் அமர்ந்திருந்தார். பவுர்ணமி நிலவு வெள்ளித்தகடுக் கணக்காய் ஜொலித்துக்கொண்டிருந்தது. புரட்டாசியின் பகற்காய்ச்சல் தணிந்து மெல்லிய வேப்பங்காற்று வீசியது. தெரு நாயொன்று கைலாசத்தின் கால்களுக்கருகில் பின்னங்கால்களை மடக்கி, முன்னங் கால்களை நீட்டி அமர்ந்திருந்தது. அலமேலு ஒரு அலுமினிய வட்டிலில் சோறு போட்டுக் கொண்டுவந்து வைக்க விருட்டென எழுந்து வந்து சாப்பிட்டது.

“தெனமும் ராத்திரி புடி சோறு வைப்போம். பசிச்ச வயத்துக்கு ஒரு கவளம் சோறு போட்டா புண்ணியமா என்னான்னு தெரியாது. ஆனா அத அந்த ஜீவன் பறந்து பறந்து சாப்புடுறதப் பாக்குறப்ப மனசுக்கு நெறைவா இருக்கும். அதுக்காகவே ஆளுக்கு ஒரு புடி கொறைவா சாப்புடுறது

வழக்கமா போயிருச்சி...” என்ற அலமேலு நாயின் தலையைத் தடவிக்கொடுத்துவிட்டு உள்ளே செல்லக் கைலாசம் சிரித்தார்.

“இயல்பாவே வெவசாயிங்க எறக்க மனசுக்காரங்க. பெருமைக்காவ சொல்லல. உண்மைய சொல்றேன். நெலமெல்லாம் காய்ஞ்சி போச்சி. ஆனா மனசு காயல. அதுல எப்பவும் ஈரம் சொரந்துகிட்டேதான் இருக்கும்” என்று கைலாசம் சொல்ல சேவியருக்குச் சட்டென கிணற்றின் ஞாபகம் வந்தது. ஆறும் ஏரியும் குளமும் இதற்கெல்லாம் அடுத்தபடியான நீர்நிலை கிணறுதான். ஆறு குளமெல்லாம் பொதுவானவை. கிணறு நமக்கே நமக்கானது. தேவைப்படும்போது ஒரு குடம் நீர் வார்த்து கொள்ளலாம். கேட்பவருக்கு பெருந்தன்மையாக ஒரு குடம் நீர் தரலாம். சகடையில் கயிறு போட்டுச் சரசர வென்று இழுக்கும்போது ஒரு சத்தம் உண்டாகும். சேவியருக்கு அது மிகவும்பிடிக்கும். மாலை கைலாசத்தின் அப்பா தோட்டத்துச் செடிகளுக்கு நீர் விடச் சேவியர் மூச்சுவாங்க நீர் இறைத்துத் தருவார். இறைக்க, இறைக்க நீர் ஊறிக்கொண்டேயிருக்கும். மழைக்காலங்களில் தொட்டுவிடும் தூரத்தில் நீர் தளும்பி வழியும். கிணற்றை சுற்றியிருந்த தரையில் சிமிண்ட் பூசிக் குளிக்கத் துணி துவைக்கப் பாத்திரம் கழுவ வசதி செய்து வைத்திருந்தார் கைலாசத்தின் அப்பா. வலது மூலையில் ஒரு பெரிய தண்ணீர்த் தொட்டி இருந்தது. அதில் நீரை நிரப்பி மாடுகளுக்குத் தண்ணீர் காட்டுவார்.

“என்னாப்பா யோசனை....?” கைலாசத்தின் குரல் சேவியரின் சிந்தனையைக் கலைத்தது.

“ரொம்ப நேரமாப் பேச்சையே காணும். என்னா யோசிக்கிற....?” சேவியர் மெல்ல எழுந்தமர்ந்தார். பஞ்சம் பிழைக்க வந்த குடும்பம் அவர்களுது. சேவியரின் அப்பா சைமன் சொந்த ஊரில் பிழைக்க வழியின்றி மூட்டை, முடிச்சியை கட்டிக்கொண்டு இந்த கிராமத்துக்கு வந்து சேர்ந்தார். அப்போது சேவியர் கைக்குழந்தை. சைமனுக்கு பண்ணையில் காரியஸ்தராக வேலை கிடைத்தது. வருமானம் குறைவுதானென்றாலும் எளிமையாக வாழ்க்கை நடத்த அது போதுமானதாயிருந்தது. சேவியரும், கைலாசமும் பள்ளிக்கூட காலத்திலிருந்தே நண்பர்கள். கைலாசத்தின் அப்பா விவசாயி. சாகுபடி செய்து மூன்றுவேளை சாப்பிட மட்டுமே முடிந்தது. சேமிக்க எதுவும் மிஞ்சவில்லை. ஆக இரு குடும்பங்களும் ஒரேமாதிரி பொருளாதார நிலையிலிருந்தனர்.

“மறுபடியும் யோசிக்க ஆரம்பிச்சிட்டியா.....?” கைலாசம் உரத்துக் கேட்கச் சேவியர் சிரித்தார்.

“இந்த மண்ணுல காலை வச்சதுமே பழசெல்லாம் வரிசை கட்டிக்கிட்டு ஞாபகம் வர ஆரம்பிச்சிடுச்சி.”

“இப்ப எதப்பத்தி யோசிச்சிக்கிட்டிருந்தீங்க...?” ஈரக்கைகளை முந்தானையில் துடைத்துக்கொண்டே வந்த அலமேலு கேட்டாள்.

“வேறெதப்பத்தி.....ஒங்க கெணத்தப்பத்திதான்.....நான் பாத்து அது வத்துனதேயில்ல. பொழுதுக்கும் சகடை இழுபட்டுக்கிட்டேயிருக்கும். இன்னிக்கி இப்புடி வெறுமையா கெடக்குறதப் பாக்குறப்ப மனசுக்கு சங்கடமா இருக்கு.”

“ஆரம்பத்துல எங்களுக்கும் அப்புடித்தான் இருந்துச்சி. கெணறு தோண்டி கிட்டதட்ட அறுவது வருசமாயிருச்சி. அதுல அம்பத்தொம்போது வருசம் அது தண்ணி தந்துருக்கு. கடந்த ஒருவருசமாத்தான் வத்தி போயி கெடக்கு.” கைலாசம் சொல்ல, அலமேலு தொடர்ந்தாள்.

“நெலத்தடி நீர் எறங்கிப்போச்சிண்ணே. வூட்டுக்கு வூடு போர் போட்டு தண்ணி எறைச்சதுல தண்ணி அடியாழத்துக்குப் போயிடுச்சி. மழையும் சரிவரப் பெய்யிறதில்ல. ஒங்க சென்னைய வுடுங்க. நம்ம கிராமத்துலேயும் தண்ணிப் பஞ்சந்தான். பஞ்சாயத்து போர்டுல நூத்தியிருவது அடி ஆழத்துல போர் போட்ருக்காங்க. அந்தத் தண்ணியத்தான் நாங்க நம்பியிருக்கோம்” என்றவள் மறுநாள் முற்றத்து குழாயில் கயிறுபோல் ஒழுகிய நீரை அவரைக் கூப்பிட்டு காண்பித்தாள்

“இந்தத் தண்ணிய புடிச்சிவச்சிகிட்டு சமைக்கவும், வெளிப் பொழக்கத்துக்கும் பயன்படுத்திக்குறோம். இதுவும் எத்தினி நாளைக்கோ தெரியல.”

“ஏசுவே.....” என்று முணுமுணுத்த சேவியர் ஒருவாரம் நண்பன் வீட்டில் தங்கிவிட்டுப் போகலாம் என்றெண்ணி வந்திருந்தார்.

“ரெண்டுநாள் போதுமே. எதுக்கு ஒருவாரம்...?” என்று மகன் இழுத்தபோது சேவியர் காதில் வாங்கிக்கொள்ளவில்லை.

“நீ போயி ஆறு வருசமாச்சி. ஒரு எட்டு வந்துட்டுப்போப்பா.....”

என்ற கைலாசத்தின் நச்சரிப்பில் அன்பு மிகுந்திருந்தது. அதுவே அவரை பிடிவாதமாக கிளம்பி வரவைத்து விட்டது. காலை எழுந்ததும் முதல்வேலையாக சேவியர் கிணற்றடிக்குப் போய் நின்று கொண்டார். கிணறு பரிதாபமாக பார்ப்பதுபோல அவருக்குப்பட்டது.

“அண்ணே, காபி குடிக்க வாங்க...” அலமேலு உள்ளிருந்து அழைக்க,

“இதோ வந்துட்டேம்மா......” என்றவர் கிணற்றை எட்டிப்பார்த்தார். சாப்பிட்டு வீசிய இலை காய்ந்து சுருண்டிருந்தது. கைலாசம் கால்வலிக்கு உபயோகப்படுத்திய தைலப்பாட்டிலும், தேங்காய் முடிகளும் ஆங்காங்கே கிடந்தன.

“ அண்ணனுக்கு கெணத்துமேல அப்புடியென்னாங்க பாசம்...?” அலமேலு குசுகுசுப்பாய் கைலாசத்திடம் கேட்டாள்.

“அதான் எனக்கும் புரியல.கெணத்து தண்ணியில குளிச்சி, கும்மாளமடிச்சிருக்கோம் சுத்தி சுத்தி வந்து வெளையாடியிருக்கோம் ஆனா கெணத்து மேல பாசம் வைக்கிற அளவுக்கு அது

ஒண்ணும் உசுருள்ள ஜந்து இல்லியே. ஆரம்பத்துல எனக்கும் வருத்தமாத்தான் இருந்துச்சி. இவன் அளவுக்கு இல்ல " என்றவர் காப்பியை எடுத்துப்போய் சேவியரிடம் தந்தார் சேவியர் துணி துவைக்கும் கல்லில் வாகாக அமர்ந்து கொண்டார்.

"பழகுன ஊரு, குடியிருந்த வூடு, பரிச்சயமான முகங்கள் எல்லாத்தையும் வுட்டுட்டு கௌம்புறப்ப ரொம்ப வேதனையா இருந்துச்சி. அதை வெறும் வார்த்தையால சொல்ல முடியாது. அதே உணர்வு இந்த கெணத்தப் பாக்குறப்ப உண்டாகுதுப்பா."

சேவியர் குரல் பலகீனமாக ஒலித்தது. கைலாசம் ஒன்றும் சொல்லவில்லை. ஆறு வருடங்களுக்கு முன் அவர் ஊரைவிட்டு கிளம்பும்போது ஒருவார்த்தை பேசாது கடைசிவரை உடனிருந்து வழியனுப்பிவிட்டு வீட்டுக்கு வந்து யாருக்கும் தெரியாமல் கைலாசம் குலுங்கிக்குலுங்கி அழுதார். அவரெதிரில் துளிநீர் சிந்தாதது அவர் உடையக்கூடாது என்பதனால்தான் இருவரும் ஒரு ரூபாய் கொடுத்தோ, வாங்கிக் கொண்டதோ இல்லை. ஆத்மார்த்தமான அன்பு அவர்களுக்குள் புரையோடிப்போயிருந்தது. அன்று முழுக்க சேவியர் அதிகம் பேசவில்லை. தீவிரமாக எதையோ யோசித்துக் கொண்டிருந்தார்.

"என்னா ஏதுன்னு விசாரிங்களேன். அவரு இப்புடி இருக்குறதப் பாக்க சங்கடமா இருக்கு." அலமேலு சொல்ல கைலாசம் தலையசைத்து மறுத்தார்.

"அவனா சொல்லுவான்.பேசாம இரு." அவர் சொன்னதுபோல் இரவு சாப்பாட்டுக்குப் பின் சேவியர் மெல்ல வாயைத் திறந்தார்.

"கைலாசம், நான் ஒரு யோசனை சொல்லுவேன். நீ அதுக்கு உடன்படணும். செய்வியா....?"

"மொதல்ல யோசனைய சொல்லு. பிற்பாடு உடன்படுறதா, வேண்டாமான்னு யோசிப்போம்."

"இந்தக் கெணறு இருக்குல்ல...."

"ஆமா இருக்கு. அதுக்கென்னா....?"

"அத சுத்தம் செஞ்சி தூர்வாரி மறுபடியும் தண்ணி ஊற வைக்கணும்ப்பா.....?"

"நெனச்சேன். நீ இதத்தான் சொல்லுவேன்னு எனக்குத் தெரியும்." கைலாசம் தலையாட்டி சிரிக்க அலமேலு பெருமூச்சு விட்டாள்.

"அண்ணே, தண்ணி வராமத்தான நாங்க அத அப்புடியே போட்டோம். "

"சரிம்மா....தண்ணி ஊறலைன்னா பரவாயில்ல. அடுத்தமாசம் மழை பெய்ய ஆரம்பிச்சிரும். அத கெணத்துல சேகரிச்சிடலாமே...."

"அதெல்லாம் நடக்குற காரியமா.....?"

"ஏன் நடக்காது. ....ரெண்டுபேரும் இப்புடி ஒக்காருங்க. நான் ஒண்ணு காட்டுறேன்."

சேவியர் கைப்பேசியை உயிர்ப்பித்து முகநூல் பக்கத்தை திறந்து அந்த வீடியோவை அவர்களுக்கு காண்பித்தார். சென்னையில் இருபத்தைந்து வருடங்களாக மழைநீர் சேகரித்து வரும் மனிதரைப் பற்றிய பதிவு அது. அவர் வீட்டிலிருந்த கிணற்றில் மழைநீரை சேகரித்து வருவதாக அவர் தகவல் சொன்னார். ஊரில் கடும் பஞ்சம் ஏற்பட்டாலும் தன் வீட்டில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டதேயில்லை என்று கூறிய அவர் மழைநீர் சேகரிப்பு பற்றிய செயல்முறை விளக்கமளித்தார். பார்த்த கைலாசமும், அலமேலுவும் நம்பமுடியாமல் விழிகளை விரித்தனர்.

"இதெல்லாம் நெசமாப்பா....?" கைலாசம் பார்வையை விலக்காமல் கேட்டார். அவர் முகத்தில் ஆச்சர்யக்குறி அழுத்தமாய் பரவியிருந்தது.

"பாத்துகிட்டே இப்புடியொரு கேள்விய கேக்கலாமா....இது நூத்துக்கு,நூறு உண்மை. ரயில்ல ஊருக்கு வந்துக் கிட்டிருந்தப்ப தூக்கம் வராம முகநூலை ஆராய்ஞ்சேன். அப்பத்தான் இந்த வீடியோ பதிவு கண்ணுல பட்டுச்சி. என்னால நம்பவே முடியல. ரொம்ப ஆச்சரியமாக இருந்துச்சி. அதே ஆச்சரியத்தோட ஒங்க வூட்டுக்கு வந்தா கெணறு வத்திப்போச்சிங்குற. அதக்கேட்டதும் பகீர்ன்னு ஆயிருச்சி. ஆனா மறுநிமிசமே சட்டுன்னு இந்த வீடியோ பதிவு ஞாபகத்துக்கு வந்துருச்சி."

"மெட்ராஸ்க்காரரு சொன்னத இங்கேயும் செயல்படுத்தி பாக்கலாமுன்னு நெனக்கிறியா....?"கைலாசம் நிதானமாக கேட்க, சேவியரின் தலை பெரிதாக அசைந்தது. "ஆமாம்ப்பா. நாமளும் அந்தமாதிரி பண்ணினா என்னா....?"

"அதுக்கு பத்தாயிரத்துக்கிட்ட செலவாவும்னு சொன்னாரே. அவ்ளோ காசுக்கு நாங்க எங்கண்ணே போறது....ஏற்கனவே வெவசாயத்த கைவுட்டுட்டு ரெண்டு மாடு வச்சி வளத்து பால் கறந்து குடுத்து எங்க காலத்த ஓட்டுறோம். மகனுக்கு அவன் குடும்பத்த பாக்கவே சரியா இருக்கு. இந்த நெலமையில ....." அலமேலு இழுக்க, சேவியர் அவளை கையமர்த்தினார்.

"கவலப்படாதம்மா...செலவ நான் பாத்துக்குறேன்."

"எதுக்கு நீ பாக்கணும்.....எங்கிட்ட ஏதும் கடன் வாங்கியிருக்கியா என்னா.....?" என்ற கைலாசத்தின் குரலில் லேசான கோபம் தொனித்தது. சேவியர் அவர் கைகளைப் பிடித்துக்கொண்டார்.

"அஞ்சறிவு ஜீவனோட வயிறு காயக்கூடாதுன்னு நீ சோறு போடுற. அந்தமாதிரி நான் எந்த நல்லகாரியமும் செஞ்சதில்ல. அதுக்கு என் வறுமைதான் காரணம். இப்ப நான் ஓரளவு

வசதியாயிருக்கேன். என் மகன் நல்ல வேலையில இருக்கான். அவன் மாசாமாசம் என் கைச்செலவுக்குன்னு கணிசமா ஒரு தொகை தருவான். நான் அத என் பேர்ல பேங்க்குல போட்டு வச்சிருக்கேன். அந்தப்பணத்துல காய்ஞ்சி கெடக்குற கெணறு வயத்துல பால் வார்க்கணும்னு ஆசப்படுறேன். பாக்கப்போனா இதுகூட நாய்க்கு ஒரு கவளம் சோறு போடுறதுமாதிரிதான். தயவுசெஞ்சி ஒத்துக்கப்பா...."

சேவியரின் குரல் நடுங்கியது. கைலாசம் தவிப்போடு அலமேலுவைப் பார்க்க அவளுக்கும் திகைப்புதான்.

"என்னாப்பா எதுவுமே பேசமாட்டேங்குற......."

"இந்த முயற்சி வேணாம்னு தோணுது. ஏன்னா என்னால அவ்ளோ பெரிய தொகைய திருப்பித்தரமுடியாது. அதுக்காவ இனாமா வசதி பண்ணிக்கவும் விருப்பமில்ல. "

"அப்புடின்னா ஒரு உபகாரம் செய்யி...."

"சொ.......சொல்லு......"

"அத இப்ப சொல்ல மாட்டேன். அப்புறமா சொல்றேன். பயப்படாத, ஒன்னால தரமுடிஞ்சததான் கேப்பேன்." சேவியர் உறுதியாகச் சொல்ல கைலாசத்துக்கு வேறுவழி தெரியவில்லை. அரைமனதாக சம்மதித்தார்.

"வேணாமுன்னு சொன்னா வுடமாட்டேங்குறாரே. எதுக்கு இதெல்லாம்...." என்று அலமேலு புலம்பித்தீர்த்து விட்டாள். மறுநாளே கிணறு சுத்தம் செய்ய இரண்டு ஆட்கள் வந்தனர்.

"ஒருநாள் கூலியோட நூறு ரூவாசேத்து குடுங்க. ஏன்னா இது ஆபத்தான வேல..." என்றனர். சேவியர் ஒத்துக்கொண்டார். இருவரும் மெல்ல கிணற்றில் இறங்கினர். வாளியை கயிறோடு இணைத்துச் சகடையில் போட்டு சேவியர் உள்ளிறக்க ஆட்கள் குப்பையை வாளியில் நிரப்பி மேலே அனுப்பினர். சேவியர் குப்பையை கிணற்றின் பின்பக்கமிருந்த வெற்றிடத்தில் கொட்டினார்.

"குடுப்பா. நான் கொஞ்சநேரம் இழுக்குறேன்." கைலாசம் சொல்ல, மறுத்தவர்,

"தண்ணி நெறஞ்ச வாளியையே சரசரன்னு இழுத்து மேல கொண்டாந்துடுவோம். அதுவே பெரிய விசயமாத் தோணாது. இது வெறும் குப்பதான....நான் பாத்துக்குறேன், வுடு...." என்று கூறிவிட்டு உற்சாகமாக கயிற்றை இழுத்தார். ஒருவழியாகக் கிணற்றைச் சுத்தம் செய்து தூர் வாரிவிட்டு ஆட்கள் மேலேறியபோது ஒருநாள் ஆகியிருந்தது. அடுத்ததாக கைலாசமும், சேவியரும் பக்கத்து டவுனுக்கு சென்று தண்ணீர் டேங்க் வாங்கிவந்தனர். கைலாசம் வாய் திறக்காமல் சேவியர் இழுத்த இழுப்புக்கெல்லாம் போனார்.

"இந்த மனுசன் செய்யிற காரியம் பலிதமாகுமான்னு தெரியலையே...."

அலமேலு கவலைப்பட்டபோது

"காரியம் பலிதமாகுமா ஆகாதான்னு தெரியல. ஆனா சேவியரோட ஆசைக்கு நான் குறுக்க நிக்கமாட்டேன். அவன் நமக்கு சொந்தமுமில்ல பந்தமுமில்ல.ஆனா உரிமையோட வந்து நம்ம வூட்டுல ஒரு காரியம் செய்யிறான்னா அதுக்கு எம்மேல அவன் வச்சிருக்க அன்புதான் காரணம். அதனால நான் வாயத் தொறக்கமாட்டேன்" என்றார் கைலாசம் உறுதியாக.அடுத்தநாள் பிளம்பரும், கொத்தனாரும் வந்தனர். சேவியர் அவர்களிடம் வீடியோவைக் காட்ட, இருவரும் சட்டென புரிந்து கொண்டனர். அடுத்தகட்ட வேலை ஆரம்பமானது. மழைநாளில் உள்பக்கமாக சரிந்திருக்கும் ஓடுகளில் விழும் மழைநீர் வாரியில் சேகரமாகி கூடல்வாயோடு இணைக்கப்பட்டிருக்கும் குழாய் வழியாக முற்றத்திலிருக்கும் தொட்டிக்குள் கொட்டும். அந்த தொட்டி இடிக்கப்பட்டு அங்கு டேங்க் வைக்கப்பட்டது. உள்ளே மணல், கரி, கூழாங்கற்கள் நிரப்பப்பட்டன. டேங்க்கில் சுத்திகரிக்கப்படும் நீர் வடிகட்டப்பட்டு குழாய் மூலமாக பதினைந்தடி தொலைவில் கொல்லையிலிருந்த கிணற்றுக்கு போகும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. வீட்டிலிருந்து தண்ணீர் வெளியேறும் வழியாக குழாயை கொண்டு சென்று கிணற்றின் பக்கவாட்டு சுவற்றில் இணைத்து முடித்தபோது சேவியருக்கு பெரிய சாதனை செய்தது போலிருந்தது.

"இந்த டேங்க்குக்குள்ள குழாயை இணைக்காம நேரடியா கெணத்துல தண்ணி வுழுறமாதிரி செஞ்சா என்னா....?" அலமேலு மெதுவாக கேட்டாள்.

"அம்மாடி, மழைத்தண்ணி பரிசுத்தமானது. கொழந்த மனசுமாதிரி. ஆனா அது ஓட்டுல வுழுறப்ப நெறைய தூசியும், அசுத்தமும் அதுல கலந்துடும். அத சுத்தம் செய்யத்தான் இந்த ஏற்பாடு. அப்புடி சுத்தம் செய்யப்பட்டு கெணத்துல சேகரமாகுற தண்ணிய சமைக்கவும், குடிக்கவும் பயன்படுத்திக்கலாம்" என்ற சேவியரின் முகத்தில் அவ்வளவு பிரகாசம்.

"டேங்க்குக்குள்ள இவ்ளோ போட்ருக்கீங்களே. இதெல்லாம் நெசமாலுமே தண்ணிய சுத்தப்படுத்துங்களா.....?" கொத்தனார் நம்பமுடியாமல் கேட்டார்.

"ஆமாம்ப்பா. இது ஒரு அற்புதமான சுத்திகரிப்பு முறை. இதுல சுத்தம் செய்யப்பட்டு வர்ற தண்ணி அவ்ளோ சுவையா இருக்கும்" என்றவர்,

"கிட்டங்கி தயாராயிருச்சி.இனிமே தண்ணி வர வேண்டி யதுதான் பாக்கி" என்றார் உற்சாகமாக.

"இவ்ளோ பெரிய காரியம் செஞ்சிருக்கே. இது வெற்றியடையணும்."

"நிச்சயம் வெற்றியடையும்ப்பா. எனக்கு நம்பிக்கையிருக்கு"

அழுத்தமாகச் சொன்ன சேவியர் கிணற்றை எட்டிப்பார்த்தார்.

கிணறு குப்பை, தூசியின்றி. பளிச்சென்றிருந்தது. துளி நீருக்காக அது காத்து கிடந்தது. கிணற்றின் மேல்புறம் சன்னமான இழைகளால் பின்னப்பட்ட சல்லடை கொண்டு மூடப்பட்டது. "போன்ல ஊர்க்கத எவ்வளவோ பேசுன நீ கெணறு வத்திப்போச்சின்னு சொல்லவேயில்லையேப்பா...."

"தோணலப்பா. ஒங்க ஊர்லயும் தண்ணியில்ல, இங்கேயும் தண்ணியில்ல. எங்கப்பாத்தாலும் தண்ணிப்பஞ்சம். அதனால அது பெருசா தோணல" என்ற கைலாசம் சட்டென ஞாபகம் வந்தவராய் கேட்டார்.

"ஏதோ உபகாரம் செய்யணும்னியே.சொல்லுப்பா, செஞ்சி டுறேன்."

"இப்ப சொல்லமாட்டேன். நேரம் வர்றப்ப சொல்றேன்."

சேவியர் சொல்லிவிட்டு ஊருக்கு கிளம்ப கைலாசம் மனமின்றி வழியனுப்பி வைத்தார்.

ஐப்பசி வந்தது. இரண்டு நாட்கள் கனமான மழையும், விட்டு, விட்டு நான்கு நாட்கள் லேசான மழையும் பெய்தது. இடி, மின்னலுடன் முதல்மழை வெளுத்து வாங்கியபோது அலமேலு நிலைகொள்ளாமல் தவித்தாள்.

"கெணத்துல தண்ணி சேகரமாகுமாங்க....?"

"சேகரமாகும்.....ஆகணும். பாக்கலாம்....." என்ற கைலாசம் மறுநாள் விடிந்ததும் அவசரம், அவசரமாக ஓடிப்போய் கிணற்றை எட்டிப்பார்த்தார். கிணற்றில் கால்வாசியளவுக்கு தண்ணீர் தளும்பிக்கொண்டிருந்தது. பின்னோடு வந்து பார்த்த அலமேலுவின் கண்களில் கண்ணீர். ஒருவழியாக மழை ஓய்ந்தபோது அரைக்கிணற்றுக்கு மேல் தண்ணீர் நிரம்பியிருந்தது.

"யப்பா,நீ செஞ்ச காரியம் வெற்றியடைஞ்சிடுச்சிப்பா ....." கைலாசம் அலைபேசியில் அழுதுவிட்டார். சேவியரின் கண்களிலிருந்து கரகரவென்று கண்ணீர் வழிந்தது.

"தண்ணி அரைக்கெணறு தாண்டிடுச்சி. இனிமே நெலத்தடி நீரும் ஊற ஆரம்பிச்சிருமாம். எம்மவன் வந்து பாத்து அசந்துட்டான். பக்கத்து வூட்டு பெருமாளுக்கும் மழைத்தண்ணிய சேகரிக்கணுங்குற ஆச வந்துருச்சி. நெறையபேரு வந்து எப்புடி செஞ்சீங்க, என்னா வெவரம்னு கேட்டமணியமா இருக்காங்க. எல்லாம் ஒன்னாலப்பா...."

"நீ சொன்ன சேதி தவிச்ச வாய்க்கு தண்ணி குடுத்தாப்ல இருக்குப்பா.கெணறு வத்தி கெடந்தது பாத்து பதறிப் போயிட்டேன். நல்லா வாழ்ந்த குடும்பம் நடுத்தெருவுக்கு வந்துட்டா அதப்பாத்து வயிறு கலங்குமே. அப்புடித்தான் என் வயிறும் கலங்குச்சி. அறுவது வருசமா தண்ணி விருத்தியாயிட்டு இருந்தகெணறு தரிசு நெலமாட்டம் காய்ஞ்சி கெடந்ததப்பாத்து என் உற்சாகமெல்லாம் வடிஞ்சி போச்சி. அத எப்புடியாவது பழைய நெலமைக்கு கொண்டுவரணும்னு நான் முயற்சி மட்டுந்தான் செஞ்சேன். இயற்கை வாரி வழங்கி என் முயற்சிய வெற்றியடைய வச்சிடுச்சி.....ரொம்ப சந்தோசமா இருக்குப்பா. இந்த நேரத்துல ஒங்கிட்ட ஒரு உபகாரம் கேக்குறேன். செய்வியாப்பா....?"

"சொல்லு சேவியரு. நான் என்னா செய்யணும்...?"


"கெணத்துத்தண்ணிய ஒரு பாட்டில்ல புடிச்சி இந்தப்பக்கம் யாராவது வந்தாங்கன்னா அவுங்ககிட்ட குடுத்து வுடுப்பா. குடிக்கணும்னு ஆசையா இருக்கு."

சேவியர் குழந்தைபோல கெஞ்சினார்.

| வாசிப்பு பற்றிச் சில பிரபலங்கள் |
|---|
| **மகாத்மா காந்தி** |
| ஒருகோடி கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது, ஒரு நூலகம் கட்டுவேன் என்று பதிலளித்தாராம் . |
| **ஜவஹர்லால் நேரு** |
| தனிமைத்தீவில் தள்ளப்பட்டால் என்ன செய்வீர்கள் என்று கேட்ட போது புத்தகங்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து விட்டு வருவேன் என்று பதிலளித்தாராம் . |
| **பெட்ரண்ட் ரஸல்** |
| என் கல்லறையில் மறக்காமல் எழுதுங்கள் இங்கே ஒரு புத்தகப் புழு உறங்குகிறதென்றாராம் . |
| **ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்** |
| மனிதனின் ஆகப் பெரிய கண்டுபிடிப்பு எது என்று வினவப்பட்டபோது சற்றும் யோசிக்காமல் புத்தகம் எனப் பதிலளித்தார் . |
| **நெல்சன் மண்டேலா** |
| வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம் சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும் என்றாராம். |
| **லெனின்** |
| பிறந்த நாளுக்கு என்ன வேண்டும் என கேட்டபோது புத்தகங்கள் வேண்டும் என சற்றும் தயக்கமின்றிக் கூறிடக் குவிந்த புத்தகங்கள் பல லட்சம்... |
| **சார்லிசாப்லின்** |
| ஒவ்வொரு படமும் நடிக்க ஒப்புக் கொள்ளும்போது வரும் முன் பணத்தில் முதல் நூறு டாலருக்கு புத்தகம் வாங்குவாராம். |
| **வின்ஸ்டன் சர்ச்சில்** |
| ஒரு குழந்தைக்கு நீங்கள் வாங்கித்தரும் ஆகச் சிறந்த பரிசு ஒரு புத்தகம்தான் என்றார். |
| **மார்டின் லூதர்கிங்** |
| பயங்கரமான போராட்ட ஆயுதங்கள் எவை என கேட்கப்பட்டபோது புத்தகங்கள்தான் என்றாராம். |
| **பகத்சிங்** |
| தான் தூக்கிலிடப்படுவதற்கு ஒரு நிமிடம் முன்பு வரை வாசித்துக்கொண்டே இருந்தாராம் |

# உலக மயமாதற் பொறியினில் மூழ்கி

ஜே.வி. விஜயசங்கர்



“அனைவருக்கும் வணக்கம். இது பெரியநாயகம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா 2020. நிகழ்வுகள் யாவும் நேர்த்தியாய் இடம்பெற யாவரும் ஒருநிமிட மௌனப்பிரார்த்தனையில் ஈடுபடுவோம்” என்ற வசந்தன் சேரின் கம்பீரக் குரலோடு விழா இனிதே ஆரம்பமாகியது. விளையாட்டு, கலை, கலாசார மற்றும் தவணைப் பரீட்சைகளில் சோபித்த அனைவரையும் கௌரவிக்கும் நிகழ்வு அது. பரிசில்பெறுபவர்கள் யாவரும் ஏற்கனவே ஒழுங்குசெய்யப்பட்ட முறைமையின்படி தமது பெயரை சட்டையின் வலது பக்கத்தில் குத்தியவர்களாக பெருமிதத்துடன் அமர்ந்திருக்கிறார்கள். அந்த அணியில் இறுதி நிரையில் நான்காவதாக அமர்ந்திருப்பவள் தான் நித்தியா.

படிப்பில் அவள் மிகவும் கெட்டிக்காரி. எப்போதும் முதல் நிலையிலேயே இருந்துவருகிறாள். அன்று அவளுக்கு க.பொ.த உயர்தர இரண்டாம் ஆண்டின் பாடசாலை மட்ட இறுதிப்பரீட்சை நிறைவடைந்து பெறுபேறுகள் வழங்கப்படவிருக்கின்றது. அதிபரின் கைகளால் றிப்போர்ட் வாங்குவது அவளுக்கு புதிதல்ல. ஆனால் இதுதான் இறுதித்தடவை. “செல்வி. சுந்தரம் நித்தியா அவர்களை அன்போடு அழைக்கின்றோம்” என்றவுடன் தனக்கே உரிய பணிவுடன் மேடை ஏறுகிறாள். “நித்தியா உன்ர ரிசல்ஸ்ஸ பாத்தா நீ டிஸ்ரிக்ட் பெ(க)ஸ்ட் வருவ என்ற நம்பிக்கை வந்திருக்கு. இண்டையோட ஏஎல் தேட்டீன் ப(டி)ச்சுக்கு லீவு விடுறம். இன்னும் சரியா ரெண்டு மாசம் இருக்கு. வீட்ட இருந்து நல்லா படிச்சு நல்ல ரிசல்ஸ் எடுக்கோணும்”என வாழ்த்தியபோது “ஓம் சேர்”என அதிபரின் கால்களில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு வீடுநோக்கி விரைகிறாள். ஏழ்மையிலும் சந்தோசமாக வாழும் குடும்பங்களில் அவளின் குடும்பமும் ஒன்று. அவளது அப்பா துவிச்சக்கரவண்டி திருத்தும் கடையை நடாத்தி வருகிறார். ஒருநாளைக்கு சிலவேளை ஐந்நூறு ரூபாய் கிடைக்கும். பலவேளைகளில் காற்றடிப்பதற்குக் கொடுக்கும் ஐந்து ரூபாயுடன் அவர் வீட்டுக்கு வந்ததே அதிகம். லீசிங் நிறுவனங்கள் மோட்டார் சைக்கிள்களை இலகுவில் வழங்குவதால் இப்படிப்பட்டவர்களின் வருமானம் குறைந்து விபத்துக்கள் அதிகரித்தமையே மிச்சம். அவரின் உழைப்பு அன்றாடம் உணவிற்கே போதாமல் இருந்த நிலையில்தான் நித்தியாவையும் அவளது நான்கு தம்பிமாரையும் படிப்பித்துவருகிறார். வீதி நெடுகிலும் மனதில் ஆயிரம் எண்ணங்கள் அவளுக்கு வந்துபோயின. கறுப்புக்கோட்டுடன் நீதிமன்றத்தில் நின்று வக்கீலாக

“கனம் கோட்டார் அவர்களே” எனத் தான் பேசுவது போன்ற உணர்வு அவளுக்கு. அந்த வீதியின் ஓரம் ராசாத்தி அக்காவின் புதிதாக கட்டப்பட்ட அழகான மாடிவீடு அவள் கண்களுக்குப் பட்டுவிட்டது.

“லோயர் ஆகி எங்கட ஓலை வீட்ட உடைச்சிட்டு இப்பிடி ஒரு வீடு கட்டி அப்பாக்குக் குடுக்கோணும். பாவம் அந்த மனுசன் அம்மா இல்லாம எங்கள வளக்க என்ன பாடுபடுது” தன் எண்ணங்களை அவளால் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

“ம்ஹ்ஹ்”

பெருமூச்சு விடுவதற்குள் நீலநிற கார் அவளைக் கடந்து சென்றது.

“நீலநிற கார் வடிவில்ல. நான் வெள்ளநிற கார் தான் எடுத்து அப்பாவையும் தம்பிமாரையும் ஏத்திக்கொண்டு எல்லா இடமும் சுத்திப்பாக்கோணும்” அவளுக்கே அவளை நினைத்து ஒரு சிரிப்பு

“இன்னும் எக்ஸாம் கூட எழுதேல்ல. அதுக்குள்ள மாடிவீடு கார்” தனது எண்ணங்களை தானே கிண்டலடித்தபடி வீடு நோக்கி விரைந்தாள். வீட்டை நெருங்கிய நித்தியாவுக்கு அவளது படலைக்கு முன்பாக வான் நிற்பதைக்கண்டு

“ எங்கட வீட்டுக்கு முன்னால ஆர்ர வான் நிக்கிது” என எண்ணியபடி படலையைத் திறந்தாள்.

“அப்பா ஆர் வந்திருக்கினம்”

“நித்தியா வந்து பார் ஆரெண்டு” தலையைக் குனிந்தபடி வீட்டிற்குள் நுழையும்போது சென்ட் நாத்தம் வயிற்றைக் குமட்டிக்கொண்டு வந்தது.

“நித்தியா நான் ஆரெண்டு சொல்லு பாப்பம்” நித்தியா உண்மையிலேயே அவர்களைப் பார்த்ததே இல்லை. முகத்துக்கு நேரே தெரியாது எனச் சொல்வது நாகரிகம் அல்ல என்பது அவளுக்குத் தெரியும்.

“ கண்ட முகம் மாதிரி இருக்கு” என இழுத்தாள்.

“என்ன கண்ட முகமோ? நான் கனடாக்குப் போய் முப்பது வருசமாகுது. இப்பதான் முதல்தரம் சிலோனுக்கு வாரன்” எனச் சிரித்தாள். “நித்தியா இப்ப சொல்லு பாப்பம் நான் ஆரெண்டு. உன்ட கொம்மாட சேப் அடிக்கேல்லயே”அப்போதுதான்

நித்தியாவுக்குப் புரிந்தது.

“பெரியம்மா”என்றாள்.

“உன்ட அம்மா கலியாணம் கட்ட முதலே நான் வெளிநாடு போயிட்டன். இது என்ர மூத்தமகள். அது ரெண்டாவது மகள். இது கடைசி மகன்.” என அறிமுகம் செய்து வைத்தாள். கட்டைப்பாவாடை போடுவதையே விரும்பாத நித்தியாவுக்கு பெரியம்மா ஜீன்சும் ரீசேட்டும் போட்டிருந்ததும் அவளது பிள்ளைகள் கையில்லாத ரீசேட்டும் காற்சட்டையும் போட்டிருந்ததும் சற்று நெருடலாகவே இருந்தது.

“சரி நாங்க வந்து கனநேரம் இண்டைக்குத் திருகோணமலைக்குப் போகோணும். உன்னைப் பாத்திட்டு போவம் எண்டு இருந்தம்” என்று விடைபெற முயற்சி செய்தார்கள். உடனே பெரியம்மா மெதுவாகக் கண்ணசைக்க அவளின் மூத்தமகள்

“நித்தியா உங்களுக்கு ஒண்டும் வாங்கிட்டு வரேல்ல. என்ட கஸ்பன்டிட தம்பிக்கு ஒரு அப்பிள் ஐபோன் வாங்கிட்டு வந்தனான். இந்தா அத நீ வச்சுக்கொள். நான் அவனுக்கு வேற வாங்கிக் குடுக்கிறன்” என அவளின் கைகளுக்குள் திணித்தாள்.

“இப்ப அவளுக்குப் போன் எல்லாம் வேணாம். டெஸ்ட் முடியட்டும்” என அவளின் அப்பா சுந்தரம் மறுத்துவிட்டார்.

“என்ன டெஸ்ட் முடியட்டுமோ. எங்கட நாட்டில ஒன்லைன்ல தான் டெஸ்டே நடக்குது. மனுசன் செவ்வாயில போய் குடியேறப்போறான். நீங்க செல்போன் வேணாம் என்றீங்க. என்ன சித்தப்பா நீங்க” என நக்கலடித்தபடி குபீரென சிரித்தனர். அடுத்தது பெரியம்மாவின் வேளை “சுந்தரம் நித்தியாவ வேண்டச்சொல்லு. நாங்க அங்க போனபிறகு வைபரில கதைப்பம். அதவிட அவள் பொம்பிளப்பிள்ள போற வழில அவளுக்கு ஆயிரம் பிரச்சினைகள் இருக்கும். நாட்டுச் சூழல் தெரியும் தானே. ஒரு போன் இருந்தா நல்லது தானே” நியாயம் கற்பித்தாள். இத்தனைக்குமிடையில் நித்தியாவின் உள்ளுணர்வு எப்படியாவது அதை வாங்கி விடத்துடித்தது. அவளும் சராசரிப்பிள்ளை தானே.

“சரி வாங்கு நித்தியா”அப்பாவின் அனுமதி கிடைத்துவிட்டது.

“சிம் போட்டு இருக்கு. பேஸ்புக் வட்ஸ்அப் எல்லாம் இன்ஸ்டோல் பண்ணியிருக்கு”என கூறியபடி

“நித்தியா நித்து”எனும் பெயரில் பேஸ்புக்கணக்கு ஒன்றை ஆரம்பித்து நித்தியாவைப் புகைப்படமெடுத்து அதில் பதிவேற்றிவிட்டு விடைபெற்றனர். அன்றுமுழுவதும் “நித்தியா நித்து” முகவரியிற்கு பல நட்பு விண்ணப்பங்கள் வந்தவண்ணம் இருந்தன. அவர்கள் புகைப்படமெடுக்கும்போது அவள் வெட்கப்பட்டு சிரித்த கணம் அத்தனை நடிகைகளும் தோற்றுப்போகும் அழகு அதில் பதிவாகியிருந்தமையே அதற்கு காரணம் அதனால் குறுஞ்செய்திகளும் விண்ணப்பங்களும் தொடர்ந்தவண்ணமே இருந்தன. வகுப்பு பிள்ளைகள் பேஸ்புக்கை பற்றிக் கதைக்கும்போது கோபப்படுகின்ற நித்தியாவில் ஏதோ மாறுதல். “நானும் பேமஸ் ஆயிட்டன். எனக்கும் நிறையப்பேர் ரிக்குவஸ்ட் குடுக்கினம். நாளைக்குப் படிப்பமே”என்று புத்தகங்களை மூடிவைத்துவிட்டவளுக்கு அன்றைய பொழுது ஏதோ நிலவில் கால்பதித்தது போல இருந்தது. கடிதஉறைபோல் காணப்பட்ட குறியீடு சிவப்பு இலக்கங்களால் நிறைந்தது.

“யூஆசோ பீ(டி)யூட்டிபுல்”என ஒருவரிடமிருந்து மட்டும் நூற்றைம்பது தடவைகளுக்கு மேல் வந்து தொங்கிக்கொண்டிருந்தது. அதனுள்ளே நுழைந்த நித்தியாவின் மனம் றெக்கைகட்டி பறக்கலாயிற்று. நானும் இவ்வாறு ரசிக்கப்படுகின்றேனா? என்னை அழகென வாழ்த்தும் “வினோத் கண்ணா”என்பவருக்கு ஒரு நன்றி கூட சொல்லாமல் விடுவது நல்லதல்ல.

“ரொம்ப தாங்ஸ்”என மட்டும் பதிலளித்தாள்

“நீங்க எவடம்”அதற்குள் மறுசெய்தி வந்துவிட்டது.

“பதில் போடுவமா? விடுவமா? இடத்த சொன்னாப்போல வீட்ட வரவா போறார். போடுவம்” என முடிவெடுத்தவளாக “நான் யாழ்ப்பாணம். நீங்க?”

“நானும் யாழ்ப்பாணம்தான்.நல்லூர்”

“நான் சாவச்சேரி”

“உங்கட பேர் என்ன?”

“என்ட பேர் நித்தியா. உங்கட பேர்?”

“வினோத்”

“என்ன செய்றீங்க”

“நான் பாங்கில வேலைசெய்றன். நீங்க?”

“நான் ஏஎல் படிக்கிறன். உங்களுக்கு எத்தின வயசு?” “25 . உங்களுக்கு?”

“19”

“ஓ.. தாங்ஸ் நித்தியா என்னோட கதைச்சதுக்கு”

“ஹா ஹா கதைச்சதுக்கெல்லாம் தாங்ஸா? ஓகே ஓகே. குட்நைட்”

“குட்நைட் இல்ல நித்தியா குட்மோர்னிங். நேரத்த பாரும் இப்ப விடியப்புறம் மூண்டு மணி”

“ஐயோ, உம்மளோட கதைச்சுக்கொண்டிருந்தா நேரம் போறதே தெரியிதில்ல. நான் படுக்கப்போறன் வினோத்”

“ஓகே நித்து கீப் இன் டச்” என்றவாறாக நாட்கள் சென்று அவர்கள் நட்பு காதலாக மாறி இருநாட்கள் ஆகிவிட்டது. மறுநாள் “நித்தியா நாளைக்கு என்ட பேர்த்டே. எனக்கு என்ன

கிப்(க)ட் தரப்போறீர்?"

"என்ன கிப்(க)ட் வேணும்?"

"கிப்(க)ட் எல்லாம் வேணாம். உம்மள நேரில சந்திக்கோணும்" அவள் சிரித்துவிட்டு "சரி எங்க மீட்பண்றது?" "நாளைக்கு உம்மட அப்பா கடைக்கு போயிருவார். தம்பி ஆக்களும் பள்ளிக்கூடம் போயிருவினம். நீர் உம்மட வீட்ட நில்லும். நான் அங்கவாறன்"
"ஐயோ வீட்ட வரவேணாம்"

"என்ன நித்தியா நான் உம்மள கலியாணம் செய்யப்போறன். பிறகு ஏன் பயப்படுறீர்" அவளை சம்மதிக்க வைத்துவிட்டான். காலை ஒரு பத்துமணியிருக்கும் காரொன்று வந்து வாசலில் நின்றது. உள்ளேயிருந்து கட்டுமஸ்தான வாலிபன் இறங்கினான். அன்றுதான் நித்தியா அவனை முதன்முதல் நேரில் பார்க்கிறாள்.

"முதன்முதலில் பார்த்தேன் காதல் வந்ததே." எனும் பாடல் அவளுக்கு பின்னணியில் இசைக்கப்படுவது போல இருந்தது. வெட்கப்பட்டு நின்று பின்னர் சுதாகரித்துக்கொண்டு இருவரும் பேசத்தொடங்கினர். அவர்களது பேச்சு விறாந்தையிலிருந்து அறைவரை நீடித்தது. மதியவேளையாகும் போது வினோத் விடை பெற்றான். அவளுக்கு எப்போதும் வினோத்தின் நினைவாகவே இருந்தது. அவளால் படிக்கமுடியவில்லை. அவளது புவியியல் கொப்பியில் தேசப்படத்திற்குப் பதிலாக அவனின் பெயரையே வரைந்தாள். அவ்வாறே பல மணிநேர உரையாடல்களும் பலநாள் சந்திப்புக்களும் இடம்பெற்றன. மாதம் உருண்டோடி பரீட்சை ஆரம்பித்தது. ஏதோ படித்தவற்றை வைத்து தமிழ்பாட பரீட்சையை ஒப்பேற்றிவிட்டாள். மூன்றுநாள் இடைவெளிக்குப்பின் இந்துநாகரிகப்பரீட்சை. மண்டபத்தினுள் செல்லும்போது நித்தியா நிலை தடுமாறி கீழேவிழுந்தாள். மயக்கம் அவளை ஆட்கொண்டது. உடனடியாக அருகிலிருந்த வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டாள். அவள் கர்ப்பமாக இருப்பது அப்போது தான் தெரியவந்தது. நித்தியாவின் வயதும் வினோத்தின் இளமையும் தவறிழைத்துவிட்டன.

"ஐயோ இப்படி ஆகிவிட்டதே. டெஸ்ட் எழுதிறதவிட முதல்ல வினோத்த கலியாணம் செய்யோணும். இல்லாட்டி இந்த சமூகம் என்னை பழி சொல்லும்"என எண்ணியபடி வினோத்திற்கு அழைப்பை மேற்கொண்டு நடந்தவற்றை கூறினாள்.

"கூல் நித்தியா நான் வந்து உம்மள எங்கட வீட்டுக்கு கூட்டிட்டு போறன்" என்ற வினோத்தின் வார்த்தையால் அப்பாவின் கருக்கலைப்பு யோசனையை அவள் மறுத்துவிட்டாள். அவனின் வார்த்தையை நம்பி பத்துமாதங்கள் ஆகிவிட்டன. வினோத் வரவுமில்லை அவன் தொலைபேசி இயங்கவுமில்லை. யாழ்ப்பாணத்தில் தான் எத்தனை வங்கிகள். எத்தனை கிளைகள். எங்குதான் தேடுவது அவனை.அன்று இரவு அவளுக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. தாயும் சேயும் வேறாக்கப்பட்டனர். தனது ஐபோனை கையிலெடுத்த நித்தியா "முகமறியா முகப்புத்தகக்காதல் என்னை கொன்றுவிட்டது" என ஸ்டேடஸ் ஒன்றைப் போட்டுவிட்டுத் தன்னுயிரை மாய்த்துக்கொள்ளத் தூக்குக் கயிறினுள் கழுத்தை நுழைக்கிறாள். குழந்தை பாலுக்காக வீரிட்டு கத்துகிறது. கயிற்றைக் கழற்றிவிட்டு ஓடி வந்துவிட்டாள்.

"காமென்டல வேலை இருக்காம் பிள்ள. போவியா?" அப்பாவிச் சுந்தரம் மெதுவாக கேட்கிறான்.

"ம்ம்"

"நாளைக்கு ஏத்திறத்துக்கு வீட்டடிக்கு பஸ் வருமாம் பிள்ள" பொழுது மெல்ல மங்கி மறுநாள் விரைவில் புலர்ந்துவிட்டது.

"பீப்"

"பஸ் வந்திட்டு பிள்ள" நித்தியா பஸ்ஸின் படியில் கால் வைக்கிறாள்.

"வாழநினைத்தால் வாழலாம் வழியா இல்லை பூமியில்".

பாடல் உள்ளே ஒலித்தபடி புறப்படுகிறது. தாத்தாவாகிய சுந்தரம் மீண்டும் அப்பாவாகக் குழந்தையை குளிப்பாட்டியபடி மாலையிடப்பட்ட தன் மனைவியின் படத்தை வெறித்துப் பார்க்கிறான். கண்ணீர்த் துளியொன்று உருண்டோடித் தரையில் விழுகிறது.

## மனித இலக்கணம்

செஞ்சீனத்தின் தலைவரான மாசேதுங் உண்மையான கம்யூனிஸ்டு எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றி பின்வரும் இலக்கணத்தை வகுத்துள்ளார். "கம்யூனிஸ்டு என்பவர் பரந்த உள்ளம் படைத்தவராக இருக்க வேண்டும். நேர்மையும் ஊக்கமும் உடையவராக விளங்க வேண்டும், புரட்சியின் நலன்களைத் தனது சொந்த உயிர்போல் கருத வேண்டும். தனது சொந்த நலன்களைப் புரட்சியின் நலன்களுக்குக் கீழ்ப்படுத்த வேண்டும். எந்தக் காலத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒரு கம்யூனிஸ்டு தனது சொந்த நலன்களை முன்னிறுத்தக்கூடாது. அவர் அவற்றை தேசத்தின் நலன்களுக்கும் மக்களின் நலன்களுக்கும் கீழ்ப்பட்டதாக்க வேண்டும். எனவே சுயநலம், வேலையில் அசிரத்தை, ஊழல், புகழ்நாட்டம் முதலியவை எல்லாம் மிகவும் இகழத்தக்கவை. ஆனால் சுயநலமின்மை, தனது முழுச் சக்தியையும் கொண்டு வேலை செய்வது, பொதுக்கடமைக்கு முழுமையான விசுவாசம், அமைதியான கடினமான உழைப்பு முதலியவை அவருக்கு உரியவையாகும்" எனக் கூறியுள்ளார்

# ஸஹாராவின் கனவு



ALF சன்பரா

ஒரு சாதாரண மிடில் க்ளாஸ் குடும்பத்தில் வாழ்ந்து வர்ற ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகையில் நான் சொல்லப்போற கதைக்குள்ள கொஞ்சம் வாழ்ந்து இருப்பீங்க. அந்த அளவுக்கு வலிகளும் வேதனைகளும் சின்ன சின்ன விஷயங்களுக்கு சந்தோசப்பட்டுகிட்டு வாழ்ந்து வரும் ஒரு அழகான குடும்பத்தை பத்தித் தான் இந்த கதையில் நான் சொல்லப்போறேன். இலங்கையில் பின்தங்கிய கிராமம் ஒன்றில் ஒரு குடும்பம் இருக்கு அந்தக் குடும்பத்தில் மொத்தம் அஞ்சு பேரு. இங்க ஒரு பத்து வயசு பையன் இருக்கான் அவன் பேரு ஸைன். அவனோட தங்கச்சி பேரு சஹாரா. அவனுக்கு இன்னொரு குட்டி தங்கச்சியும் இருக்கு அந்த குழந்தை பேரு சாரா.

ஸைனோட அப்பா ஒரு கூலித்தொழிலாளி தினமும் வெளியே போய் எதாவது வேலை கிடைக்குமா என்னு ஒவ்வொரு தெருவா அலைவாரு அன்னிக்கி என்ன வேலை கிடைக்குமோ அதை செஞ்சி கொடுத்துட்டு அவங்க தர்ற அஞ்சோ பத்தோ காசை வாங்கிட்டு வீட்டுக்கு தேவையான பொருளை வாங்கிட்டு வருவாரு.

நாட்டோட ஊரடங்கு காலம் முழுக்க பசியும் பட்டினியுமா இவங்க காலத்தை கடக்க வேண்டி இருந்தது. ஏன்னா இவங்க இருக்குற ஏரியாவுக்கு எந்த நிவாரணமும் வந்து சேரல்ல. இப்போ கொஞ்சம் நிலைமை சரியாகி பிள்ளைங்க ஸ்கூலுக்கும் போக ஆரம்பிச்சிட்டாங்க. நாடும் வழமையான நிலைக்கு திரும்பிடுச்சி.

ஸைனோட அம்மா ஒரு தையல் தொழிலாளி. பக்கத்தில் இருக்குற ஒரு கார்மெண்டுக்குப் போய் தச்சி கொடுத்துவிட்டு வருவாங்க. ஆனா இப்போதெல்லாம் ரொம்பவே உடம்பு முடியாம வீட்டில் இருக்காங்க. தொடர்ச்சியான இருமல் அவங்க கிட்ட இருக்கு. ஆனா இது என்ன நோய் ஏன் என்றெல்லாம் அவங்களுக்கு ஒண்ணுமே தெரியாது. அவங்களுக்கு ஸைனும் சஹாராவும் தான் ஹெல்ப் பண்ணுவாங்க.. அவங்களுக்கு ஏதோ குணப்படுத்த முடியாத வியாதி இருக்கும் என்னு எல்லோரும் நினைக்கிறாங்க. ஆனா அது என்னன்னு டாக்டர் கிட்ட காட்டுற அளவுக்கு அவங்க கிட்ட பணமும் இல்ல அரசாங்க வைத்திய சாலைக்கு 12 கிலோ மீட்டர் தூரம் போறதுக்கு வண்டியும் இல்ல.

“ஸைன் ! இங்க வா ..இந்த துணிகளுக்கு சாயம் போட வேண்டும். வந்து உதவி செய்” என்று அம்மா அழைக்க ஹோம் வேர்க்க வெச்சிட்டு வந்து சஹாராவும் ஸைனும் அம்மாவுக்கு உதவி பண்ணுறாங்க. அவங்களுக்கு உடம்பு சரியில்லாததால் பாதியிலேயே பசங்க கிட்ட வேலையை முடிக்க சொல்லிட்டு போய் ஓய்வெடுத்துகிட்டாங்க. ரெண்டு பேரும் விளையாடி விளையாடியே துணிகளைச் சாயம் போட்டு முடிக்குறாங்க. அவனுக்கு சஹாரா என்றால் ரொம்பவும் பிடிக்கும் .அவளுக்காக நிறையவே விட்டுக்கொடுப்பான். சஹாராவும் அப்படித்தான் ஸைன் என்றால் ரொம்பவும் பிடிக்கும்.

இப்படியே ஒருநாள் என்னாகுதுன்னா. ஸைனும் சஹாராவும் ஸ்கூலுக்கு போய்க்கொண்டே இருக்கும்போது வழியில் ஒரு கடையை பாக்குறாங்க. அது ஒரு புதுக்கடை .அங்க ஸ்கூல் பேக்ஸ் ‘இஸ்டேனரி திங்ஸ் என்னு நிறைய பொருட்களை அடுக்கி வெச்சிட்டு இருக்காங்க. ஒடனே சஹாரா அந்த கடைகிட்ட போய் அங்க இருக்குற ஒரு புத்தகப்பையை ஆர்வமா பார்த்து கொண்டு இருக்கா.

“என்னாச்சு சஹாரா .எதுக்காக இங்க வந்து நிக்குறே?”என்னு ஸைன் கேட்டதும்

“ஸைன் அண்ணா ...இங்க பாரேன் ..இந்த பேக் ரொம்ப அழகா இருக்கு இல்லே.... எனக்கு அந்த பேக் வேணும்!” என்னு மூஞ்ச சுருட்டிக்கிட்டே அவனை பார்த்து கேட்டாள் சஹாரா.. அவனும் அதை பார்த்துட்டு
“சரி..இப்போ வா ஸ்கூலுக்கு போகலாம் .அப்பறமா வந்து நாம இதை வாங்கிக்கலாம்”என்று அவளைச் சமாதானப்படுத்திக் கூட்டிட்டுப் போறான். இந்த பக்கம் ஸைனோட அப்பா ஒவ்வொரு வீடா தட்டி ஏதாச்சும் வேலை கிடைக்குமான்னு பார்த்து கொண்டே இருந்தார். நிறைய பேர் அவரை

கண்டுக்கவே இல்லை. அதோட இந்த ஏரியா ஆளுங்களுக்கு அப்படி வேலை செய்ய ஆளுங்க தேவைப்பாடும் இல்ல. அதனால அவர் *12* கிலோ மீட்டர் தூரத்தில் இருக்குற பணக்காரங்க இருக்க கூடிய அந்த பகுதிக்கு போகலாம் என்னு நினைக்குறாரு.உடனே வந்து ஸைனோட அம்மாகிட்ட இந்த விஷயத்தை சொல்ல அவங்க.

"நம்ம வீட்டில் இருக்குற அந்தப் பழைய சைக்கிளை சரி பண்ணிக்கிட்டு போங்க... பசங்களுக்கு நான் சொல்லிக்கிறேன்... அவங்களுக்குப் பாடபுத்தகம் வாங்கணும் ...அல்லாஹ்வின் பாதுகாப்பு உங்களுக்கு எப்பவும் இருக்கும்"என்று துஆ செஞ்சி அனுப்பி வைச்சாங்க. அவரும் அந்தத் துருப்பிடிச்ச வண்டியை வழியில் ஒவ்வொரு முறையும் சரி பண்ணிக்கிட்டே அந்த பணக்காரங்க வாழுற இடத்தை நோக்கி போனார். ஸ்கூல் முடிஞ்சதும் ஸைனும் சஹாராவும் பேசிக்கிட்டே நடந்து வர்றாங்க.

"எனக்கு எப்போ அந்த பேக்கை வாங்கித்தருவே" என்று கேட்டாள்.

"நான் போய் அம்மா கிட்ட சொல்லி உனக்கு அதை வாங்கித்தருவேன் " என்றான் ஸைன்.

"நீதான் இந்த உலகத்திலேயே நல்ல அண்ணன்." என்று சந்தோசப்பட்டாள் சஹாரா. வீட்டுக்கு போனதும் ஸைன் அம்மாகிட்ட போய் சஹாரவுக்காக அதை வாங்கிக் கொடுக்கணும் என்று சொல்லப் போனான். ஆனா அவங்க சாராவை குளிப்பாட்டி கொண்டே இருமிக்கொண்டிருந்தார்கள்.

"வா ஸைன் ..சஹாரா எங்கே?"

"அவ பின்னாடியே வர்றாம்மா."

"உங்க அப்பா வீட்டில் இல்லை. வேலைக்காக ரொம்ப தூரத்துக்கு பயணம் போய் இருக்காரு. ரெண்டு பேரும் என்னைக் கரைச்சல் பண்ணாம நல்ல பிள்ளைகளா நடந்து கொள்ளனும். கொஞ்ச நேரத்துக்குச் சாராவைப் பார்த்துட்டு இருங்க. பிள்ளைக்குக் கொடுக்கப் பால்மா வாங்கணும். பணம் இல்லை. நான் போய் சாயம் போட்ட துணிகளை கார்மெண்டுக்கு கொடுத்துட்டு கொஞ்சம் பணம் வாங்கிட்டு வர்றேன்."என்றார். பணம் இல்லை என்ற வார்த்தையைக் கேட்டதும் ஸைனுக்கு ஒன்னும் புரியவில்லை. இந்த நிலையில் எப்படி சஹாராவுக்கு பேக் வாங்க முடியும்?...முடியவே முடியாது இல்லையா. அதனால் சோகமாகவே இருந்தான்.

கொஞ்ச நேரத்தில் எல்லாம் அவங்க கார்மெண்டுக்கு போய்விட இருவரும் சாராவை பார்த்து கொண்டு இருந்தார்கள்.

"என்னாச்சு ஸைன் ...அம்மாகிட்ட சொன்னாயா?"என்று ஆர்வமாக கேட்டாள் சஹாரா.

"இல்ல. சஹாரா ..அவங்க கிட்ட இப்போதைக்கு பணமே இல்லையாம் ...சாராவுக்கு பால்மா வாங்க கூட பணமே இல்லை " என்று சொன்னதும் சஹாரா முகம் மாறியது...

"எங்கட க்ளாஸ்ல எல்லாரும் நல்ல நல்ல பேக்ல தான் புத்தகங்களை கொண்டுவருவாங்க.. என்னோட பேக்கை பாரு." அது ஒரு சொப்பின் என்பதே அவளது கவலையாக இருந்தது.

"எனக்கு தெரியும் சஹாரா... நான் எப்படியாவது அந்த பேக்கை உனக்கு வாங்கி தருவேன்" என்று அவளை மீண்டும் சமாதானம் செய்தான் ஸைன். இந்த நிலையில் ஸைனோட அம்மா பாதையில் போய்க்கிட்டு இருக்கும் போது ஒரு மரக்கறி விக்கிறவன் வண்டியில் மோதி கீழே விழ அவங்க கொண்டு போன துணிகளில் தக்காளி அது இது என்று எல்லாம் நசிந்து அழுக்காகி விட்டது.

அவனது காய்கறிகள் கீழே விழுந்ததால் அவன் அவளை கண்டபடி திட்டிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான். அவளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அந்த வழியில் வந்த கார்மெண்டில் வேலை செய்யும் பெண்ணொருத்தி இதனை கண்டு அவர்களை தூக்கி நிறுத்தி துணியையும் எடுத்து கொடுத்துவிட்டு என்ன நடந்தது என்று விசாரித்தார்.

"இந்த துணியை இதே நிலையில் கொடுத்தால் உங்களுக்கு அவன் பணமே தரமாட்டான்.. போய் கழுவி காயவைத்து கொண்டு வந்து கொடுங்க"என்று சொல்ல அழுகையை அடக்கி கொண்டு அவள் வீடு வந்து சேர்ந்தாள். நடந்தவற்றை பிள்ளைகளிடம் சொல்ல

"கவலைப்படாமல் இருமா.. நாங்க இதை கழுவி காய வைக்கிறோம்." என்று சஹாரா அம்மாவிடம் சொன்னாள். அவர்கள் மூவரும் சேர்ந்தே அவற்றை மீண்டும் கழுவி சாயமிட்டு காயப்போட்டனர். மூன்று வயது சாராவுக்கு கொடுக்க பால்மா இல்லை .தாய்ப்பாலும் சுரக்கவில்லை. பிள்ளை அழுது கொண்டே இருக்க வீட்டில் இருந்த கொஞ்சம் கோதுமையை குழப்பி கொடுத்தாள் அம்மா.அப்போது மிகவும் சோர்ந்த நிலையில் ஸைனின் அப்பா வீட்டுக்கு வந்து சேர்ந்தார். அப்பா என்று இரு பிள்ளைகளும் அவரை ஓடிப்போய் அணைத்துக் கொண்டனர்.

"ஏதாவது வேலை கிடைத்ததா?"என்று ஆர்வமாக அம்மா கேட்டார்.

"ஒரு வீட்டில் தோட்டத்தைத் துப்பரவு செய்யச் சொல்லிச் சொன்னார்கள்.."

"பணம் கொடுத்து இருப்பாங்களே.. பெரிய பணக்காரங்க தானே !" என்று ஹிதாயா உம்மா ஆர்வமாக கேட்க அவர் முகம் இன்னும் சோர்ந்து போனது.

"ஏழைகளுக்கு இருக்குற இரக்கமும் கருணையும் பணக்காரங்க கிட்ட இல்லையே ஹிதாயா. தோட்ட வேலை செய்ய ஒருத்தனைக் கூப்பிட்டோமே அவன் சாப்பிட்டானா இல்லையா என்று எட்டிப்பார்க்கும் அளவுக்குக் கூட அவங்க மனசில ஈரமில்லையே... என்ன செய்யுறது நம்ம பசங்களை நல்ல படியாக வளர்த்து எடுக்கணும் ...அதுக்கு கஸ்டப்பட்டா தான்

முடியும். அவங்க சொன்னதை விட மேலதிகமாகவே வேலையை முடிச்சி இருந்தேன் .ஆனா இவ்வளவு தான் கொடுத்தாங்க." என்று பணத்தைக் காட்ட அந்த பணமோ பால்மா மட்டுமேனும் வாங்கப் போதாததாக இருந்தது.

"என்ன செய்வது?இந்நிலையில் நாம புத்தகப்பையை பற்றிப் பேசாமல் இருப்பது நல்லது சஹாரா" என்று ஸைன் அவளை அழைத்து கொண்டு மறு அறைக்கு போய்விட்டான். இப்படியே நாட்கள் நகர ஒருமுறை ஸைனுடைய பாடசாலையில் ஒரு மெய்வல்லுனர் போட்டி நிகழ்ச்சி நடைபெற இருந்தது. நோட்டீஸ் போர்டில் அதனை பார்த்துவிட்டு ஸைனுக்கு ஒரே சந்தோஸம். அதில் இருந்த பரிசு விபரம் அவனை மிகவும் தூண்டியது. முதல் பரிசாக ஒரு பெரிய வெற்றிக்கோப்பை இரண்டாவது ஒரு புத்தகப்பை மூன்றாவது ஒரு தொகைப் பணம். இவற்றில் இரண்டாவதாகவோ மூன்றாவதாக வந்தாலோ கண்டிப்பாக சஹாரவுக்கு ஒரு அழகிய புத்தகப்பையை கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை பிறக்க முதல் நபராக ஓட்டப்போட்டிக்குப் பெயர் கொடுத்தான். போட்டி நாளும் வந்தது. சஹாராவும் இந்த போட்டியில் அண்ணன் வெற்றி பெற வேண்டிக்கொண்டே இருந்தாள். போட்டி ஆரம்பித்ததும் அவன் எண்ணம் முழுக்க முழுக்க சஹாரா மீதும் பரிசுகள் மீதுமே இருந்தது. நடுவில் கொஞ்சம் பின்வாங்கிய ஸைன் சஹாராவின் உற்சாக வார்த்தைகள் கொடுத்த தெம்பினால் உத்வேகம் பெற்று ஓடிஓடி ஒரு கட்டத்தில் எல்லோரையும் முந்தி முதலிடமே பெற்று அந்த களைப்பில் மயங்கி விழுந்தான். எல்லோரும் அவனைத் தூக்கித் தண்ணீர் தெளித்து எழுப்ப "சேர் சேர் நான் ரெண்டாவதா தானே வந்தேன் ?"என்று ஆர்வமாய் கேட்டான். ஒருகணம் கேள்விக்குறியோடு மௌனமாக நின்ற ஹெட் மாஸ்டர் "டேய் நீதாண்டா முதலாவது.."என்றதும் ஸைனால் இதைத் தாங்கவே முடியவில்லை. அவன் ஆசைப்பட்டது போல் இரண்டாவது அல்லது மூன்றாவது வந்திருந்தால் சஹாராவின் நீண்டநாள் ஆசையை நிறைவேற்றி இருக்க முடியும். இப்போது இந்த வெற்றிக்கோப்பையை வைத்துக்கொண்டு என்னதான் செய்வது? முகத்தில் கொஞ்சம் கூட சந்தோசமே இல்லாமல் தான் அதைப் பெற்றுக்கொண்டான். மற்றப் பரிசுகளைப் பெற்ற பிள்ளைகளிடத்தே போய் பரிசை மாற்றிக்கொள்ளுவோமா என்றும் கேட்டுப்பார்த்தான். அவன் நினைத்தது நடக்க வில்லை. இவை எல்லாவற்றையும் தூர நின்று அந்த ஹெட் மாஸ்டர் பார்த்துக்கொண்டே தான் இருந்தார். ரொம்பவும் சோகமாக ஸைன் வீட்டுக்கு நடந்தான். அப்போது ஸை னுடைய அப்பா மார்க்கெட்டில் ஏதாவது வேலை கிடைக்குமா என்று பார்த்துக் கொண்டிருந்தார். அந்த இடத்திற்கு ஒரு நபர் வந்தார். அது வேற யாரும் இல்லை. ஸைனுடைய டீச்சர் அந்த ஹெட் மாஸ்டர் தான். ஸ்கூலில் நடந்த விடயங்களைச் சொல்லி டீச்சர் அவர்களின் குடும்ப நிலை பற்றி விசாரித்தார். அதன்பிறகு தான் உண்மையான நிலைமை புரிந்தது.

"உங்களுடைய மகன் ஸைன் உண்மையிலேயே நன்றாகப் படிக்கக் கூடிய பையன்.. அவனை உங்க குடும்ப சூழல் பாதிக்க கூடாது.. ஒன்று செய்யுங்கள்." நாளைல இருந்து எங்க வீட்டுக்குக் காலையில் வாங்க. தோட்டத்தை பராமரிக் குறது. காவல் பாக்குற வேலையைச் செய்ங்க...உங்களுக்கு நான் தினக்கூலி தருகிறேன்." என்கிறார். ஸைனுடைய அப்பாவுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. இறைவன் இப்படி ஒரு விடிவை தருவான் என்று கனவிலும் நினைக் கவில்லை அவர். இருவரும் முசாபாஹ் செய்து கொண்டனர். அத்தோடு ஒரு பெருந்தொகை பணத்தை முற்பணமாகவும் கொடுத்தார்.

மகிழ்ச்சியோடு அவருக்கு நன்றி சொல்லி விட்டு மகன் ஆசைப்பட்ட அந்த அழகிய பையையும் இன்னும் தேவையான பொருட்களையும் வாங்கிக்கொண்டு மனத்திருப்தியுடன் வீடு சென்றார் அவர். மகனும் அதே நேரத்தில் அங்கு வந்து சேர்ந்தான். அப்பாவிடம் சஹாரா கேட்ட அழகிய பையை கண்டதும் பூரிப்பில் ஓடிப்போனான். உள்ளே சென்று நடந்தவற்றைச் சொல்ல சஹாராவும் ஸைனும் ஹிதாயாவும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அதோட இறைவனுக்கு நன்றியும் சொன்னார்கள். சஹாரா புத்தகங்களை அதற்குள் அடுக்கி அணிந்து அழகு பார்த்தாள். ஸைனுக்கு இப்போது தான் அந்த வெற்றிக்கோப்பை ஒரு பெறுமதியாகவே தெரிய ஆரம்பித்தது.

## இளங்கீரன்

*யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர், சிறுகதை ஆசிரியர், நாடக விற்பன்னர், திறனாய்வாளர். மலேசியாவில் தினமணிப் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்த இவர், இலங்கையில் தொழிலாளி, ஜனவேகம் ஆகிய அரசியல் ஏடுகளின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை ஸ்தாபித்தவர்களில் ஒருவராவார்.இவர் 1960களின் முற்பகுதிகளில் இலங்கையில் மரகதம் என்னும் கலை இலக்கியச் சஞ்சிகையை வெளியிட்டார். இவர் 1948 இல் எழுத்துலகில் பிரவேசித்து ஒரே அணைப்பு, மீண்டும் வந்தாள், பைத்தியக்காரி, பொற்கூண்டு, கலாராணி, மரணக்குழி, காதலன், அழகு ரோஜா, வண்ணக்குமரி, காதல் உலகிலே, பட்டினித் தோட்டம், நீதிபதி, எதிர்பார்த்த இரவு, மனிதனைப் பார், மனிதர்கள், புயல் அடங்குமா?சொர்க்கம் எங்கே?, மனிதர்கள், இங்கிருந்து எங்கே?, காலம் மாறுகிறது, மண்ணில் விளைந்தவர்கள், அவளுக்கு ஒரு வேலை வேண்டும், அன்னை அழைத்தாள் ஆகிய நாவல்களையும், தென்றலும் புயலும், நீதியே நீ கேள்!, ஈழத்து முற்போக்கு இலக்கியமும் இயக்கமும், தேசிய இலக்கியமும் மரபுப் போராட்டமும், பேராசிரியர் கைலாசபதி நினைவுகளும் கருத்துக்களும் ஆகிய நூல்களையும் இவர் எழுதியுள்ளார். மேடையேறியது.இவரது திறமைக்காக 1992 இல் முஸ்லிம் சமய கலாச்சார ராஜாங்க அமைச்சினால் விருதும், தாஜீல் அதீப் என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இலக்கியச் செம்மலர், விஸ்வப்பிரசாதினி ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார்.*

# சிறுகதை பற்றி முகநூலில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பல ஆளுமைகளின் பதில்கள்

**கேள்வி**

சிறுகதை என்றால் என்ன என இதுவரை யாரும் வரையறுக்கவில்லை. குறைந்த நேரத்தில் வாசிக்கக்கூடிய ஒரு சம்பவம் பற்றிய விபரிப்பு எனச் சொல்லலாம் எனப் பலர் கூறியுள்ளனர். ஆகக் கூட இரண்டு பாத்திரங்கள் இருந்தால் போதும் என்றும் சிலர் கூறுகின்றனர். ஒரு கதையைப் படித்தவுடனே இது சிறுகதையல்ல என்று கூறுவதற்கான அளவுகோல் உண்டா? இது எனது வினா? இதற்கு விடை தெரிந்தவர்கள் பதில் தாருங்கள்.

### சின்னத்துரை சுந்தரலிங்கம்

ஒவ்வொரு வாசகனும் தனக்கென்று அளவு கோலொன்றினை வைத்திருக்கின்றான். அதே மாதிரியே படைப்பாளியும்.

### சதாசிவம் குருநாதபிள்ளை

சாதாரணமாகக் கதைகளைக் குறுங்கதை, சிறுகதை, குறுநாவல்,நாவல் என்ற வரையறைக்குள் அடக் கலாம். அண்மையில் ஒரு பிரபல ஈழத்து எழுத்தாளரின் சிறுகதைத் தொகுப்பு ஒன்று கிடைத்தது. பத்து சிறு கதைகள். 160 பக்கம். சராசரியாக ஒவ்வொரு கதையும் 15 பக்கங்களைத் தாண்டியிருந்தது. இரண்டொரு கதைகளைத் தவிர மற்றயவைகள் யதார்த்தம், எழுத்து ஆழுமை போன்ற வற்றால் நீளம் ஒரு பிரச்சனையாயிருக்கவில்லை. அனேகமான சிறுகதைப் போட்டிகளிற்கு 1500-2000 சொற்கள்வரை என்று குறிப்பிடுகிறார்கள். கதையின் களமும், அல்லது கருவும் வாசகனின் இரசனையோடு இணைந்து பயணிக்குமானால் மேற்சொன்ன அளவு சற்றுக் கூடினாலும் சிறுகதைக்குள் அடக்கலாமென்பது என் கருத்து.

### அலெக்ஸ் பரந்தாமன்

ஒரு சிறுகதைக்கான அளவுகோல் என்பது, எழுதுபவரின் அக்கண மனநிலையும், புறச்சூழலையும் பொறுத்தே அமை கிறது. அதுவும் எழுதுபவரின் ஆழுமையைப் பொறுத்தே நிகழ்கிறது. ஒரு விடயதானத்தைக் கவிதைக்குள் சுருக்கி விடுவதுபோல், சிறுகதைக்குள் கொண்டு வரமுடியாது. சிறுகதைக்குள் பாத்திரங்கள் அதிகமானால் கதையை வாசிக்கும் வாசகனுக்குச் சலிப்புத்தட்டும். கதைக்கான கருக்களத்தைப் பொறுத்துக் கதையின் பக்கம் அதிகரிப்பது ஏற்கவேண்டிய ஒன்றே.

### சமரபாகு உதயகுமார்

நீங்கள் சொல்லிய விடயங்களோடு மொழி, அழகியல், சொல்லும் விதம் ஆகியவற்றையும் உள்ளடக்க வேண்டும்.

### தாட்சாயினி பிரேமினி

நீண்ட காலவர்த்தமானத்தில் நிகழ்பவற்றை அளவைச் சுருக்கி எழுதினால் அது சிறுகதை எனும் வகைக்குள் வந்து விடாது என நினைக்கிறேன். ஆனாலும் சொல்லும் முறையின் வீச்சு நினைவோடையினூடாக நீண்ட காலவர்த்தமான இடைவெளியுள்ள சிறுகதைகளையும் உருவாக்கியிருக்கிறது.

### பாய்வா ஆய்சா

எஸ்.பொ.கிட்டத்தட்ட ஐம்பது பக்கங்களில் ஒரு சிறுகதை எழுதியதாக ஞாபகம்.

### கிருஷ்ணவேணி சிறீக்காந்தவேல்

மற்றவர்கள் அபிப்பிராயத்துக்காக உங்களுக்கு சரி என்று உணர்ந்தவைகளை மாற்றிக்கொள்ள கூடாது . உங்களின் தனித்துவம் கரைந்துவிடும் நீங்கள் எடுத்துக்கொண்ட விடயம் சரியாக தொடங்கி சொல்ல நினைத்தவற்றை ஆணித்தரமாக சொல்லி முடிப்பதற்கு எத்தனை பக்கங்கள் தேவையோ அவற்றைப் பயன் படுத்த வேண்டும் தானே இல்லாவிட்டால் ஒரு கழுதையை தகப்பனும் மகனும் விற்பதற்காக சந்தைக்கு கொண்டுபோன கதையாக முடிந்து விடும்

### நந்தினி சேவியர்

இக்கேள்விக்கான விடை என்னிடம் இல்லை. சிறுகதை என்று எழுதி பின்னர் அதனை நாவலாக்கியவர்களை நான் அறிவேன். ஜெயகாந்தனின் அக்கினிப் பிரவேசம், டானியலின் தண்ணீர் இதற்கு உதாரணங்கள். எழுத்து வல்லபம் நிறைந்தவர்கள் நல்ல சிறுகதையாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். முத்துலிங்கத்தின் கட்டுரைகளுக்கும், சிறுகதைகளுக்கும் சில நேரங்களில் வித்தியாசம் தெரிவதில்லை. உண்மையில் தன் கதைகளைச் சிறுகதை என வகைப்படுத்துபவன் எழுத்தாளனே என்று நினைக்கிறேன். சிலநேரங்களில் வாசகனே அதைச் சிறுகதையல்ல என்கிறான். அதுதான் எழுத்தாளனின் தோல்வி. மற்றும்படி சிறுகதைக்கு வர விலக்கணம் கூற எனக்குத் தெரியாது. நல்ல சிறுகதை நல்லதுதான். இதுவே எனது கருத்து.!

**யஸ்மின் கென்னடி**

*குறிப்பிட்ட ஒரு சம்பவத்தைக் கொண்டு குறுகிய கால எல்லைக்குள் 15 பக்கங்களுக்கு மேற்படாத கதையை சிறுகதை எனக் கூறலாமென எண்ணுகிறேன்.*

**கெஜரட்ணம் தர்மகுலராசா**

*நடந்த ஒரு சம்பவத்தை அதில் நான் கற்றுக் கொண்ட நன்மையான அல்லது தீமையான அனுபவத்தை பிறர் அறியச் செய்ய.... சுவாரசியமாகச் சுருக்கமாகச் சொல்லி விடுவதே சிறுகதை என எண்ணியே நான் சிறுகதை எழுதுகிறேன்.*

**மைக்கேல் கொலின்**

*சிறுகதைக்குக் காலத்துக்கு காலம் ஒவ்வொரு விதமான வரைவிலக்கணம் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு கதை சொல்லியும் தனது கதைக்கென ஒரு வரைவிலக்கணத்தை வைத்திருப்பான். அதனை அறியாமல் இது சிறுகதை அல்ல என்ற எந்த முடிவுக்கும் வந்துவிட முடியாது. பாத்திரங்களோ பக்கங்களின் அளவோ எப்படி நாவலை தீர்மானிக்க முடியாதோ அதே போன்றேதான் சிறுகதையையும் தீர்மானிக்க முடியாது. எஸ். பொ. வின் தேர் சிறுகதை அதிக பாத்திரங்களைக் கொண்ட சிறுகதை. அதே போன்று அதிக பக்கங்களில் வந்த ரஞ்சகுமாரின் கோசலை. இவை இரண்டும் அதிக பாத்திரங்கள், அதிக பக்கங்கள் என்பவற்றை தாண்டி தமிழின் மிக முக்கியமான சிறுகதைகளாகப் பேசப்ப டுகின்றன. இன்று எத்தனையோ பின்நவீனத்துவபாணி சிறுகதைகள் நேரடி பாத்திரங்களோ, சம்பாஷனைகளோ இல்லாமல் கட்டுரை வடிவில்கூட அமைந்திருக்கின்றன. ஆக இதுதான் சிறுகதை, இது சிறுகதையல்ல என எவரும் பழைய வாய்ப்பாட்டுத்தனங்களை வைத்து எடை போட முடியாது என்பது எனது கருத்தாகும். ஏனென்றால் சிறுகதையைத் தீர்மானிப்பது விமர்சகனல்ல. குறித்த கதைசொல்லியே...*

**எஸ்.எல்.எம் ஹனீஃபா**

*சிறுகதை 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தின் தலைதெறித்த வேகமாக இருந்தால் எனக்குப் பிடிக்கும். உங்கள் பதிவும் ஒரு கதையே.*

**வாசிப்பதனால் மனிதன்**
**பூரணத்துவம் அடைகிறான்**



## எழுத்தாளர் சோலைசுந்தர பெருமாள் மறைந்தார்

திருவாரூர் மாவட்டம் அம்மையப்பனை அடுத்த காவனூரில் வசித்துவந்த மூத்த எழுத்தாளரும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் மாநிலக் குழு சிறப்பு அமைப்பாளருமான சோலை சுந்தரப் பெருமாள் (70) தை பன்னிரண்டில் காலமானார். 1989 இல் இவர் எழுதிய தலைமுறைகள் என்னும் முதல் சிறுகதை சாலை அமைக்கும் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை சம்பந்தப் பட்டதாகும். வெண்மணிச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இவர் எழுதிய செந்செல் நாவல் இலக்கியத் துறையில் மிகுந்த பாராட்டைப்பெற்றதாகும். உறங்க மறந்த கும்ப கர்ணர்கள்- ஒரே ஊரில் - தஞ்சை மனிதர்கள் - தப்பாட்டம் - பெருந்திணை - மரக்கால் - தாண்டவ புரம் பால்கட்டு - எல்லை பிடாரி - வண்டல் உணவுகள் - ஆகிய நாவல்களையும் மண் உருவங்கள் - வண்டல்- ஓராண் காணி - ஒரு ஊரும் சில மனிதர்களும் மடையான்களும் சில காடைகளும் - வெள்ளாடுகளும் சில கொடியாடுகளும் - கப்பல்காரர் வீடு - உள்ளிட்ட சிறுகதைகளையும் பல குறுநாவல்களையும் கவிதைகளையும் எழுதி உள்ளார். தனது படைப்புகளுக்காக பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். பல பள்ளிக்கூடப் பாடதிட்டங்களில் இவருடைய படைப்புகள் பாடங்களாகவும் சேர்க்கப்பட்டுள்ளன.தமழகத்தின் தலைசிறந்த இலக்கிய ஆளுமைகளில் இவரும் ஒருவர். பல மொழிகளில் இவரது படைப்புகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

## கடுகு குறுங்கதை



திருமலை சுந்தா

### ஊன்றுகோல்

கொரோனா ஊரடங்கு நேரம்...வயிற்றை தடவி யபடி அந்த முதியவர் தட்டு தடுமாறி பிரதான வீதி வரை வந்து விட்டார். வேகமாக வந்து கொண் டிருந்த பொலிஸ் ஜீப் வண்டி அவர் அருகில் வேகத்தை குறைத்தது... ஜீப்பில் இருந்த அதிகாரி... அந்த வயோதிபரிடம் ஏதோ கேட்டார். வயோதிபருக்கு ஏதுவுமே புரியவில்லை. தன் கண்களாலும்..... இரண்டு கைகளாலும் தனது வயிற்றைத் தடவி.. தடவி... ஏதோ புரியாத மொழியில்... அந்த அதிகாரியைப்.. பார்த்து....முதியவரின் மௌன மொழி... அந்த அதிகாரியின் குறிப்பறிந்து கூட வந்த பொலீஸ் உத்தியோகத்தர்கள்......அதிகாரியிடமிருந்து உணவுப் பொதி......முதியவரின் கைகளுக்கு மாறியது. அன்போடு அரவணைத்து......வீதி நிழல் ஓரமாக அந்த முதியவரை அழைத்துச் சென்று அமர வைத்த போது.. அந்த முதியவரின்.. முகம்... அதில் பளிச்சிட்ட உணர்வுகள்.... ஜீப் புறப்பட்டது...ஜீப் சென்ற வழி தன் பார்வையை செலுத்திக் கொண்டிருந்த போது தான்... தன்னோடு கூட எடுத்து வரும் ஊன்று கோலை விட்டு விட்டு வந்தது அவருக்கு நினைவுக்கு வந்தது.

சங்ககாலப் பாடல்களிலும் பக்தி இலக்கியங்களிலும் அழகான சிறுகதைகள் ஒளிந்திருக்கின்றன என்பதைக் காட்டுவதுதான் இது ஒரு வாழ்வா என்கின்ற சிறுகதை. இதனை எழுதியவர் பல நாவல்களையும் சிறுகதைகளையும் எழுதிய நா. பார்த்தசாரதி அவர்களாகும். இவர் இங்கே புறநானூற்றுப்பாடல் ஒன்றில் உள்ள சிறுகதையினை எழுதியுள்ளார். இதனை உங்களுக்குத் தருவதில் பெருமை கொள்கிறேன்.

ஆ-ர்

---

குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்

ஆள் அன்று என்று வாளில் தப்பார்

தொடர்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய

கேள் அல் கேளிர் வேளாண் சிறுபதம்

மதுகை இன்றி வயிற்றுத்தீ தணியத்

தாம் இரந்து உண்ணும் அளவை

ஈன்மரோ இவ் உலகத்தானே? (புறநானூறு 74)

குழவி - குழந்தை, ஊன்தடி - தசைப் பிண்டம், ஞமலி - நாய், கேளல் கேளிர்- பகைவரின் சுற்றத்தார், வேளாண் - உதவி, சிறுபதம் - சிறிதளவு நீர், மதுகை - மனவலிமை, இரந்து - யாசித்து.

---



# இது ஒரு வாழ்வா

நா. பார்த்தசாரதி

சோழ மன்னன் செங்கணானுக்கும் சேரமான் கனைக்கால் இரும்பொறைக்கும் நிகழ்ந்த போரில் சோழன் செங்கணான் வெற்றி பெற்றுவிட்டான். தோற்றுப்போன கணைக்கால் இரும்பொறையைச் சிறை செய்து சோழ நாட்டின் தலைநகரில் இருக்கும் குடவாயில் கோட்டத்துச் சிறைச்சாலையில் அடைத்தும் விட்டான் பெரு வீரனான சேரமானைக் கைதியாக்கித் தன் சிறையில் கொணர்ந்து அடைத்ததனால் இணையற்ற பெருமிதம் கொண்டிருந்தான் செங்கணான்.

செங்கணான் கொண்ட பெருமிதத்திற்குக் காரணம் இருந்தது. பிறர் எவருக்கும் அடிபணிய விரும்பாமல் சுதந்திரப் பேரரசனாகத் தன்மானப் பண்பிற்கே இருப்பிடமாய் வாழ்ந்த சேரனைத்தான் ஒருவனே அடக்கிச் சிறை செய்ததிறமை சோழன் பெருமிதம் கொள்வதற்கு உரியதுதானே?

சேரமான் கணைக்கால் இரும்பொறையே 'மானத்திற்காக வாழ்வது, அதற்கு அழிவு வந்தால் வீழ்வது' என்ற உறுதி யான கொள்கையுடையவன். குடவாயிற் கோட்டத்துச் சிறைச் சாலையில் அடைபட்டபின் ஒருநாள் தன்னுடைய அந்த உயரிய கொள்கையை நிரூபித்தும் காட்டிவிட்டான், அவன்.

'மானத்தைக் காப்பாற்றுவதற்காக மனிதன் வாழ வேண்டும். மானத்தைப் பறிகொடுத்துவிட்டு வாழ்வதைக் காட்டிலும் சாவதே நல்லது!" இவ்வுண்மையைத் தன் உயிரைக் கொடுத்துத் தமிழ்நாட்டிற்கு அறிவுறுத்திவிட்டுச் சென்றான் இரும்பொறை. அந்த நிகழ்ச்சிதான் கீழே வருகின்ற சிறுகதை,

அன்று ஒருநாள் மாலை! குடவாயிற் கோட்டத்துச் சிறைச்சாலையில் ஒளி மங்கி இருள் சூழத் தொடங் கியிருந்த நேரம். சேரன் இருந்த சிறையின் வாயிலில் சிறைக் காவலர்கள் கையில் வேலுடன் குறுக்கும் நெடுக்குமாக உலாவிக் கொண்டிருந்தனர். சிறைக்குள்ளே இருந்த சேரமானுக்குத் தண்ணிர் வேட்கை பொறுக்க முடியவில்லை. நாக்கு வறண்டு ஈரப்பசை இழந்தது. விக்கல் எடுத்தது. தாகம் கோரமாக உருவெடுத்து அவனைக் கொல்லாமல் கொல்லத் தொடங்கியிருந்தது. சிறைக்குள்ளே தண்ணீர் இல்லை. காவலாளிகளிடம் வாய் திறந்து கேட்கக்கூடாது என்று நினைத்திருந்தான் அவன். அவர்களிடம் கேட்பது இழிவு கேட்டபின் 'அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டாலோ, இழிவினும் இழிவு' என்றெண்ணிப் பொறுத்துக் கொள்ள முயன்றான் அவன். ஆனால் தாகத்தின் கொடுமை அவனைப் பொறுக்கவிட்டால்தானே? சிறைக் கதவின் ஓரமாகப் போய் நின்றுகொண்டு, "காவலர்களே! தண்ணிர் வேட்கை என்னை வதைக்கிறது. வேதனை தாங்க முடியவில்லை. பருகுவதற்குக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும்" என்று வறண்ட குரலில் வேண்டிக் கொண்டான் அவன். இவ்வாறு அவன் வலுவில் வந்து தங்களிடம் தண்ணிர் கேட்டதனால் காவலர்களுக்குக் கொஞ்சம் இறுமாப்புப் பெருகிவிட்டது.

“நேற்றுவரை நீ சேரமன்னனாக இருந்தாய்! பிறரை ஏவல் செய்து, ‘அது கொண்டு வா, இது கொண்டு வா,’ என்று சொல்வதற்கு உனக்குத் தகுதி இருந்தது. ஆனால் இன்றோ, நீ எங்களுக்கு அடங்கிய ஒரு சாதாரண கைதி. நீ ஏவினால் அந்த ஏவலுக்குக் கீழ்ப்படிந்து நாங்கள் உடனே தண்ணீர் கொண்டு வர வேண்டுமா? முடியாது! தோற்றுப்போன உனக்குத் தண்ணிர் ஒரு கேடா?” என்று கூரிய ஈட்டியைச் சொருகுவது போன்ற சொற்களை அவனுக்கு மறுமொழியாகக் கூறினர் அவர்கள். இந்தப் பதிலைக் கேட்டு இரும்பொறையின் நெஞ்சம் கொதித்தது. கைகள் அவர்களை அப்படியே கழுத்தை நெரித்துக் கொன்றுவிடலாம் போலத் துறுதுறுத்தன. ஆனால், அவர்களுக்கும் அவனுக்குமிடையில் ஒரு நீண்ட இரும்புக் கதவு இருந்தது. அவன் ஆத்திரத்திற்கு அந்தக் கதவு தடையாக நின்றது. இல்லையென்றால் அவர்கள் எலும்புகளை நொறுக்கியிருப்பான் அவனுக்கிருந்த கோபத்தில்.

“ஆகா இதைவிடக் கேவலமான நிகழ்ச்சி, என் வாழ்வில் இன்னும் வேறு என்ன நடக்க வேண்டும்? வாய் திறந்து ‘தண்ணீர்’ என்று கேட்டேன். தண்ணீர் இல்லை என்று மட்டும் அவர்கள் சொல்லியிருந்தால் பரவாயில்லை. எவ்வளவு அவமானமாகப் பேசிவிட்டார்கள்! கேவலம், சிறைக் காவலர்கள் வாயிலிருந்து இத்தகைய சொற்களைக் கேட்கும்படி ஆகிவிட்டதே நம் கதி. இப்படி நாம் வாழ்வதைக் காட்டிலும் சாவது எவ்வளவோ உயர்ந்ததாயிற்றே?”

“இழிந்த நாயைச் சங்கிலியாற்கட்டி இழுத்துக்கொண்டு வருவதுபோல என்னையும் விலங்கிட்டு இந்தச் சிறைச்சாலைக்கு இழுத்து வந்தார்கள். அப்போதே மானஸ்தனான என் உயிர் போயிருக்க வேண்டும். ஆனால், போகவில்லை, பிச்சை கேட்பது போல இவர்களிடம் தாகம் தீர்த்துக் கொள்ளத் தண்ணீர் கேட்டேன். நம்மைவிட எவ்வளவோ தாழ்ந்தவர்களாகிய இந்தச் சிறைக் காவலர்கள் வாயிலிருந்து, “உனக்குத் தண்ணிர் ஒரு கேடா?” என்ற வார்த்தையை வாங்கிக் கட்டிக் கொண்டாயிற்று இன்னும் நாம் உயிர் வாழ்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது?” இரும்பொறையின் மனத்தைக் கசக்கிப் பிழிந்தது ‘வாழ்வதா, இறப்பதா’ என்ற இந்தக் கேள்வி.

இதற்குள் வெளியே இருந்த சிறைக் காவலர்களில் இளகிய உள்ளம் படைத்த ஒருவன் மற்றொருவனிடம் கூறினான் “ஐயோ பாவம் மனிதர் தவித்த வாய்க்குத் தண்ணீரின்றித் திண்டாடுகிறார். நீங்களெல்லாம் நெருப்பை வாரி வீசுவது போலக் கொடுஞ் சொற்களைக் கூறுகிறீர்களே! இதுவா, மனிதப் பண்பு? நீ கொஞ்சம் பார்த்துக் கொள் அப்பா. நான் போய்த் தண்ணீர் கொண்டு வருகிறேன்.” இரண்டாவது காவலன், “சரி! உன் விருப்பத்தை நான் ஏன் கெடுக்கிறேன்? போய் அவனுக்குத் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்துப் புண்ணியத்தைச் சம்பாதித்துக் கொள்” என்றான். முதற் காவலன் புறப்பட்டான்.

இரக்க குணமுள்ள அந்தக் காவலன் ஒரு குவளை நிறையக் குளிர்ந்த நீரைக் கொணர்ந்தான். சிறைக் கதவைத் திறந்து இரும்பொறையினருகில் சென்று குவளையை நீட்டினான். இரும்பொறை உயிர் வேதனையோடு மகாபயங்கரமாக விக்கிக் கொண்டிருந்தான். இன்னும் சிறிது நேரத்திற்குள் அவன் தண்ணீரைக் குடிக்காமலிருப்பானாயின் உயிரே போனாலும் போய்விடும். அவ்வளவு கோரமான நீர் வேட்கை. ஆனால், அந்த நிலையிலும்கூடக் காவலன் நீட்டிய தண்ணீர்க் குவளையை அவன் வாங்கிக்கொள்ள மறுத்து விட்டான்.

“காவலனே! உன் அன்புக்கு நன்றி. உயிரைவிடமானத்தையே பெரிதாக எண்ணுகிறேன் நான். நீ கொடுக்கும் இந்த நீரை வாங்கிப் பருகிவிட்டால் இப்போது இந்த மரணவஸ் தையிலிருந்து என் உயிர் பிழைத்துவிடும். ஆனால், என்றைக்காவது ஒருநாள் எப்படியும் போகப் போகிற இந்த உயிர் மானத்தைக் காப்பதற்காக இன்றைக்கே போய்விடுவதினால் என்ன குறைந்துவிடப் போகிறது? கேவலம், பிச்சைக்காரன் பிச்சை கேட்பதுபோல, மான மில்லாமல் உங்களிடம் தண்ணீர் கேட்டுவிட்டு நான் பட்ட அவமானம் போதும்...”

“அரசே! தாங்கள் மிகவும் ஆபத்தான நிலையிலிருக்கிறீர்கள். இப்போது நீர் பருகாவிட்டால்...”

“உயிர் போய்விடும் என்றுதானே சொல்லப் போகிறாய்? பரவாயில்லை! பிறரிடம் தோற்று அடிமையாகி மானம் இழந்து வாழும் இந்த வாழ்வும் ஒரு வாழ்வா என்றெண்ணி மானத்திற்காக உயிர் நீத்தான் கணைக்கால் இரும்பொறை என்று எதிர்காலம் அறியட்டும்” இரும்பொறை கண்டிப்பாகக் காவலன் கொண்டு வந்து கொடுத்த தண்ணீரைப் பருகுவதற்கு மறுத்துவிட்டான். இனி வற்புறுத்துவதில் பலனில்லை என்று காவலன் வெளியே சென்றான். சிறைக்கதவு மூடப்பட்டது. கதவு மூடப்பட்ட ஒலியோடு உள்ளிருந்து ஈனஸ்வரத்தில் விக்கல் ஒலியும் கேட்டது. அரை நாழிகைக்குப் பிறகு சிறைக்குள்ளிருந்து விக்கல் ஒலி வருவதும் நின்றுவிட்டது. உள்ளே விளக்கேற்றுவதற்கு வந்த காவலன் ஒருவன் இருளில் கணைக்கால் இரும்பொறையின் சடலத்தை எற்றித் தடுக்கி விழுந்தான்.

**வாசிப்பதனால் மனிதன்**
**பூரணத்துவம் அடைகிறான்**



# முரண்பாடு

குணறுபேஸ்

நெற்றி வியர்வை நிலத்திலே சிந்தி உழைத்த களைப்புடன் அன்றைய இரவு உணவுக்காய் ஆயத்தப்பட்டு தங்கள் சேனையிலே பயிரிடப்பட்டிருந்த மரக்கறிகள் சிலவற்றைப் பிடுங்கியதுடன் உழைப்புக்குச் சென்ற கணவன் கொண்டு வந்த மீனையும் வெட்டிக் கழுவி அதற்கு உப்புப் புளி தேடி எடுத்து 60ஆம் கட்டைக் குடியிருப்புப் பெண்கள் இரவு ஆகாரத்தை தயார் செய்தெடுத்தனர்.

இரவு நேரம் ஒன்பது மணிக்கெல்லாம் அவர்களின் வீடுகள் சிலவற்றில் கைவிளக்கு வெளிச்சத்தில் இரவு உணவு கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் பரிமாறப்பட்டது. தூரத்தே அமைந்திருந்த ஒரு சில வீடுகளில் பெற்றோல்மக்ஸ் எரிந்து கொண்டிருந்தது. தங்கம்மாவின் வீட்டில் பெற்றோல்மக்ஸ் இல்லாததனால் கைவிளக்குத்தான் அவர்களின் வீட்டிற்கு ஒளி கொடுத்தது.கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் இரவு உணவைக் கொடுத்த கையோடு தானும் உண்டுவிட்டு தங்கம்மாவும் மூன்று பிள்ளைகளுமாய் சேர்ந்து குடத்திலிருந்த நீரை எடுத்துப் பாத்திரங்களைக் கழுவிச் சுத்தம் செய்து குசினியிலே அடுக்கி வைத்துவிட்டு வந்தபோது பகல் முழுவதும் பாடுபட்டு உழைத்தகளைப்புடன் வந்த சுப்பிரமணியம் நித்திரைக்குச் சென்றிருந்தார். தாயும் பிள்ளைகளுமாகச் சேர்ந்து வேலைகளை முடித்தபடி கதவை இழுத்துக் கட்டிவிட்டு அவர்களும் நித்திரைக்கு ஆயத்தமாயினர். இந்தச் சுப்பிரமணியம் தங்கம்மாவின் குடும்பம் பல வருடங்களுக்கு முன்பாக இடம்பெற்ற யுத்தத்தில் தங்கள் உடமைகளையும் உறவுகளையும் கிளிநொச்சியில் பறிகொடுத்து விட்டு உயிர் வாழ்வதற்காக இடம் பெயர்ந்து வந்தபோதுதான் 60ஆம் கட்டைக் காட்டுப் பகுதியில் அங்கு சேனைப் பயிர்ச்செய்கை செய்து வாழ்பவர்களுடன் காடு வெட்டி சேனை செய்து தங்கள் வாழ்க்கைச் சக்கரத்தை சுழற்றிக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள்.இக் குடியிருப்பாளர்கள் தண்ணீர் தேடி கிட்டத்தட்ட மூன்று கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டும். வீட்டுக்கார ஆண்களெல்லாம் காலை ஆறு மணிக்கெல்லாம் தங்கள் ஈருருளிகளிலே பின்பக்கமாக இரண்டு குடமும் முன்பக்கமாக இரண்டு குடமும் கட்டி எடுத்துக்கொண்டு குடி தண்ணீர் எடுத்து வீடுகளுக்கு கொடுத்த பின்னர்தான் சேனைப்பயிர் செய்கைக்கும் மேலதிகமாக ஏதாவது தொழில் தேடி நகர்புறங்களுக்கும் செல்லுவர்.அன்றைய நாளின் பரிமாறல்களுக்காக தேவைப்படும் தண்ணீரை வீட்டிலுள்ள பெண்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அருகிலுள்ள பூவலுக்கு சென்று தலையில் ஒன்றுக்கு மேல் ஒன்று நீர் நிரம்பிய குடம் சும்மாடு வைத்து அடுக்கியபடியும் இடுப்பில் இரண்டு குடமும் சுமந்து ஒற்றையடி பாதை வழி சென்று தண்ணீர் எடுத்து வருவதுதான் வழமை. 60ஆம் கட்டை குடியேற்ற கிராமத்தில் சீரான போக்குவரத்து வசதியுமில்லை. தண்ணீர் வசதியுமில்லை. மின்சார வசதியுமில்லை. வீடுகளும் அப்படித்தான். ஓலைக் குடிசைகள்தான் அவர்களின் வீடு. சீரான கதவுகள் கூட அதற்கு இருக்காது. அந்த குடிசைகளுக்கான கதவுகள் தகரத்தினால்தான் செய்யப்பட்டிருக்கும்.சௌகரியமான வாழ்க்கை முறை இல்லை. உரலில் இட்டு நெல்லைக் குற்றி எடுத்துத்தான் சோறு சமைக்கவேண்டும். அம்மியில் அமர்ந்திருந்து அரைத்துச் சமைக்கும் அவர்களின் கிராமத்துச் சமையல் முறைகள் எப்போதும் சுவையானதாகவே இருக்கும் என்பதுடன் உடலும் ஆரோக்கியமாகவே இருக்கும். இப்படியான வழ்க்கை முறை கொண்ட இவர்களுக்கு பெரிதாக ஏதும் நோய் நொடிகள் ஏற்படுவதுமில்லை. ஆனால் காட்டுப் பகுதியை அண்மித்த குடியேற்றம் என்பதனால் கொடிய விலங்குகள் இரவு நேரங்களில் வந்து சேனையை உளக்கிவிட்டுச் செல்வதும் யானைகள் வந்த துவம்சம் செய்து மரங்களை அடித்து முறித்து விட்டுச் செல்வதெல்லாம் அவ்வப்போது நடைபெறுவதுண்டு. இரவு வேளைகளில் அந்தச் சேனைக்குள் புகுந்து விட்டதென்பதை அக்கிராமத்தவர்கள் அறிந்து கொள்வர். காலையில் எழுந்ததும் அது ஒரு பரபரப்புச் செய்தியாய் அப்பகுதியில் பரவிவிடுவது அவர்களின் காதுகளுக்கு இப்போது பழக்கப்பட்டுவிட்டது.நித்திரைக்குச் சென்றிருந்த சுப்பிரமணியம் தங்கம்மாவின் வீடு அன்று இரவு யானைகளின் அட்டகாசத்திற்கு உள்ளாக்கப்படப் போகின்றதென்பதனை அன்று அவர்கள் அறிந்திருக்கவில்லை.இரவு நேரம் இரண்டு மணியைக்கடந்து சென்று கொண்டி ருந்தது. 60ஆம் கட்டை கிராமம் முழுவதும் நள்ளிரவு நேர அமைதி ஆட் கொண்டிருந்தது. ஒரு சில வீடுகளில் எரிந்து கொண்டிருந்த விடி விளக்குகள் ஒளி மங்கி அணைவதற்கு சில வினாடிகள் இருக்கும் நிலையில் மங்கி எரிந்துகொண்டிருந்தன. தூரத்தே சில வீடுகளில் முற்றத்து மரங்களில் கட்டப்பட்டிருந்த பெற்றோல் மக்ஸ்சுகளில் அதன் காற்றமுக்கமும் மண்ணெண்ணையும் குறைந்து அவைகளும் ஒளி மங்கி அணைவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளையில்தான் சுப்பிரமணியம் தங்கம்மாவின் வீட்டுப் பக்கமாயிருந்து நள்ளிரவில் அழுகுரல்கள் கேட்க ஆரம்பித்தன. உள்ளதை எல்லாம் எறிகணைகளுக்கும் கை எறி குண்டுகளுக்கும் பறிகொடுத்துவிட்டு உயிர் வாழ்ந்தால் போதுமென்றுதானே நாங்கள் இடம்பெயர்ந்து இங்கு வந்தோம். ஏதோ காடு வெட்டி களனி செய்தெண்டாலும் உயிர் வாழ்வமெண்டு இங்கு வந்து இந்தக் காட்டுக்குள்ள குடியேறின எங்களையும் இண்டைக்கு நீ அடிச்சி உடைச்சி தகர்த்தெறிந்து போட்டுப் போறாய் என்ர கடவுளே வினாயகப் பெருமானே. நீயா இப்படி வந்து எங்களை உன் காலால் பந்தாடி போட்டுப் போறாய்? என்ர கடவுளே இதைவிட நீ எங்களை யுத்தத்திலேயே

பலி எடுத்திருக்கலாமே... என்று தங்கம்மா தலையில் அடித்தபடி நிலத்தில் கிடந்தபடியே மண்ணை எடுத்து விசிறி அழுது புலம்பிக் கொண்டிருக்க பெண் பிள்ளைகள் மூவரும் தாயுடன் சேர்ந்து அழுது கொண்டிருந்தனர். சுப்பிரமணியத்தார் உயிரைக் காத்துக் கொண்டவராய் திகைத்துப் போய் நின்றிருந்தார். தங்கம்மாவினதும் பிள்ளைகளதும் அழுகுரல் கேட்டு அந்த நள்ளிரவு வேளையில் அயல் வீடுகளில் இருந்தவர்கள் எரிபந்தங்களைப் பிடித்தபடி சுப்பிரமணியத்தின் வீட்டை வந்தடைந்தபோதுதான் நடந்த சங்கதி தெரியவந்தது. காட்டிலே இருந்து 60ஆம் கட்டை கிராமத்திற்குள் புகுந்த யானைக் கூட்டம் சுப்பிரமணியம் தங்கம்மாவின் சேனைகளை உளக்கி சிதைத்ததோடு அவர்களின் குடிசை வீட்டை முட்டி மோதி உடைத்தெறிந்த வெறி பிடித்த யானைகள் சுப்பிரமணியம் வீட்டிலிருந்த யாரையேனும் அடித்துக் கொல்ல வேண்டும்போல் பிளிறிக்கொண்டு ஆவேசம் கொண்ட படி அவர்களின் குடிசைக்கருகில் நின்றன. யானைகள் குடிசையில் முட்டியபோது எழுந்த பரபரப்புச் சத்தத்தினால் திடுக்கிட்டு எழுந்தவர்கள் அலறி அடித்தபடி வெளியே வந்ததனால் தங்கள் உயிர்களைக் காத்துக் கொண்டனர். அந்த யானைகள் பதம் பார்ப்பதாயிருந்தால் சுப்பிரமணியத்தைத்தான் ஏறி மிதித்திருக்க வேண்டும். ஏனெனில் அவர் நித்திரையாயிருந்த இடத்திற்கருகில்தான் யானைகள் முட்டிமோதி குடிசையை உடைத்திருந்தன. ஏதோ கடவுள் புண்ணியத்தினால் சுப்பிரமணியத்தாருக்கும் குடும்பத்தினருக்கும் உயிர் ஆபத்து ஏற்படவில்லை. ஆனால் வயிற்றுப்பசி ஆறுவதற்காக வைத்திருந்த பத்து மூடை நெல்லை அப்படியே சரித்து மித்துவிட்டு அவற்றை வயிறு நிறையும் படியாய் சாப்பிட்டுவிட்டு மிகுதியை கால்களால் மிதித்து நாசம் செய்தபடி நின்றிருந்தன. இவர்களின் அழுகுரல் கேட்டு ஓடிவந்த கிராமத்தவர்கள் தீப்பந்தங்களையும் பட்டாசுகளையும் யானைகளை நோக்கி வீசி எறிந்து யானைகளை காட்டுப்பக்கமாய் செலுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். அந்த யானைகள் கூட்டம் அவ்வளவு விரைவாக காடுகளுக்குள் செல்வதாயில்லை. மீண்டும் மீண்டும் சேனைக்குள் வருவதற்கே முயற்சி செய்தன. யானைகளுக்கும் குடியிருப்பாளர்களுக்குமிடையே நீண்ட நேரமாக போராட்டங்கள் நடந்தன. இந்த அமர்க்களத்தினால் நேரம் எப்படி ஓடிச் சென்றதென்று தெரியவில்லை. நேரம் இபபொழுது அதிகாலை நான்கு முப்பதை தாண்டிச் சென்று கொண்டிருந்தது. ஒருவாறாக மெல்ல மெல்ல யானைகள் காட்டிற்குள் நகரத்தொடங்கின. அழுது புலம்பியபடி நின்றவர்களுக்கும் யானைகளை கலைக்க வந்தவர்களுக்குமென அயல்வீட்டார்கள் சூடான தேநீரைத் தயார் செய்து கொண்டு வந்து கொடுக்க அனைவருமாய் சேர்ந்து முற்றத்தில் நின்ற மாமரத்தின் கீழ் நின்றபடி தேநீரைக் குடித்தனர். காலைப் பொழுதின் சில்லென்ற குளிருக்கும் மனச்சோர்விற்கும் சூடான தேநீர் உற்சாகத்தைக் கொடுத்திருந்தது.

“யானைகளுக்கு காட்டிலே சாப்பாடு இல்லாத காரணத்தினால்தான் அவைகள் கிராமத்திற்குள் மனித குடியிருப்பைத் தேடி உணவுக்காக வருகின்றன” என்றார் அங்கு நின்றிருந்த ஒருவர். “காடுகளை கண்டபடி மனிதர்கள் வெட்டி அழிப்பதனால் யானைகள் கிராமத்திற்குள் படை எடுக்கின்றன” என்றார் இன்னுமொருவர். “வனஜீவராசிகள் அலுவலர்கள் இந்த காட்டு மிருகங்கள் தொடர்பாக சீரான பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதில்லை. வெள்ளமும் வரட்சியுமான காலப்பகுதி என்றபடியினால் காட்டிலே நீர் நிலைகளும் வற்றிப்போயிருக்கும். ஆன காரணத்தினால்தான் யானைகள் மனித குடியிருப்புகளிலே உணவும் நீரும் தேடிப் படையெடுக்கின்றன” என்றார் தவராசா.

வைகறை பொழுது கடந்து கிழக்கு வானில் சூரியன் கதிர் பரப்பி உதயமாகிக் கொண்டிருந்தான். 60ஆம் கட்டை கிராமம் முழுவதும் யானைகளின் அட்டகாசச்செய்தி பரவின. சிறுவர்கள் வளந்தவர்கள் பெரியவர்கள் என பெண்களும் ஆண்களுமாக எல்லோரும் யானைகளின் அட்டகாசத்தைப் பார்வையிட வந்தனர். சுப்பிரமணியத்தின் வீட்டு முற்றத்தில் ஜனக்கூட்டம் திரண்டிருந்தது. “நம்மட சனங்களுக்கு எல்லா விதத்திலையும் அழிவுதான் என்னதான் பாவப்பட்ட இனம் நம்மட இனமோ தெரியாது” என்று கூட்டத்தில் நின்ற ஒருவர் சோகத்துடன் கூறினார். ஆண்களெல்லாம் ஒன்று சேர்ந்து கத்தி மண்வெட்டி போன்ற கருவிகளை எடுத்து பேயாட்டம் ஆடி முடித்த பின் ஒழுங்கின்றிக் கிடக்கும் இடம் போல் முறித்து கிடந்த வாழை மரங்களையும் கரும்புகளையும் மாமரங்களையும் வெட்டித் துப்புரவு செய்து இடத்தைச் சுத்தம் செய்தனர். உடைக்கப்பட்ட குடிசையில் கிடந்த தடிகளையும் மண்சுவர்களையும் கூட்டி ஒதுக்கி எடுத்து ஒரு இடத்தில் குவித்துக்கொண்டிருந்தனர் இன்னும் சிலர் சிதைக்கப்பட்டபடி கொட்டிக்கிடந்த நெல் மணிகளையெல்லாம் பெண்கள் கூட்டி எடுத்து குடிசையின் உட்பகுதியை துப்புரவு செய்து கொண்டிருந்தனர். இப்படியாய் சுப்பிரமணியம்-தங்கம்மா அவர்களின் குடும்பத்துடன் துன்பத்தில் பங்கு கொண்டவர்களாக கிராமத்தவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது காலை நேரம் ஒன்பது மணியைக் கடந்து செல்ல இன்னும் ஒரு சில வினாடிகள் இருந்தன. அயலவீட்டுக்காரர் ஒருவர் வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் இவர்களுக்கு காலை உணவு கொடுப்பதற்காக எப்படியோ முயற்சி செய்து இருபது கிலோமீற்றர் தொலைவிலுள்ள நகர்ப்புறத்திற்கு ஆள் அனுப்பி பத்து இறாத்தல் வெதுப்பியை வேண்டியெடுத்தார். அதற்குத் தோங்காய்ச் சம்பல் தயார் செய்தெடுத்து காலை உணவை அவர்கள் மரத்தடியில் ஒன்று கூடி பலதையும் பத்தையும் பற்றி பேசியபடி உண்டனர். அப்போது கடந்த ஒரு வருடத்துக்கு முன் நடந்த சம்பவம் ஒன்று ஒருவரினால் ஞாபகப்படுத்தப்பட்டது. தனது எருமைப்பட்டிகளை பகல் முழுவதும் புற்றரைகளில் மேயவிட்டு தண்ணீர் காட்டி பொழுது பட்டவுடன் எருதுகளைப் பட்டியில் அடைக்கச் சென்று கொண்டிருந்த ஆறுமுகத்தாரை பாதை வழியே காட்டுக்களிருந்து குறுக்கிட்ட யானை ஒன்று காலால் அடித்துத்தானே கொன்று போட்டது. இந்த மனிதர்களுக்கும் யானைகளுக்குமிடையிலான முரண்பாடு எப்போதுதான் முடிவுக்கு வருமோ தெரியவில்லை. என்று அந்த சம்பவத்தை மீண்டும் ஞாபகப்படுத்தினார். அன்றைய நாள் துன்பமும் சோகமும் கலந்த நாளாகவே கடந்த சென்றது. இப்போது சூரியன் மேற்கு வானில் புதைந்து கொண்டிருந்தான். இன்றைய இரவில் யார் வீட்டில் மீணடும் யானைகள் வந்து அட்டகாசம் செய்யும் என்றும் யாருடைய சேனைகள் துவம்சம் செய்யப்படும் என்றும் யாருடைய உயிர்களேனும் யானைகளினால் பறிக்கப்பட்டுவிடுமோ என்ற பீதியுடனும் அன்றைய இரவுப் பொழுதுக்குள் சென்றனர் 60ஆம் கட்டை கிராமவாசிகள்.

# ஒரு குவளை தண்ணீர்

தர்சித்

“ஐயா!.... . ஐயா!.......”

சுப்பிரமணி காத்துக்கொண்டிருந்தான். தண்ணீர் எடுத்து வருவதாய்ச் சொல்லி உள்ளே சென்ற பெரியவரை இன்னும் காணவில்லை….. காரணம் என்னவாயிருக்கும்……

“சுப்பிரமணி….. அவங்க உனக்கு தண்ணீ தரமாட் டாங்கப்பா…..”

“என் அன்பிற்கினிய உடன்பிறப்புகளே! அவன் தண்ணீர் தரமாட்டான் …….. சிரசிலிருந்து உதித்தவன் எப்படி காலிலிருந்து உதித்தவனுக்கு தண்ணீர் கொடுப்பான்……. அதனால்தான் சொல்கிறோம் சமத்துவம் வெற்றி பெற நீங்கள் வாக்களிக்க வேண்டிய சின்னம்…..”

இடையில் ஒரு குரல் ஏதோ உளறியது.

“இராகு காலம் பதினொன்னு பத்துக்கு …….

நடராஜ சாஸ்திரி கணிச்சது………

அதுக்குள்ள முடிக்கனும்…..”

“ஆக……. எல்லோரும் வாக்களிக்க வேண்டும் நன்றி … நன்றி…” வாய் கிழிய பேசியவர் நா வறண்டு போனார்.

“டேய்! அந்தத் தண்ணிப்போத்தல யெடு! எழவு….. ஒரு இருநூறு ரூவாய்க்கு எவ்வளவு பொய்யச் சொல்லிட்டு திரிய வேண்டியதாயிருக்கு.

“ஒரு முன்னணி நடிகர் தான் நடத்துற நிகழ்ச்சியில தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த ஒரு மீட்டர பொருத்துரதாக சொல்ராரு……..அந்த நிகழ்ச்சியோட ஸ்பான்சர்ல ஒருத்தன் யாருன்னு பாத்தா இந்த நிலத்தடி தண்ணியப் பூரா உறிஞ்சிட்டுப்போய் தன்னோட சோலியப்பாக்குற ஒரு பெரிய மனுசன்………இந்தக் கருமத்த எல்லாம் எடுக்கிறது யாருன்னு பாத்தா கருப்பு சட்டைக்கும் பூணூலுக்கும் மாறி மாறி ஊதுற ப்ராடுக்காரப்பயலுக…… …..இதப்பாக்குறதுக்குத் தன்னோட வேல வெட்டியெல்லாம் மறந்து ஒரு ஆட்டுமந்தை மாதிரியானத் தரங்கெட்ட சனம் …… கொடுக்கப்படுறத திண்ணுட்டு……. காட்டப்படுறத பார்த்துட்டு …….. மூடிக்கிட்டுப் படுக்குற ஒரு கூட்டம்……. அந்த ஆட்டுத்தலைக்கடவுள் வணங்கிகளின் மொழியில் இவர்களுக்கான பெயர் கோயிம்கள் …….அந்தக் கோயிம்கள் வேறு யாருமில்ல நானும் நீங்களுந்தான்”

“நீயும் நானும் நினைச்சதுமே நாமல்லாம் ஏங்கிட்டுக் கெடக்குற அந்த மாற்றம் வந்துரும்னு நம்புற……… வாய்ப்பேயில்ல………அதெல்லாம் எந்தக் காலத்திலயும் நடக்காது …….. ஏன்னுத் தெரியுமா? அது யாருக்கும் தெரியாது………அதான் அரசியல்˙”

“எது அரசியல்? கொள்ளையடித்துவிட்டு வெளியூர் சென்றுவிடுவோருக்கும், இரத்தக்கறை படிந்த துண்டுகளுக்கும் மாறி …மாறி …சேவகம் செய்வதன் பெயரா அரசியல் …அது ஒரு சாக்கடையா… …….. பரவாயில்லை, தூர்வாரிச் சாக்கடை நீரைத் தெளிய வைக்க வேண்டும் என எண்ணுவாயானால் நீயும் நம்மவனே” போத்தலில் அடைக்கப்பட்ட சுத்தமான குடிநீரைக் கொஞ்சமாய்த் தொண்டைக்குழிக்குள் இறக்கிக் காய்ந்த வேர்களுக்கு நீர்ப்பாய்ச்சியவர் தனது வலக்கையைத் தூக்கி வானுக்கு உயர்த்தினார். அவையெங்கிலும் இருந்து ஆர்ப்பரித்திட்ட கரவொலிகள் அடைமழையின் போதான மழைத்துளிகளாய் மண்ணிலே வீழ்ந்து கீதம் பாடிற்று.

“இல்லயில்ல…நீ பாடிட்டு இருக்கறப்போ இடையில ரெண்டு மூணு இடத்தில ஸ்ருதியா ஆங்……. அதான் அதுபிழைச்சுடிச்சி…….சோ……..

நீங்க ……… நீங்க ……..” இடையில் திடீரென புகுந்து கொண்டார் ஒருவர்

“ஒரு சிறியஇடைவெளிக்குப் பிறகு ……………”

“இதப்பாருமா…. மேடம் நீங்கன்னு ரெண்டாவது தரம் சொல்ரதுக்கு முன்னமே அழ ஆரம்பிச்சரனும் சரியா”

“சரிங்க சார்˙”

“சார்! சார்!” எந்தப் பதிலும் இல்லை

“ஐயா! ஐ…..யா!”

கதவு திறக்கப்பட்டது.

“வாயா சுப்பிரமணி என்ன விசயம்”

“தலைய சுத்துதுங்க ஐயா கொஞ்சம் தண்ணீ”


“இரு…..வர்றேன்….”

சில நிமிடங்கள் சுருண்டு வீழ்ந்தன….. ஆனால் சுப்பிரமணி விழவில்லை….. மீண்டும் ஒரு முறை அழைத்துப் பார்த்தான் ஐயா!ஐயா!...... எதிரே யாரோ ஒருவர் பன்றி உருவம் பொறித்த மேற்சட்டையோடு வந்து கொண்டிருந்தார். அருகிலேயே வந்து விட்டார். “அவுங்க ஒனக்கு தண்ணீர் தரமாட்டாங்கப்பா ஏன்னா…..” சுப்பிரமணி சுருண்டு விட்டான். வெளியே வந்த அந்த ஐயா பன்றி படம் பொதித்த சட்டை அணிந்தவரைக் கண்டதும் குஷியாகிப் போனார்.

“நேத்து உங்காளு ஒருத்தன் கிட்ட டயம் குறிச்சுக் கொடுத்தனே கெடச்சதா ராமசாமி”

“அதெல்லாம் கெடச்சது நடராஜ சாஸ்திரி….. சரி இப்பத்தான் வெளியாள் யாருமில்லயே நாம ஏன் தமிழ்ல பேசிட்டு இருக்கோம்” “அட…..உள்ள வா ராமசாமி காப்பி சாப்பிட்டுண்டே மாட்லாடுவோம்” இருவரும் வீட்டுக்கு மாற, பேசிய மொழி மாற, சுப்பிரமணி மட்டும் மாறாது மண்ணில் வீழ்ந்து கிடந்தான். அவன் மயங்கியதற்கான காரணம் ஒரு குவளைத் தண்ணீர் கிடைக்காததனால் அல்ல…….. பல குவளைகளில் தண்ணீர் அளவுக்கதிகமாய் கிடைத்ததால்……..

# விமர்சனம்




பிரமிளா பிரதீபன்

10-01-2021 இல் Zoom வாயிலாக நடைபெற்ற மலையக சிறுகதை எழுத்தாளரான நடேசன் துரைராஜ் அவர்களின் அப்பாயி சிறுகதைத் தொகுப்பின் வெளியீட்டு நிகழ்வின் போது பிரமிளா அவர்களால் நிகழ்த்தப்பட்ட விமர்சன உரை

கதை சொல்வதில் மிக நீட்சியான மரபைக் கடந்து வந்து கொண்டிருப்பவர்கள் நாங்கள். அந்த மரபில் கதை என்பது எமது வாழ்வுடன் மிகவும் நெருக்கமாகக் கலந்து விட்டிருக்கும் கலை எனும் வகையிலேயே அதனை எம்மால் நோக்க முடிகிறது. இந்தக் கதை சொல்லல் பற்றிய ஆழமான பார்வையினைச் சமகால நவீன இலக்கிய கோட்பாடுகள் வேகமாக முன்னெடுக்கிறது என்பதுடன் பன்னாட்டு இலக்கிய பரப்பில் பெருமளவில் ஆய்விற்குட்படுத்தும் துறையாகவும் புனைகதை இலக்கியம் வளர்ந்து வருகின்றமையை எம்மால் அவதானிக்க முடிகிறது. இத்தகைய நடைமுறைச் சூழ்நிலைக்கு ஈடு கொடுக்கும் வகையில் மாற்றுச்சிந்தனைகளுடன் தர்க்கம் புரிதல், புதிய சிந்தனைகளுடன் ஊடாடுதல், புத்தாக்கத்திறன்களை விருத்தி செய்து கொள்ளல் முதலிய விசேட பண்புகளை எமதாக்கிக்கொண்டவர்களாகவே நாங்கள் இன்று இலக்கியத் தளத்தில் இயங்க வேண்டுமென்பது காலத்தின் கட்டாயத் தேவையாக உள்ளது. இந்த குறிப்பிட்ட தேவையின் நிமித்தம் எம்மிடத்தில் நாமே கேட்டுக்கொள்ள வேண்டியதான இரண்டு முக்கிய கேள்விகள் உள்ளன.

**இலங்கை இலக்கியப்பரப்பிற்குள் நாங்கள் எங்கே நிற்கிறோம்?**

**உலக இலக்கியப்பரப்பு எனும் தளத்தில் எங்களுக்கான வகிபாகம் எவ்வாறானதாக உள்ளது?**

இங்கே நான் ‘நாங்கள்’ என குறிப்பாக சுட்டியது மலையக இலக்கியத் தளத்தினையே.

இதன்படி மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான விடைகளினூடாக நாம் பெற்றிருக்கும் அந்த இடமும் வரையறையும் இதுதானென எங்களுக்குத் தெளிவாகத் தெரிந்திருக்கும் பட்சத்தில் அதனை விருத்தி செய்ய அல்லது குறைபாடுகளை நிவர்த்தித்துக்கொள்ள நாங்கள் மேற்கொண்டிருக்கும் எத்தனிப்புகள் ஏதேனும் உள்ளதாவெனச் சிந்திக்க வேண்டிய கட்டாயமும் எங்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. எங்களிடத்தே சிறுகதைகள் பெருகிய அளவிற்கு அவை பற்றியதான விமர்சனங்கள் பெருகவில்லை. ஆய்வுகளிற்கான தேவை ஏற்படுத்தப்படவில்லை. அதன் விரிவும் ஆழமும் வளர்ச்சியடையா நிலையில் எமக்கான சமூக பொறுப்பும், படைப்பொன்று குறித்ததான எச்சரிக்கையுணர்வும் படைப்பாளனிடத்தே சரியான முறையில் விழிப்படையவில்லை. ஒரு விமர்சனம் என்பது வெறும் புகழ்ச்சியினை மாத்திரம் மையப்படுத்தியதாகவோ அல்லது ஒரு விளம்பரமாகவோ இருந்துவிட முடியாது. ஒரு படைப்பு குறித்ததான விமர்சனமானது படைப்பாளர்களை செதுக்க வேண்டும். அவர்களது படைப்புக்களின் நேர்த்தியை செம்மைப்படுத்தத் தூண்டுமொரு உந்தலை அளித்திட வேண்டும். அவர்களின் அடுத்த படைப்பின் மீதான தெளிவிற்கு வித்திட வேண்டும். மலையக இலக்கிய பரப்பிற்குள் அந்த நடைமுறை வளர்ந்திருக்கிறதா? அதற்கான வாய்ப்புக்களையும் களங்களையும் நாங்கள் விரிவாக்கம் செய்து கொண்டிருக்கிறோமா?

இதுவல்லாது வேறுவகையில் சிந்தித்தால்...

எமது இலக்கியத்தளத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த நாங்கள் எத்தகைய முயற்சிகளை நடைமுறைப் படுத்தியிருக்கிறோம்? இந்த வினாக்களுக்கான விடைகளை தேடினால் அல்லது அதற்காக இனியேனும் முயற்சித்தால் எமக்கானதாய் தனித்துவத்துடன் மிளிரும் மலையக இலக்கிய பரப்பில் நேர்மறையான நகர்தலை சாத்தியப்படுத்த முடியுமென்றே எனக்குத் தோன்றுகிறது. இத்தகையதொரு புரிதலுடன் ‘அப்பாயி’ எனும் நூலின் சிறுகதைகள் பற்றி ஆராய்ந்தால், இதனைப் பிரதான நான்கு பிரிவுகளுக்கமைவாக தெளிவுப்படுத்தலாம்

**கதைக்களம் கருப்பொருள் மொழி கதைசொல்லும் முறை**

கதைக்களம் எனும் வகையில், இந்நூலின் எல்லா கதைகளுமே மலையக வாழ்வியலையும் அதன் சூழலையுமே சார்ந்து நிற்கின்றன. நிகழ்வெளிகள் மொத்தமும் சமூகவியற் கோலத்தோடும் புவியியல் வளத்தோடும் ஒன்றிணைந்ததாகவே ஆக்கப்பட்டிருக்கிறது. இதற்கமைவாகக் கதைக்களம் அல்லது நிகழ்வெளி பற்றியதான விபரிப்புக்களினூடாக காண்பியல் உருவாக் கங்களை படைத்திட இந்நூலாசிரியர் முயற்சித்திருக்கும் விதத்தினை ‘எங்களின் மேதினம்’ எனும் கதையில் விபரிக்கப்பட்டிருக்கும் பின்வரும் பகுதியினூடாக தெளி யலாம்.

‘...முகத்தையும் உடம்பையும் அடிக்கும் சாரலில் இருந்து காப்பாற்றிக்கொள்ள கொங்காணியாக போட்டிருக்கும் பொலித்தீன் ரெட்டை இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு கொழுந்து மலைக்கு போய் நிரைப்பிடித்தார்கள். மற்ற ஆண்களும் பெண்களுமாக சேர்ந்து கொழுந்து நிரையில் கொழுந்தைப் பறித்தார்கள். மழை நீரால் கொழுந்து சேகரிக்கும் பொலித்தீன்கள் கூடையின் பாரத்தை அதிகப்படுத்தின...’ இத்தகையதான களவிபரிப்புகளை அநேகமாக எல்லா கதைகளிலுமே காணக்கூடியதாய் இருப்பதை இங்கே

சுட்டிக்காட்டுதல் பொருத்தமாக அமைகிறது. அடுத்ததாக இந்தச் சிறுகதைகளின் கருப்பொருள் பற்றி ஆராய்கையில் தனது உளப்பாங்கினையும் கண்ணோட்டத்தினையும் கருத்தியலையும் தாங்கி நிற்க வேண்டும் எனும் வகையில் படைப்பாளர் முயற்சித்திருப்பது புலனாகிறது. மலையக மக்கள் சார் வாழ்வியல் பிரச்சனைகள், சம்பளப்போராட்டம், அரசியலில் மலையகப் பெண்களது பங்களிப்பு போன்றதான சமகாலத்திற்குப் பொருந்திப்போகக் கூடியதான பாடுபொருள்களையே நூலாசிரியர் பயன்படுத்த துணிந்திருக்கிறார். தொடர்ச்சியாக, மொழிப்பிரயோகம் பற்றி நோக்குகையில் வட்டார வழக்கின் இயல்பான பிரயோகத்தை கதைகளினூடே இரசிக்க முடிகிறது. குறிப்பிட்ட சில வட்டார வழக்குகளினூடாக நிகழ்வெளியும் சமூகத்தின் தனித்துவமும் அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றன. அத்துடன் வட்டார வழக்குகள் ஒரு மொழியின் செழுமைக்கும் ஒன்றிணைப்பிற்கும் வலுவூட்டக் கூடியவை எனும் வகையில் தனக்கானதான சமூகவியல் கோலத்தையும் கலாசார மரபுகளையும் தெளிவுபடுத்திப் பதிவு செய்துள்ளமையும் இங்கே நோக்கத்தக்கது. குறிப்பாக ‘அப்பாயி’ எனும் கதையில் ‘என்ன உன்னோடு சேர்த்துக்கொள்ளு மவராசனே…!’ என்ற ஒரு பகுதி அவளின் நினைவாகக் குறிப்பிடப்படுகிறது. இந்த ஒரு சிறிய வரியை ஆதாரமாக்கி அம்மூதாட்டியின் தனிமையுணர்வை அல்லது அவ்வுணர்வில் தொக்கு நிற்கும் அவர்களது அந்நியோன்னிய வாழ்வை என்று பல்வேறு கோணங்களில் சிந்திக்கத் தூண்டியிருப்பது சிறப்பு. அதற்கடுத்ததாய் இந்நூலின் கதைசொல்லும் முறை அல்லது பயன்படுத்தப்படும் மொழிநடை பற்றியதான தேடலின் போதில்தான் எனதெண்ணத்தில் ஒருசில முரண்பாடுகள் தோன்றுவதை தவிர்க்க முடியாமலிருந்தது. கதை சொல்லும் முறையினூடாகவே கதையின் நுகர்வினை அனுபவிப்போர்களாகிய வாசகர்கள் கதையுடன் நேரடியாகத் தொடர்புபடுகிறார்கள். வாசிப்பின் தொடர் பயண உத்வேகத்தை அடைகிறார்கள். நல்ல வாசகர்கள் கதையை வாசிப்போராக மட்டும் தொழிற்படுவதில்லை. குறித்த இலக்கியப்படைப்போடு இடைவினை கொள்பவர்களாயும் இருக்கின்றார்கள். அவ்வாறான இடைவினைத் தொடர்புக்கு மொழிநடை என்று கொள்ளப்படும் கதைசொல்லல் முறையே பாரிய பங்களிப்பைச் செய்கின்றது. ஒரு படைப்பினது காண்பியல் தரிசனத்தை வாசகர்களுக்குக் கடத்த மொழியை மாத்திரமே படைப்பாளர்கள் பயன்படுத்துகிறார்கள் எனும் போது கதை சொல்லல் முறையின் முக்கியத்துவம் எத்தகையதென உணரல் அவர்களது கடமையாகவே உள்ளது. அவ்வகையிலான நோக்கில் இந்நூலை ஆராயும் போது ‘அப்பாயி’ எனும் நூலின் புனைவுமதிப்பானது மனித பிரச்சனைகளுடனும் உறவுகளுடனும் தொடர்புறும் போதிலான நிகழ்வுகளைச் சித்தரிப்பதனூடாக வலுப்பெற்றிருப்பதாகவே காணப்படுகிறது. எனினும் இந்நூலாசிரியர் அதனை வெளிப்படுத்தத் துணிந்த எடுத்துரைப்பு முறையை ஆராயும் பொழுதுதான் அவர் அதனை இன்னுமொரு சுற்று செம்மைப்படுத்தலுக்கு உட்படுத்தியிருக்கலாமோவெனும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. அவ்வாறான செம்மைப் படுத்தல் நடைபெற்றிருக்குமாயின் இதே கதைகள் புதியதொரு பரிணாமத்துடன் வாசகனைச் சென்றடையும் வாய்ப்பை நிச்சயமாய் ஏற்படுத்தியிருக்கும். மேலும் அத்தகையதொரு செயற்பாடு படைப்பாளனை மேலும் வலுவடையச் செய்யவும் உதவியிருக்கும். இவ்விடயங்களை தவிர இந்த நூல் பற்றி பேசுகையில் கொடகே எனும் இலங்கையின் மிகப்பிரபல்யமான பதிப்பகத்தினூடாகவே இந்நூல் வெளியீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இந் நூலைப் படிக்க ஆரம்பிக்கும் வாசகரது மன உணர்வில் இயல்பாகவே ஒரு நம்பிக்கையும் பூரண திருப்தியும் ஏற்பட்டிருக்கும். எனினும் அத்தகைய நம்பிக்கையுடனான வாசகர்களுக்கு இந்நூலில் இடைக்கிடையே பரவலாகக் காணக்கிடைக்கின்ற எழுத்துப்பிழைகளாலும் அதனால் ஏற்படுகின்ற கருத்துப்பிழைகளாலும் வாசிப்பு இடர்பாடுகள் ஏற்படுமிடத்து அங்கே அவர்களது நம்பிக்கை சிதைவடையும் நிலை உருவாகிறது. எனவே இவை போன்ற சிறிய கவனயீனங்களை இனிவரும் காலங்களில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமென்பதையும் இவ்விடத்தில் தாழ்மையுடன் பதிவு செய்யலாமென விரும்புகிறேன். அத்துடன் தற்கால நவீன இலக்கியத்தின் புதிய பரிணாமங்கள் வித்தியாசமான பாய்ச்சலுடன் புதிய சிந்தனைகளை எமக்குள் தோற்றுவிக்க முயற்சிப்பதால் இலக்கியத்தின் போக்கு எம்மையொத்தோருக்கு மிகவும் சாதகமாக அமைந்திருப்பதாகவே எண்ண முடிகிறது. அதாவது சமகால நடைமுறையில் மூன்றாம் உலக நாடுகளின் இலக்கியங்கள் முன்னணிக்கு வந்து, விளிம்புநிலை எழுத்துக்களையும் காலங்காலமாய் ஒடுக்கப்பட்ட எழுத்துக்களையும் இருண்டு போனதாய் ஓரங்கட்டப்பட்ட எழுத்துக்களையும் வெளிக்கொண்டுவரும் புதிய வெளிகளைத் திறந்துவிட்டிருக்கும் நிலையினை வெகுவாக அவதானிக்க முடிகிறது. இந்த சூழ்நிலையைச் சாதகமாக்கி எமது மலையக இலக்கியத்தின் வெளிப்படுத்தல்களையும் தனித்துவத்தையும் நிலைநிறுத்திக்கொள்ள அல்லது உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமெனின் மலையக இலக்கியத்து மூத்த ஆளுமைகள் அடுத்த சந்ததியினருக்கான வழிகாட்டல் பற்றி சிந்தித்தல்…புதிய படைப்பாளர்களின் தகைமைகளை இனங்கான தமது அகவயத்தன்மையினை விடுத்து அவர்களை அணுகுதல்…ஒரு படைப்பாளனை வெறும் புகழ்ச்சியினால் மாத்திரமே அணுகி ஊக்குவிக்கும் பாங்கை இல்லாதொழித்தல்… முதலிய மிகவும் அத்தியாவசியமான சில நடைமுறைகளை கையாள்வதனூடாக நாம் எம்மை வளர்த்துக்கொண்டு உலக இலக்கியங்களுக்கு ஒப்பான இலக்கிய படைப்புகளை உருவாக்கும் தலைமுறையினரை தோற்றுவிக்க இயலும் என்பதையும் இவ்விடத்தில் பதிவு செய்துக்கொள்கிறேன். அத்துடன் புதிதாக இலக்கியவெளிக்குள் பிரவேசித்திருக்கும் படைப்பாளர் நடேசன் துரைராஜ் அவர்கள் மென்மேலும் படைப்புகளைச் சிறந்த முறையில் படைத்து மலையக இலக்கியத்திற்கு வளம் சேர்க்க வேண்டும் எனவும் விரும்புகிறேன்.

**வாசிப்பதனால் மனிதன்**
**பூரணத்துவம் அடைகிறான்**

# இருளின் நிழலில் இருவர்

ஹரிஹரன்

“அந்த இடத்தில் இருந்தது நீ இல்லை என்று நிரூபிக்க முடியுமா? ”

சில நேர மௌனம் அது நெருடலைத் தோற்றுவித்திருந்தது. என்னைச்சூழ இருந்த காக்கி நிறங்களின் கண்கள் எனது இரத்தம் படிந்துக் கிடந்த கிளிசல் ஆடைதனைத் துளைத்துச் சதைகளை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தன. மலைத்துப்போய்ப் பார்த்துக் கொண்டிருந்த அந்த வேட்டை நாய்களுக்கு நான் நான்கு மாதக் கர்ப்பிணி என்பதுவும் எனது கணவன் எனக்கு முன்னால் வீழ்ந்து கிடப்பதுவும் பொருட்டல்லவே...
“என்னடி பேசமாட்டன்குற? ஓன்னலாம் இப்படி விசாரிச்சா சரிப்பட்டு வரமாட்ட.. இந்தா இரு வாரேன்..” முதலில் ஏதோ பிரம்பையோ தடியையோ எடுத்து விளாசப் போகிறார் என எண்ணிக் கொண்டிருந்த எனக்கு நடக்கப் போகும் விபரீதம் தெரியவில்லை. எனது பெயர்.... அதைப் பிறகு சொல்கிறேன் பெயருக்குப் பின்னால் பட்டம் போடுமளவு படிப்பு. காலத்தை ஓட்டத் தகுந்த அளவு சம்பளம். சொந்தத்திற்குள்ளேயே மாப்பிள்ளை. ஊரிலேயே குடித்தனம். எனச் சாதாரணமாகச் சென்று கொண்டிருந்த வாழ்க்கை இப்படித் தலைகீழாய் மாறிப் போகும் என நான் எண்ணியிருக்கவேயில்லை. இன்றைய நாள் புலரத் தொடங்கியபோதே இன்று கட்டாயம் திரையரங்குக்குச் செல்ல வேண்டும் என நச்சரித்துக் கொண்டேயிருந்தேன். காலைத் தேநீர் பிறகு காலை உணவு யாவும் தூறல் மழையின் பின்னணியில் முடித்துப்போக முச்சக்கர வண் டியின் துணையுடன் நாமிருவரும் திரையரங்குக்குள் சென்றிருந்தோம் “ஏய் .. நிறுத்து..! நீங்க ரெண்டு பேரும் பஸ்ஸிலத்தான் போனீங்க.. புரிஞ்சுதா? “
“இல்லை”
“ஆமாம்...”
“சத்தியமா இல்லை...”
“அட ..ஆமாங்குறேன்..” என்றவாறு என் கணவரின் விரல்கள் ஐந்தையும் தொண்ணூறு பாகைக்கு மேல் நோக்கி நகர்த்தவும் “ அம்மா..” எனது கதறல் ஒலியும் காலை இருட்டும் கலவரத்தை உண்டுபண்ணின. “ஆமாம்... பஸ்ஸிலத் தான் போனோம்.. ஆமாம்..” கொஞ்ச நேரத்திற்குள் எல்லாம் மீண்டும் யாரோ சிலர் வந்தார்கள். வெளிறிப் போய் பஞ்சுப் பூத்திருந்த காக்கிநிற மேற்சட்டையில் இருவர் “ஆமாம் சேர்..! இவங்க ரெண்டு பேரும் நம்ம பஸ்ஸிலத் தான் வந்தாங்க...” அவ்வளவும் சொல்லிவிட்டு என் முகத்தைக் கூடப் பார்க்கவில்லை.... சென்றுவிட்டார்கள். “தியேட்டர் வாசல்ல உள்ள நாலு சீ. சீ.டி.வி. கேமரா உன்னோட வீட்டிலிருந்து மெயின் ரோடு வரைக்குமான எட்டு கேமராஇ மொத்தம் பன்னிரண்டு கேமராவ அடிச்சி நொறுக்கியிருக்க...”
“நல்லா திட்டம் போட்டு.. ம்...சொல்லு...” எதைச் சொல்வது........? உண்மையில் நடந்ததையா? இவர்கள் நடந்ததாகச் சொல்வதையா......? நான் யோசித்துக் கொண்டிருக்கையிலேயே என் பின் தலையில் சம்மட்டியொன்று பாய்ந்ததைப் போலிருந்தது. அப்படியே நான் சுருண்டு போகின்றேன். விழியின் ஓரத்திலிருந்து ஒரு துளிக் கண்ணீர் பெரும் பிரயத்தனப்பட்டுக் கன்னம் வழியே தவழ்ந்து வடிந்து என் மடியிலே விழ நான் தரையிலே விழுந்தேன். எங்குப் பார்த்தாலும் ஒரே இருட்டு....கறுப்பைத் தவிர வேறொன்றும் இல்லை. திடீரென ஒரு வெள்ளைக் கயிறு கழுத்தில் விழ நானே அதை இறுக்கினேன். கால்கள் துள்ளின உயிர் ஊசலாடிற்று....பின் தசைகள் தள்ளாடி ஒருவழியாக எனது உயிர் உடலை விட்டுப் பிரிந்தது.
“தம்பி...! ஒனக்கு இருபது இருவத்தஞ்சு வயசுதான் ஆகுது..” ஒன்னைய இப்படி சந்தி சிரிக்கிற நெலமைக்கி கொண்டுவந்துட்டா... பேசாம பொலிஸ் சொல்றத ஒத்துக்கிட்டு தப்பிக்கிற வழியப் பாரு...”
“அவளோட பழைய வாழ்க்கை உனக்குத் தெரியாது....”
“இவ்வளவுயேன்.. நானே.. எத்தனத்தடவ.....ச்சே...நாக்குக் கூசுதுடா..”
“அவள ஒதறிட்டுப் போய்டு.....இல்லைன்னா நீ செய்யாத தப்புக்காகக் கம்பி எண்ண வேண்டி வரும்..” இப்படியாக என் காதுகள் கேட்டுக் கேட்டுச் செத்துப் போய்விட்டன. இறுதியாக ஒரு நிலைக்கு வந்தேன் அவளுக்கு நேரும் கொடுமைகளையெல்லாம் பார்த்தும் உறங்குவது போல் நடிக்க எத்தனை நாளுக்கு முடியும்?அதுதான் ஒரே அடி! கிட்டத்தட்ட அது ஒரு கருணைக் கொலை! ஊர் ஆயிரம் சொல்லட்டும்... அந்தக் கோலத்தில் என்னால் அவளைப் பார்க்க முடியவில்லை.... யாரால் தான் பார்க்க முடியும்? நாங்கள் இருவரும் திரையரங்கினுள் சென்றோம் சில நிமிடங்கள் வரை எந்தப் பிரச்சினையுமில்லை. ஆனால் பின்னால் இருந்து யாரோ ஒருவன் தொந்தரவு செய்வதாய் இவள்தான் சொன்னாள்... திடீரென அவன் இவளின் மேலேயே சாய்ந்துவிட்டான் அவளுக்கு உண்டான ஆவேசம்..! ஆம்.!! அவளின் சிவந்து போனக் கண்கள் கண்டு நானே ஒருக்கணம் பயந்துத்தான் போனேன்..அவள் திரும்பி அவன் தலையைத் தள்ளினாள்.. அவ்வளவுதான்..!!மொத்தத் திரையரங்கிலும் கூச்சல்.... அவன் ஏற்கெனவே கத்தியால் குத்தப்பட்டிருந்தான். அது குத்தியவனுக்கு குத்தச் சொன்னவனுக்கு எனக்கு இறந்து போன என் மனைவிக்கு மட்டுமே தெரிந்த உண்மை. அந்த உண்மை வெளியில் வரலாம்... வராமலும் போகலாம்... அதனை அதன் போக்கிலேயே நான் விட்டுவிட்டேன் போராடும் தெம்பும் எனக்கில்லை. அவசியமும் வரவில்லை. “இத்தால் இந்நீதிமன்றம் உரைப்பது யாதெனில் கொலைக்குற்றம் சாட்டப்பட் பெண்ணை அவளின் கணவரே கொன்றிருக்கிறார். சாட்சிகள் யாவும் இதற்கு வலு சேர்க்கின்றன. ஆதலால்.......”
நான் நினைத்ததுதான். சாகும்வரை சிறைக்குள்.... நான் கேட்க விரும்புவதெல்லாம் ஒன்றுதான்.... நீதியே..! நீ உண்மையில் கொன்றவனை எனக்குக் காட்டிவிடு...! அதை மட்டும் செய்..! நான் எனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை மனதார ஏற்றுக் கொள்கிறேன்.. கண்களை இறுக மூடிப் பிரார்த்தித்துவிட்டுத் திறந்தேன். எதிரில் ஒன்றுமேயில்லைசூனியத்தனமாகக் கடும் இருட்டு மட்டும் நிலவியது. அந்த இருள் பிரகாசம் கூடிக் கொண்டே போனது கடைசிவரை குறையாமல் கூடிக் கொண்டேயிருந்தது.



## எழுத்தின் அனுபவங்கள்

### நந்தினி சேவியர்

## வேட்டை சிறுகதை 5

*1969.* ஈழநாடு பத்திரிகையின் *10* ம் ஆண்டு இலக்கியப் போட்டிகள் சம்பந்தமான விளம்பரம் அந்தப் பத்திரிகையில் பிரசுரமாகி இருந்தது. அதில் கலந்து கொள்ள நான் ஆர்வமாக இருந்தேன். எனக்குத் தெரிந்த வேட்டைக்காரர் ஒருவர் இருந்தார். அவரிடம் சில வேட்டைநாய்கள் இருந்ததுவும் எனக்குத் தெரியும். அவரிடம் மச்சான் என்றொரு வேட்டையில் சுவடெடுக்கும் நாயொன்று இருந்தது. அவரது அந்த நாய் ஒரு முறை வேட்டைக்குப் போன இடத்தில் பாம்பு கடித்து இறந்துவிட்டது. அந்தச் சம்பவத்தை அவர் மிகுந்த சோகத்தோடு எனக்கு விபரித்திருந்தார். அவரைத் தம்பராகவும், மச்சான் நாயை வெள்ளையனாகவும் வைத்து ஈழநாடு சிறுகதைப் போட்டிக்கு வேட்டை எனும் பெயரில் கதை எழுதி அனுப்பினேன். ஈழத்தின் பிரபலமான. எழுத்தாளர்கள் நடுவர்களாக கடமையாற்றிய அந்தப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்ற *20* பது கதைகளில் ஒன்றாக வேட்டை, தேர்வு பெற்றிருந்தது.

செங்கை ஆழியானின் கங்கு மட்டை செம்பியன் செல்வனின் பூவும் கனியும் ஆகிய கதைகள் முதல் பரிசு பெற்றிருந்தன. மற்றப் பரிசுகள் யாருக்குக் கிடைத்தன என்பது நினைவில் இல்லை. *71* ஆம் ஆண்டு போட்டிக் கதைகள் சிலவற்றை கங்குமட்டை என்ற பெயரில் ஈழநாடு நூலாக வெளியிட்டிருந்தது. ஆறுதல் பரிசு பெற்ற சில பெரிய எழுத்தாளர்களின் சிறு கதைகள் அத் தொகுப்பில் சேர்க்கப்பட்டிருந்தது. வேட்டை சேர்க்கப்படவில்லை. நான் அப்போது இலக்கிய உலகில் அறிமுகம் இல்லாதவன். கதைக்குச் சன்மானம் எதுவும் கிடைக்கவில்லை. பரிசு பெற்றவர்களுக்கு வைக்கப்பட்ட தேனீர் விருந்துபசாரத்திற்கும் நான் அழைக்கப்படவில்லை. ஆயினும் நான் மகிழ்வோடு இருந்தேன். ஈழநாடு ஆசிரியர் திரு ஹரன் அவர்கள் நான் ஆறுதல் பரிசு பெற்றமையை அறிவிக்கும் கடிதத்தைத் தன் கைபட எழுதியிருந்தார். அக் கடிதம் பலகாலம் என்னிடமிருந்தது. அதைவிட மகிழ்ச்சி அப்போட்டியில் பரிசு பெற்ற கதை களைப் பற்றி இப்போது பேசுபவர்கள் இல்லை என்ற போதும் ஆறுதல் பரிசு பெற்ற எனது “வேட்டை ” பற்றி பாடசாலை மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் இ.முருகையன் எழுதிய கட்டுரை ஒன்று இதற்கு முந்தைய *10* ம் ஆண்டு பாடத்திட்டத்தில் இடம் பெற்றிருந்தது. வேறு என்ன வேண்டும்..?


## மேகங்கள் நாவல்

ஈழநாடு பரிசு பெற்ற எனது நாவல் பற்றி எழுத நினைக்கிறேன். அந்த நாவலை பேச்சுவழக்கில் எழுதினேன் என் பதை ஏலவே குறிப்பிட்டேன். அதனை எழுத நான் பேப்பர் இல்லாமல் கஸ்டப்பட்டேன். எங்களூரின் இடதுசாரி கிராம சபை உறுப்பினர் ஒருவரின் வீடு தீப்பிடித்து எரிந்து விட்டது. அவர் ஒரு தீவிரவாசகர். சரஸ்வதி, தாமரை போன்ற இதழ்கள் அவரிடம் இருந்தது. அவர் சோவியத் சார்பா னவர். சோவியத் நட்புறவுக் கழக கடிதத் தலைப்புகளும்,ஒரு பக்கம் அச்சடிக்கப்பட்ட சிவப்புப் பிரசுரங்களும் அவர் வீட்டில் இருந்தன. எரியாமல் காப்பாற்றப்பட்ட அச்சுப்பிரதிகள் தவிர்ந்த அரைகுறையான பிரதிகள் குப்பையாக ஓரிடத்தில் குவிக்கப்பட்டிருந்தன. அந்தக் குவியலில் நான் கிளறிப் பெற்றவைகள் பல. தாமரை இதழ்கள் அதிலும் குறிப்பாக டானியல் எழுதிய கொடும் பாவி, தண்ணீர் கதைகள் வந்த தாமரையின் கீழ்ப்பக்கம் எரிந்த இதழ்களை நான் எடுத்துக்கொண்டேன். பலநாட்கள் கருகிப்போன அப்படியான பொக்கிசங்கள் என்னிடமிருந் தன. அப்படி நான் தேடியதில் கிடைத்த எரிந்த கடிதத்த லைப்புகள், துண்டுப்பிரசுரங்களின் பின்பக்கத்தில் நான் மேகங்களை எழுதத் தொடங்கினேன். *50* அத்தியாயங்கள் எழுதி முடித்துவிட்டேன். நாவல் முற்றுப்பெறவில்லை. போட்டி பற்றிய விளம்பரம் வந்துவிட்டது. முடிவுதிகதி
*31 -12- 1968.* நாவல் போட்டியில் கலந்து கொள்ள மனதாய் இருந்தேன். எனது நண்பர்கள் எனக்கு உதவ முன் வந்தார்கள். எனது நாவலை மூன்றுபேர் பகுதி பகுதியாக பிரதி பண்ணத் தொடங்கினார்கள். தட்டச்சுத்தாள் *500* கொண்ட பொதி ஐந்துரூபா. அதையும் அந்த நண்பர்களே வாங்க உதவினார்கள் நவம், காசிநாதர் யோகராசா எனும் சைவம், சைவத்தின் உறவுக்காரப் பெண் ஆகியோரைநன்றியோடு இத்தருணத்தில் நினைவு கூருகிறேன். அவர்களே *50* அத்தியாயங்களைப் பிரதிபண்ணினார்கள். இறுதி அத்தியாயங்களை நான் எழுதி முடித்தேன்.மேற்படி நண்பர்கள் இருவரோடு, நானும் ஈழநாடு காரியாலயம் சென்று அந்த நாவலை ஒப்படைத்தோம். *31-12-68* போட்டி முடிவு இறுதிநாளில். மற்றைய போட்டிகளின் முடிவு வெளிவந்த சிலமாதங்கள் சென்ற பின்னரே நாவல் போட்டி முடிவு வந்தது. முடிவுகளில் இரண்டாம் பரிசை பெற்ற வற்றில் ஒன்றாக “மேகங்கள்” நாவல் அறிவிக்கப்பட்டிருந்தது.

இன்னும் வரும்........

**வாசிப்பதனால் மனிதன்**
**பூரணத்துவம் அடைகிறான்**


# எம்மவரை வாசிப்போம் வாருங்கள்





ஆசிரியர்:
மலாக்கா முத்துக்கிருஷ்ணன்
காலம்: 2005
வெளியீடு: கமுனிங்ஸ் ஆட்ஸ் கிரியேக்ஷன்
பக்கம்: 214
வகை : நாவல்
பதிப்பாசிரியர்:
ஈப்போ அரவிந்தன்




ஆசிரியர்: மலரன்னை
காலம்: 2019 மார்கழி
வெளியீடு : ஜீவநதி
பக்கம் : 78
வகை: நாவல்
விலை : 300ரூபா





ஆசிரியர்: வ.ந. கிரிதரன்
காலம்: 2019 வைகாசி
வெளியீடு : மகுடம்
பக்கம் : 58
வகை: நாவல்
விலை : 300ரூபா




ஆசிரியர்:
க.சிவசுப்பிரமணியன்
காலம்: 2012 கார்த்திகை
வெளியீடு : ஆசிரியர்
பக்கம் : 78
வகை: நாவல்




ஆசிரியர்: தீபதிலகை
காலம்: 2018 வைகாசி
வெளியீடு : தழல் பதிப்பகம்
பக்கம் : 265
வகை: சரித்திர நாவல்
விலை : £20




ஆசிரியர்: சிவ. ஆரூரன்
காலம்: 2019 மார்கழி
வெளியீடு : ஜீவநதி
பக்கம் : 230
வகை: நாவல்
விலை : 600ரூபா

# LUXMI EDUCATION CENTRE



# ADMISSIONS OPEN

UNLOCK YOUR POTENTIAL

## COURSES

11+,

YEAR 2, YEAR 3, YEAR 4,

YEAR 5, YEAR 6,

YEAR 7, YEAR 8, YEAR 9,

YEAR 10, YEAR 11,

YEAR 12 AND YEAR 13

## WHY CHOOSE US?

- Qualified and Experienced teachers
- 20+ Years Experience
- Covid Friendly Classes
- Leading Online lessons
- Offering:
    - Maths
    - Science
    - English
    - Physics
    - Chemistry
    - Biology

## REACH US AT:

Email: info@leconline.co.uk
Tel: 0208 573 0368
Mob: 07852 810285
Website: www.leconline.co.uk
101A Blyth Road, Hayes, Middlesex, UB3 1DB

OFFERING
ONLINE CLASSES
ENROL NOW!